# இஸ்லாம்

## தரம் 8

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2016
இரண்டாம் பதிப்பு - 2017
மூன்றாம் பதிப்பு - 2018
நான்காம் பதிப்பு - 2019

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

ISBN 978-955-25-0122-7

*இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,*
*இல.2/60, சுற்றுவட்டவீதி, திவுலபிடிய, சரஸ்வதி பிரசுராலயத்தில்*
*அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.*

# தேசிய கீதம்

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

ஆதலால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வரையும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யாவர்க்கு மதிப்பான செல்வமன்றோ.

ஆனந்த சகோதரன்
கவிதையின் பொன்பு.



"புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்"

**கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி**

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழில்நுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழில்நுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சிறப்பாகப் பயன்படுத்துவதும் அதனூடாகத் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் செலவிலும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டுக்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரச உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.

அகில விராஜ் காரியவசம்
கல்வி அமைச்சர்

## முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமானதாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

| | |
|---|---|
| **கண்காணிப்பும் மேற்பார்வையும்** | டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க,<br>கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **வழிகாட்டல்** | டபிள்யூ.ஏ. நிர்மலா பியசீலி,<br>ஆணையாளர் (அபிவிருத்தி),<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **இணைப்பாக்கம்** | அஷ்ஷைக் எம். ரீ. அப்துர் ரஹ்மான்,<br>உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

**எழுத்தாளர் குழு**

| | |
|---|---|
| அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி | ஆசிரிய ஆலோசகர்,<br>வலயக்கல்விப் பணிமனை, மினுவங்கொடை. |
| மௌலவி யூ.எல்.ஏ. அமீர் | விரிவுரையாளர்,<br>அரபு, இஸ்லாமிய நாகரிகப் பிரிவு,<br>கொழும்பு பல்கலைக்கழகம். |
| ஜனாப் எம்.எச்.எம். நாளிர் | வளவாளர் (ஓய்வுநிலை),<br>தேசிய கல்வி நிறுவகம், மஹரகம. |
| மௌலவி எம்.எல்.எம்.யூஸுப் | அதிபர்,<br>ரீ.பீ.ஜாயா ஸாஹிராக் கல்லூரி, கொழும்பு 02. |
| அஷ்ஷெய்க் எம்.ஆர். ஹிஷாம் மொஹமட் | சிரேஷ்ட ஆசிரியர்,<br>அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய. |
| அஷ்ஷெய்க் எம்.எம். பஸ்லுர் ரஹ்மான் | சிரேஷ்ட ஆசிரியர்,<br>பாபுஸ் ஸலாம் ம.வி, நாம்புலுவ, பஸ்யால. |
| ஜனாப் எம்.எப்.எம். நஸ்ரி | அதிபர்,<br>அல் ஹம்ரா மகா வித்தியாலயம், தர்காநகர். |
| மௌலவியா எம்.ஐ.எஸ். ஸுஹைரா | ஆசிரியை,<br>ஹைறியா முஸ்லிம் மகளிர் கல்லூரி,<br>கொழும்பு 09. |
| ஜனாப் எஸ்.ஏ.ஸீ.எம். கராமத் | அதிபர் (ஓய்வு),<br>எட்மன்டன் வீட்டுத் திட்டம். கொழும்பு 06. |

## பதிப்பாசிரியர் குழு

| | |
|---|---|
| அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் | பிரதிப் பணிப்பாளர்,<br>நளீமியா இஸ்லாமியக் கலாபீடம், பேருவளை.<br>பிரதித் தலைவர்,<br>அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா. |
| அஷ்ஷெய்க் எம்.எஸ். அப்துல் பாரி | முதுநிலை விரிவுரையாளர்,<br>அரபு, இஸ்லாமிய நாகரிகப் பிரிவு,<br>பேராதனை பல்கலைக்கழகம். |
| மௌலவி எம்.ஐ.எம். நவ்பர்தீன் | உதவிக் கல்விப் பணிப்பாளர்,<br>முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவு.<br>கல்வி அமைச்சு. |
| அஷ்ஷெய்க் ஜே.எம். ஐஸார் | விரிவுரையாளர்,<br>சமயப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம. |
| அஷ்ஷெய்க் எம். ரீ. அப்துர் ரஹ்மான் | உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

## பதிப்பாசிரியர் (மொழி)

| | |
|---|---|
| அஷ்ஷெய்க் எம்.ஏ. ஜெம்ஸீத் | ஆசிரியர்,<br>அல் ஹிதாயா மகா வித்தியாலயம், கொழும்பு 10. |

## சரவை பார்த்தல்

| | |
|---|---|
| ரிம்ஸா முஹம்மத் | பிரதம ஆசிரியர்,<br>பூங்காவனம் சஞ்சிகை, கல்கிசை. |

## இறுதி மதிப்பீடு

| | |
|---|---|
| மௌலவி எம்.என்.எம். இஜ்லான் | பணிப்பாளர்<br>பாதிபிய்யா அரபுக் கல்லூரி, கஹட்டோவிட்ட,<br>பிரதம கதீப் - கொழும்பு பெரிய பள்ளிவாசல். |
| மௌலவி எம்.ரீ. இக்பால் | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்விக் காரியாலயம், கொழும்பு 02. |
| அஷ்ஷெய்க் எம்.எல்.எம். மாஹிர் | சிரேஷ்ட ஆசிரியர்<br>அல் பத்ரியா ம.வி., கஹட்டோவிட்ட. |

## கணினி வடிவமைப்பு

| | |
|---|---|
| எச்.எப். ரிஸ்னா | கணினி வடிவமைப்பாளர்,<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

## தளக்கோளம், படங்கள், அட்டை வடிவமைப்பு

| | |
|---|---|
| ஜனாப். எம்.டபிள்யூ.ஏ. அஸார் | கணினி வடிவமைப்பாளர்,<br>மீள்பார்வை ஊடக மையம், கொழும்பு 09. |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அல்லாஹ் அன்புக்குரியவன் | 1 |
| 2. | இறுதி வேதம் அல்குர்ஆனின் சிறப்புகள் | 8 |
| 3. | நபிமார்களும் ரஸூல்மார்களும் | 12 |
| 4. | தொழுகையின் பயன்கள் | 16 |
| 5. | தொழுகையின் ஓதல்கள் | 21 |
| 6. | தொழுகையின் வகைகள் | 27 |
| 7. | ஸஜதாக்கள் | 31 |
| 8. | ரமழானில் கடைப்பிடிக்க வேண்டியவை | 35 |
| 9. | ஸக்காத், ஸதகா அறிமுகம் | 41 |
| 10. | துஆக் கேட்போம் | 47 |
| 11. | ஆலிம்களை கண்ணியப்படுத்துவோம் | 51 |
| 12. | நற்குணம் பேணுவோம் துர்க்குணம் தவிர்ப்போம் | 55 |
| 13. | சிறியோருக்கு அன்பு காட்டுவோம் | 60 |
| 14. | பிறருக்கு உதவுவோம் | 64 |
| 15. | பாவங்களிலிருந்து விலகி நிற்போம் | 68 |
| 16. | நம்பிக்கை நாணயம் பேணுவோம் | 72 |
| 17. | பிரயாண ஒழுங்குகள் | 75 |
| 18. | அல்குர்ஆன் ஓதுவதன் சிறப்புகள் | 81 |
| 19. | ஸூரா அல் மாஊன் | 85 |
| 20. | ஹதீஸின் வகைகள் (குத்ஸீ, நபவி) | 89 |
| 21. | ஹதீஸின் பிரிவுகள் | 93 |
| 22. | மவ்ழூஆத்களின் தோற்றமும் விளைவுகளும் | 96 |
| 23. | நுபுவ்வத்தும் மிஃராஜும் | 100 |
| 24. | முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தஃவாவும் சவால்களும் | 105 |
| 25. | உம்மஹாத்துல் முஃமினீன் | 110 |
| 26. | ஸஹாபாக்கள் | 114 |
| 27. | இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் | 118 |
| 28. | அஜ்னபி, மஹ்ரமி வரையறைகள் | 121 |
| 29. | சமூகப் பணி செய்வோம் | 124 |
| 30. | பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம் | 129 |

# முக்கிய குறிப்பு

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுப் பதங்களைப் பிழையின்றி உச்சரித்து வாசிக்கும் பொருட்டு ஒவ்வொரு பாட இறுதியிலும் அப்பாடத்தில் இடம்பெறும் முக்கிய அரபுச் சொற்கள் அரபு மொழியிலேயே தரப்பட்டுள்ளன.

எனவே ஆசிரியரின் உதவியோடு சரியான அரபு உச்சரிப்புடன் அவற்றை வாசிக்க முயற்சிக்கவும்.

எழுத்தாளர் குழு




# அல்லாஹ் அன்புக்குரியவன்

தவ்ஹீத், ரிஸாலத், மஆத் என்ற அடிப்படை இஸ்லாமிய நம்பிக்கைகளுள் தவ்ஹீத் முதன்மையானதாகும். ''அல்லாஹ் தனித்தவன்; இணை துணையற்றவன். அவனே அனைத்துக்கும் '**இலாஹ்**' ஆகவும் '**ரப்**' ஆகவும் இருக்கின்றான். அனைத்தும் அவனில் தங்கியிருக்கின்றன. ஆனால் அவனோ எந்த ஒன்றிலும் தங்கி வாழ்பவன் அல்லன்'' என்ற ஓரிறை நம்பிக்கையும் அந்த நம்பிக்கைக்கு ஏற்ப வாழ்வதுமே தவ்ஹீத் ஆகும். தவ்ஹீதுக்கு முரணான அனைத்து நம்பிக்கைகளும் செயற்பாடுகளும் ஷிர்க் (இணைவைப்பு) என்று அழைக்கப்படுகிறது. இது அல்லாஹ் மன்னிக்காத பெரும் பாவமாகும்.

அல்லாஹ் மாத்திரமே உதவி தேடத் தகுதியானவன் என நம்பி அவனிடம் எப்போதும் கையேந்தி நிற்றலே ஏகத்துவ நம்பிக்கையின் உண்மையான வெளிப்பாடாகும். இது அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதற்கு ஒப்பான ஒரு செயலாகும். அல்லாஹ் இதனை ஒவ்வொரு அடியானிடமிருந்தும் முழுமையாக எதிர்பார்க்கின்றான். ஆகவேதான் அல்லாஹ், தொழுகையில் ஸூரதுல் பாதிஹா ஓதுவதைக் கடமையாக்கி அதன் மூலம் வணங்குதல், உதவி தேடுதல் என்ற இரு விடயங்களையும் ஒன்றாக இணைத்து **''உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம்''** என்ற உறுதிப் பிரமாணத்தை அடியார்கள் வாயிலாக ஒரு நாளைக்கு 17 தடவைகள் சொல்ல வைக்கின்றான்.

அல்லாஹ் அல் குர்ஆனில் ஈமான் கொண்டவர்களைப் பார்த்து அவனிடமே உதவி தேடுமாறு கட்டளை இடுகின்றான்.

***''விசுவாசம் கொண்டவர்களே பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் நீங்கள் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்.'' (2 : 153 )***

***“பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக இது உள்ளச்சம் உடையவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கு அது மிகவும் பாரமானதாகவே இருக்கும்.” (2 : 45)***

*அல்லாஹ்விடமே உதவி தேட வேண்டும் என்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் வலியுறுத்தியுள்ளார்கள்.*

*“பலமான முஃமின், பலவீனமான முஃமினைவிட அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவன். எல்லாவற்றிலும் நன்மை இருக்கிறது. உங்களுக்குப் பயனளிக்கும் விடயங்களில் ஆர்வம் காட்டுங்கள். அல்லாஹ்விடமே உதவி தேடுங்கள். இயலாமை உடையவர்களாக இருக்காதீர்கள்.” (முஸ்லிம்)*

### ஏன் அல்லாஹ்விடமே உதவி தேட வேண்டும்?




*அல்லாஹ் அன்புக்குரியவன். அவனே உதவி தேடத் தகுதியானவன். தாய், தன் குழந்தை மீது அன்பைப் பொழிகிறாள். எனவே தான் குழந்தை எப்போதும் தாயின் உதவியை நாடி நிற்கிறது. அன்பில்லாதவர்களிடம் உதவியை எதிர்பார்க்கின்றபோது அவர்கள் பிரதி உபகாரம் எதிர்பார்க்கலாம். அல்லது தாம் செய்கின்ற உதவியின் மூலம் மேலாதிக்கம் செய்யலாம். அல்லது சமூகத்தில் பிரபல்யமாவதை எதிர்பார்க்கலாம். ஆனால், அன்புள்ளம் படைத்தவர் இவற்றுக்கு அப்பால், தான் உதவி செய்கிறவரின் நலனை மாத்திரமே எதிர்பார்த்து நிற்பார்.*

*நாம் உதவி தேடுவதற்கு அல்லாஹ்வே முழுமையான தகுதியுடையவன் ஆவான். ஏனெனில், அவன் அளவிலா அன்பும் கருணையும் உடையவன். அவனது அன்புக்கும் கருணைக்கும் நிகராக அன்பு செலுத்தும் ஒருவரை எங்குமே காண முடியாது.*

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். “அல்லாஹ் தன் அன்பை நூறு பங்குகளாகப் பிரித்து 99 பங்குகளைத் தன்னிடம் வைத்துக் கொண்டான். ஒரு பங்கினையே புவிக்கு இறக்கினான். படைப்பினங்கள் தமக்கிடையில் பரிமாறிக் கொள்ளும் அன்பு அந்த ஒரு அன்பின் வெளிப்பாடாகும். அதில் ஒன்றுதான் தாய்க் குதிரை தன் குட்டியின் உடலில் படாமல் காலை உயர்த்திக் கொள்வதாகும்.” (புஹாரி, முஸ்லிம்)*

*மற்றும் ஓர் அறிவிப்பில் எஞ்சிய அன்பின் 99 பகுதிகளையும் அல்லாஹ் மறுமையில் தன் அடியார்கள் மீது வெளிப்படுத்துவான் என இடம் பெற்றுள்ளது.*



உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சில அடிமைகள் கொண்டு வரப்பட்டனர். அவர்களில் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்த பெண்ணொருத்தி ஒரு குழந்தையைக் கண்டதும் அதனைத் தூக்கித் தன் மார்போடு அணைத்துப் பாலூட்டினாள். அதனைக் கண்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''இப்பெண் தன் பிள்ளையை நெருப்பில் தூக்கி எறிவாளா?'' என்று எம்மிடம் வினவினார். அதற்கு நாம், ''ஒருபோதும் அவள் அவ்வாறு செய்ய மாட்டாள்'' என்றோம். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''இத்தாய் தன் பிள்ளை மீது கொண்டிருக்கும் அன்பை விடவும் அல்லாஹ் தன் அடியார்களுடன் அன்புடையவனாக இருக்கிறான்'' என்றார்கள். (புஹாரி, முஸ்லிம்)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக புஹாரியில் வந்துள்ள மற்றுமொரு ரிவாயத்தில் ''அல்லாஹ் படைப்பினங்கள் அனைத்தையும் படைத்தபின் தன் புத்தகத்தில் ''எனது அருள் எனது கோபத்தை மிகைத்து விட்டது என்று எழுதினான்'' எனக் குறிப்பிடப்படுகிறது.

மேற்கூறப்பட்ட ஹதீஸ்கள் அல்லாஹ்வின் அன்பை விளக்குவதைப் போன்று அல்லாஹ்வின் திருநாமங்களும் அவன் எமக்களித்துள்ள அருட்கொடைகளும் அவனது அன்புக்குச் சான்றுகளாய்த் திகழ்கின்றன.

அல்லாஹ்வின் அன்பை வெளிப்படுத்தும் திருநாமங்களுள் சில வருமாறு:

| | |
|---|---|
| الرَّحْمَنُ | அளவற்ற அருளாளன் |
| الرَّحِيْمُ | நிகரற்ற அன்புடையவன் |
| الرَّؤُوْفُ | மிகவும் இரக்கமுடையவன் |
| الْوَدُودُ | மிகவும் நேசம் கொள்பவன் |
| الْغَفَّارُ | மிகவும் மன்னிப்பவன் |
| التَّوَّابُ | மிகவும் மன்னிப்பை ஏற்பவன் |

மேலே தரப்பட்டுள்ள அல்லாஹ்வின் திருநாமங்கள் அல் குர்ஆனில் தனிச் சொற்களாகவும் சொற்றொடர்களாகவும் பல தடவைகள் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றன.

ஆல்குர்ஆனில் الرَّحْمٰنُ எனும் தனிச் சொல் 169 தடவைகளும் غَفُوْرٌ رَحِيْمٌ என்று 72 தடவைகளும் التَّوَّابُ الرَّحِيْمُ என்று 8 தடவைகளும் رَؤُوْفٌ رَحِيْمٌ என்று 8 தடவைகளும் இடம்பெற்றுள்ளன.

அல்லாஹ் இத்திருநாமங்களை அல்குர்ஆனில் இவ்வாறு திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் தனது அளவிலா அன்பையே வலியுறுத்துகிறான்.

## அல்லாஹ்வின் அன்புக்குச் சான்றுகளாய்த் திகழும் அவனது அருட்கொடைகள்.

அல்லாஹ் தன் அடியார்கள் மீது புரிந்திருக்கும் அருட்கொடைகள் எண்ணிலடங்காதவை. இது பற்றி அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

***''நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளை எண்ணிப் பார்ப்பீர்களாயின் அதை உங்களால் கணக்கிடவே முடியாது.''*** *(14 : 34), (16 : 18)*

## அல்லாஹ்வின் அருட்கொடைகள் என்றால் என்ன?





உயிருள்ள ஒவ்வொரு படைப்பும் தன் தாயின் வயிற்றில் கருவானது முதல் உலகில் பிறந்து வாழ்ந்து மரணிக்கும் வரை அனுபவிக்கும் அனைத்து வளங்களும் சுவாசிக்கும் காற்று, பருகும் நீர், உணவுக்கும் உடைக்கும் அடிப்படையாய் திகழும் மூலவளங்கள் முதல் எமது ஒவ்வோர் உறுப்புக்களும் அல்லாஹ்வின் அருட்கொடைகளே. மேலும் மண்ணில் புதைந்திருக்கும் கனியங்கள், விண்ணில் பூத்திருக்கும் நட்சத்திரங்கள், கடலில் நிறைந்திருக்கும் உயிரினங்கள் இவை அனைத்தும் அல்லாஹ்வின் அருட்கொடைகளே. பசு பால் தருவதும், கோழி முட்டை இடுவதும், இரவு - பகல் மாறி மாறி வருவதும், மழை பொழிவதும், தாவரங்கள் முளைத்து வளர்வதும் அல்லாஹ்வின் அருட்கொடைகளே.





அல்லாஹ்வின் அருட்கொடைகள் பற்றி அல் குர்ஆனில் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் அன்புக்கு சாட்சிகளாய்த் திகழும் படைப்புகளை ஆராய்ந்து அல்லாஹ்வின் மீது மாத்திரமே நம்பிக்கை வைத்து அவனிலேயே முழுமையாகத் தங்கி வாழ வேண்டும் என்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

அல்லாஹ் கூறுகிறான். **''(அவ்வாறின்றி) நீங்கள் இளைப்பாறுவதற்கு இரவையும் (பல இடங்களுக்குச் சென்று வாழ்க்கைக்குத் தேவையான) அவனுடைய அருளை நீங்கள் தேடிக் கொள்ளும் பொருட்டு பகலையும் உங்களுக்கு அவன் உற்பத்தி செய்திருப்பதற்கு அவனது கிருபைதான் காரணம். இதற்கு நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவீர்களாக''(28 : 73 )**

**''நயமும் பயமும் தரக்கூடியவாறு மின்னலை அவன் உங்களுக்குக் காண்பிப்பதும் மேகத்திலிருந்து மழையைப் பொழியச் செய்து இறந்த பூமியை செழிக்கச் செய்வதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளனவாகும். அறிவுடைய மக்களுக்கு நிச்சயமாக இதில் (ஒன்றல்ல) பல அத்தாட்சிகள் இருக்கின்றன.'' (30: 24)**





மனிதனின் உலக வாழ்க்கைக்கு அத்தியாவசியமான நீர், வளி போன்றன அல்லாஹ்வின் மிகப் பெரிய அருட்கொடைகள். அவன் அவற்றை மனிதர்களுக்குப் பயனளிக்கும் விதத்தில் இலவசமாக வழங்குகிறான். அல்லாஹ் நாடியிருந்தால் மிகவும் கஷ்டப்பட்டுத் தேடிப் பெற வேண்டிய திரவியமாகத் தண்ணீரை ஆக்கலாம். அல்லது தீமை பயக்கும் உப்பு நீராக மழையைப் பொழிவிக்கலாம். இவை அனைத்தும் அல்லாஹ்வுக்கு மிகவும் இலகுவானது. ஆனாலும், தன் படைப்பினங்கள் மீது அவனுக்கிருக்கும் அன்பின் காரணமாக அவற்றின் தேவைக்கு ஏற்ப தன் அருட்கொடைகளை அருளிக் கொண்டிருக்கின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான். **''நீங்கள் அருந்துகின்ற தண்ணீரைக் கவனித்தீர்களா? மேகத்திலிருந்து அதனை நீங்கள் பொழிய வைக்கின்றீர்களா? அல்லது நாம் பொழிய வைக்கிறோமா? நாம் விரும்பினால் அதனை (நீங்கள் அருந்த முடியாத) உப்பு நீராக ஆக்கியிருப்போம். (இதற்கு) நீங்கள் நன்றி செலுத்த வேண்டாமா?'' (56 : 68-70)**

மேற்கூறப்பட்ட அனைத்தும் அல்லாஹ்வின் அன்புக்கும் ஆற்றலுக்கும் சான்றாய்த் திகழ்கின்றன. எனவே, இத்தகைய அன்பும் ஆற்றலும் நிறைந்த அல்லாஹ் மாத்திரமே

எமது அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றித்தருவதற்கு சக்தி படைத்தவனாவான். ஆகவே, அவன் மீது நம்பிக்கை வைத்து அவனிடமே இரு கரமேந்தி உதவி தேடுவதே அறிவார்ந்த செயலாகும். அல்லாஹ்வும் அதனையே எம்மிடம் எதிர்பார்க்கின்றான்.

அல்லாஹ்விடம் உதவி தேடும்போது இரு விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

### 1. அல்லாஹ்விடம் உதவி தேடும் விடயத்தில் சோர்வடையாதிருத்தல்

அல்லாஹ் அன்புடையவனாக இருப்பது போலவே அவன் அடியார்களின் அன்பையும் எதிர்பார்க்கின்றான். அல்லாஹ்விடம் உறுதியாக நம்பிக்கை வைப்பதும் சோர்வின்றி அவனிடம் கேட்பதுமே அவன் மீதுள்ள அன்பின் வெளிப்பாடுகளாகும். ஆகவே, நாம் அல்லாஹ்விடம் கேட்பதிலும் எமது பாவங்களுக்காக மன்னிப்புக் கோருவதிலும் நம்பிக்கை இழக்கவோ சோர்வடையவோ கூடாது. அல்லாஹ் கூறுகிறான்.

لَا تَقْنَطُوا مِنْ رَحْمَةِ اللهِ

***''...அல்லாஹ்வின் அருளைப் பற்றி நீங்கள் நம்பிக்கை இழந்துவிட வேண்டாம்...'' (39 : 53)***

### 2. ஸபப்களைக் கடைப்பிடித்தல்

இவ்வுலகின் ஒவ்வொரு நிகழ்வும் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள நியதிகளின் அடிப்படையிலேயே நிகழ்கின்றன. உதாரணமாக இரவு - பகல் மாறி மாறி வருவதற்கு பூமி சுற்றுதல் நியதியாகும். நோய் குணமாவதற்கு மருந்துண்ணல் ஒரு நியதியாகும். பரீட்சையில் சித்தியடைவதற்கான நியதி முயற்சியுடன் கற்றலாகும். இவ்வாறான நியதிகளே **ஸபப்** என்று அழைக்கப்படுகின்றன.

நாம் அல்லாஹ்விடம் உதவி தேடுவதோடு பொருத்தமான ஸபப்களையும் கடைப்பிடிக்க வேண்டும் என்றே இஸ்லாமிய ஷரீஅத் வழிகாட்டுகிறது. ஆகவேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''ஒட்டகத்தைக் கட்டி வையுங்கள்; பின் அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டுங்கள்'' என்றார்கள். என்றாலும் அல்லாஹ்வை விட்டுவிட்டு ஸபப்களில் மாத்திரம் முழுமையாக நம்பிக்கை வைப்பது இணை வைத்தலுக்கு ஒப்பானதாகும். காரணம், ஸபப்களுக்கு எவ்வித ஆற்றலோ சக்தியோ கிடையாது. ஆற்றலும் சக்தியும் மிக்கவன் அல்லாஹ் மாத்திரமே. அவனது கட்டளையின் படியே ஸபப்கள் தொழிற்படுகின்றன. எனவே, நாம் அல்லாஹ்வின் மீது மாத்திரமே நம்பிக்கை வைத்து அவனிடமே உதவி தேட வேண்டும்.

**அல்லாஹ்விடம் உதவி தேடுவதால் கிடைக்கும் நன்மைகள்**

1. அல்லாஹ் பொருத்தமான ஸபப்களின் பக்கம் வழிகாட்டுவான்.
2. அல்லாஹ்வின் நெருக்கமும் பொருத்தமும் கிடைக்கின்றன.
3. எமது கௌரவம் பாதுகாக்கப்படுகிறது.

4. எமது வேண்டுதல்களில் உள்ள சாதக, பாதக நிலைகளை அல்லாஹ் எம்மைவிட அறிந்துள்ளமையினால் பாதகமானவற்றிலிருந்து எம்மைப் பாதுகாப்பான்.

5. அல்லாஹ்விடம் கேட்பதற்கும் நன்மைகள் எழுதப்படுகின்றன.

6. அல்லாஹ் தரும்வரை பொறுமையுடன் இருந்தால் அதற்கும் நன்மைகள் எழுதப்படுகின்றன.

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

تَوْحِيْد   رِسَالَة   مَعَاد   إِله   رَبّ   شِرْكٌ   الرَّحْمَنُ   غَفُوْرٌ

رَؤُوْفٌ   التَّوَّابُ   الرَّحِيْمُ   سَبَبْ   الشَرِيْعَةُ

### பயிற்சி

**கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் காணப்படும் கருத்துப் பிழைகளை நீக்கி சரியான கருத்தை வெளிப்படுத்தும் வாக்கியங்களாக அவற்றைத் திருத்தி எழுதுக.**

1. தவ்ஹீதிற்கு முரணான அனைத்தும் ஈமான் என்று அழைக்கப்படும்.
2. அல்லாஹ்விடமும் ஏனையவற்றிடமும் உதவி தேடி கையேந்துதல் தவ்ஹீத் நம்பிக்கையின் உண்மையான வெளிப்பாடாகும்.
3. தாய் தன் பிள்ளையை நேசிக்கும் அளவு அல்லாஹ் அடியார்களை நேசிக்கிறான்.
4. சுவாசிக்கும் காற்று, பருகும் நீர், உணவுக்கும் உடைக்கும் அடிப்படையாகத் திகழும் மூலவளங்கள் ஆகியன இயற்கை வளங்களாகும்.
5. அல்லாஹ்வின் மீது மாத்திரம் நம்பிக்கை வைக்க வேண்டும். ஸபப்களை மாத்திரம் கடைப்பிடிக்கக் கூடாது என்று இஸ்லாம் வழிகாட்டுகிறது.

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இஸ்லாத்தின் மூன்று அடிப்படை நம்பிக்கைகளும் எவை?
2. நாம் ஒரு நாளைக்கு குறைந்தது 17 தடவை அல்லாஹ்வுக்கு வழங்கும் உறுதிப் பிரமாணம் என்ன?
3. அல்லாஹ் அன்புடையவன் என்பதற்கான இரு சான்றுகளைத் தருக.
4. அல்லாஹ்விடம் மாத்திரம் உதவி தேடுவதனால் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக.



# 2

# இறுதி வேதம் அல் குர்ஆனின் சிறப்புகள்

மனிதன் உலகில் அல்லாஹ்வின் பிரதிநிதி (கலீபா) ஆவான். அல்லாஹ் மனிதனுக்கான வழிகாட்டல்களை வேதங்கள், ஸுஹுஃபுகள் என்ற வடிவங்களில் காலத்துக்குக் காலம் வழங்கி வந்துள்ளான். இவ்வழி காட்டல்கள் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபிமார்கள், ரஸூல் மார்கள் மூலமாக ஏனைய மனிதர்களுக்கு எத்திவைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அல்லாஹ்வால் அருளப்பட்ட வழிகாட்டல்களில் இறுதியானதே அல் குர்ஆனாகும்.

அல் குர்ஆன் என்பது அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் மூலம் வஹியாக ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனங்களாகும். அல் குர்ஆனை இறுதி வேதம் என்று விசுவாசிப்பதும் அதன் போதனைகளை வாழ்வில் கடைப்பிடித்து நடப்பதும் பிறருக்கு எத்தி வைப்பதும் முஸ்லிம்கள் அனைவர் மீதும் கடமையாகும்.

### அல் குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கான நியாயங்கள்:

*1. அல்லாஹ்வின் அருள் பூர்த்தியாக்கப்பட்டு விட்டது என்ற இறை செய்தி*

***''இன்று உங்கள் மார்க்கத்தை உங்களுக்காக நான் பூர்த்தியாக்கி விட்டேன். எனது அருள்களையும் பூர்த்தியாக்கி விட்டேன். இஸ்லாத்தை உங்கள் மார்க்கமாக ஏற்றுக் கொண்டேன்.'' (5:3)***

இவ்வசனம் அல்லாஹ்வின் வழிகாட்டல் பரிபூரணமாகி விட்டது என்பதையும் இதன் பிறகு நேரடி வழிகாட்டல் வர மாட்டாது என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

*2. அல் குர்ஆன் இறுதி நபிக்கு அருளப்பட்டுள்ளமை*

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே இறுதி நபி என்பது அல் குர்ஆன், ஸுன்னா மூலம் உறுதிப் படுத்தப்பட்ட உண்மையாகும். எனவே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் இன்னொரு நபி வருவதற்கு எந்த நியாயமும் இல்லை.

*3. அல் குர்ஆனுக்குப் பின் இன்னொரு வேதம் வந்ததற்கான சான்றுகள் எதுவும் இல்லாமை*

நபிமார்கள் வருவதும் வேதங்கள் வழங்கப்படுவதும் வரலாற்றில் அதிசயமாகவே பார்க்கப்பட்டுள்ளன. இது எழுத்து வடிவிலோ, வாய்வழிச் செய்தியாகவோ பாதுகாக்கப்பட்டும் வந்துள்ளன. அல் குர்ஆனுக்குப் பின்னர் இன்னொரு வேதம் அருளப்பட்டமைக்கான எந்த ஒரு தகவலும் அறியக் கிடைக்காமை அல் குர்ஆன் இறுதி வேதம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

*4. அல் குர்ஆனின் தனித்துவமான சிறப்புக்கள்*


முன்னைய வேதங்களில் எந்த ஒன்றும் பெற்றிராத பல தனித்துவமான சிறப்புக்களை அல் குர்ஆன் பெற்றுள்ளது. அச்சிறப்புக்கள் அனைத்தும் அல் குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கான ஆதாரமாக அமைகின்றன.

- முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட வேதம்

முன்னைய வேதங்கள் காலவோட்டத்தில் அவை முழுமையாகவோ அவற்றின் சில பகுதிகளோ அழிந்துள்ளன அல்லது மாற்றப்பட்டுள்ளன. அவற்றைப் பாதுகாப்பதாக அல்லாஹ் வாக்களிக்கவுமில்லை. ஆனால், இறுதி வேதமான அல் குர்ஆனை அல்லாஹ் பாதுகாப்பதாகப் பின்வருமாறு வாக்களித்துள்ளான்.

***''நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம்; நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கிறோம்'' (15 : 9)***





- அனைவருக்கும் பொதுவான வேதம்

முன்னைய வேதங்கள் குறிப்பிட்ட பிரதேசத்துக்கு அல்லது குறிப்பிட்ட இனத்துக்கு என வரையறுக்கப்பட்டிருந்தன. அல் குர்ஆனோ எல்லா இனத்தவர்களுக்கும் எல்லாப் பிரதேசத்த வர்களுக்கும் பொதுவானதாக அருளப் பட்டுள்ளது.

***''இது உலகத்தார் அனைவருக்கும் ஒரு நல்லுபதேசமே அன்றி வேறில்லை'' (81:27)***

- முழுமையான வழிகாட்டல்

மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கு மான முழுமையான வழிகாட்டல்களை அல் குர்ஆன் உள்ளடக்கியுள்ளது.

***''நபியே ஒவ்வொரு விடயத்தையும் தெளிவாக விவரிக்கக்கூடிய இவ்வேதத்தை நாம்தான் உங்களுக்கு இறக்கியிருக்கிறோம்'' (16: 89)***

- அல் குர்ஆன் ஒரு முஃஜிஸா (அற்புதம்)

நபிமாருக்கும் ரஸூல்மாருக்கும் அல்லாஹ் பல்வேறு விதமான முஃஜிஸாத்களை வழங்கினான். அவர்கள் தஃவாவை முன்வைப்பதற்கு இம் முஃஜிஸாத்துக்களையும் பயன்படுத்தினர். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ் பிரதான முஃஜிஸாவாக அல் குர்ஆனையே வழங்கினான். அல் குர்ஆனைப் போன்ற ஒன்றைக் கொண்டு வருமாறு அம்மக்களிடம் அல்லாஹ் சவால்விட்டான்.

***''இன்னும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆகிய நம் அடியாருக்கு நாம் அருளியுள்ள (வேதத்)தில் நீங்கள் சந்தேகம் உடையோராக இருப்பீர்களானால், (அந்த சந்தேகத்தில்) உண்மை உடையோராகவும் இருந்தால் அல்லாஹ்வைத் தவிர உங்கள் உதவியாளர்களை (எல்லாம் ஒன்றாக) அழைத்து (வைத்து)க் கொண்டு இது போன்ற ஓர் அத்தியாயமேனும் கொண்டு வாருங்கள்'' (2: 23)***

- உயிர் வாழும் மொழியில் உள்ளமை

முன்னைய வேதங்கள் அருளப்பட்ட மொழிகள் இன்று அரிதாகி விட்டன. அல் குர்ஆன் அருளப்பட்ட அரபு மொழி அதன் தூய வடிவில் அதிகமான மக்களால் இன்றும் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றது.

- அல் குர்ஆனின் கருத்துக்கள் அறிவுபூர்வமானவை

அல் குர்ஆன் குறிப்பிடும் பல விடயங்கள் இன்றைய நவீன யுகத்தில் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டு வருகின்றன.

## அல் குர்ஆனின் உள்ளடக்கம்

அல் குர்ஆன் மனிதனுக்கு நேர்வழி காட்டும் அருள்மறை என்ற வகையில் சகல அடிப்படை வழிகாட்டல்களையும் அது உள்ளடக்கியுள்ளது.

அல் குர்ஆனின் உள்ளடக்கத்தை ஐந்து முக்கிய தலைப்புக்களாக வகைப்படுத்தி நோக்க முடியும். அவை:

1. மறைவான விடயங்கள் (ஈமான் கொள்ள வேண்டியவை)
2. வணக்க வழிபாடுகள்
3. வாழ்க்கைச் சட்டங்கள்
4. ஒழுக்க விழுமியங்கள்
5. படிப்பினை தரும் வரலாறுகள்

## அல் குர்ஆனின் அமைப்பு

அல் குர்ஆன் 114 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. அவை ஸூறாக்கள் எனப்படுகின்றன. அவ்வாறே அது 6666 வசனங்களைக் கொண்டுள்ளது. அவை ஆயத்துக்கள் எனப்படுகின்றன. மேலும் அது முப்பது ஜுஸ்உகளாகவும் ஏழு மன்ஸில்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

அல் குர்ஆனை இறுதி வேதமாக நாம் பெற்றிருப்பது அல்லாஹ் எம்மீது புரிந்த பேரருளாகும்.

**எனவே, அதனை உணர்ந்து அல் குர்ஆனின்பால் எமக்குள்ள கடமைகளை அல்லாஹ் எதிர்பார்க்கும் விதத்தில் நிறைவேற்றுவோம்.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

خَلِيْفَةٌ صُحُفٌ مُعْجِزَةٌ دَعْوَةٌ جُزْءٌ مَنْزِلٌ آيَةٌ سُوْرَةٌ

### பயிற்சி

1. அல் குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கு மூன்று நியாயங்களைக் கூறுக.
2. அல் குர்ஆனின் விஷேட சிறப்புக்கள் நான்கு தருக.
3. அல் குர்ஆனின் உள்ளடக்கத்தை எத்தனை தலைப்புக்களாக வகுக்கலாம்? அவை எவை?

3

# நபிமார்களும் ரஸூல்மார்களும்



அல்லாஹ்விடமிருந்து வஹியைப் பெற்றோர் நபிமார்கள் ஆவர். அவர்களுள் சிறப்புக்குரியவர்கள் ரஸூல்மார்கள் எனக் கருதப்படுகின்றனர். அண்ணளவாக ஒரு இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களை அல்லாஹ் உலகிற்கு அனுப்பியுள்ளான். அவர்களுள் முன்னூற்றுப் பதின்மூன்று பேர் ரஸூல்மார்களாவர்.

அல் குர்ஆனில் இருபத்தைந்து நபிமார்களின் பெயர்களே குறிப்பிடப்படுகின்றன. அவர்கள் அனைவரும் ரஸூல்மார்களுமாவர். ரஸூல் மார்களுள் நூஹ் அலைஹிஸ்ஸலாம், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், மூஸா அலைஹிஸ்ஸலாம், ஈஸா அலைஹிஸ் ஸலாம், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆகியோர் **உலுல் அஸ்ம்** (திட உறுதி பூண்டவர்கள்) என அழைக்கப்படுகின்றனர்.



அல்லாஹ்வின் வழிகாட்டல்களை ரஸூல் மார்களுள் சிலர் ஸுஹுபுகளாகவும் இன்னும் சிலர் வேதங்களாகவும் பெற்றனர். மூஸா அலை ஹிஸ்ஸலாம் அவர்கள் வேதங்கள், ஸுஹுபுகள் ஆகிய இரண்டையும் பெற்ற ரஸூல் ஆவார். வேதம் வழங்கப்பட்ட ரஸூல்மார்களில் நால்வரின் பெயரை அல் குர்ஆன் குறிப்பிட்டுக் கூறுகின்றது.

| வேதம் வழங்கப்பட்டவர் | வழங்கப்பட்ட வேதம் | மொழி |
|---|---|---|
| மூஸா அலைஹிஸ்ஸலாம் | தௌராத் | அபரானி (ஹீப்ரு) |
| தாவூத் அலைஹிஸ்ஸலாம் | ஸபூர் | யூனானி / கிரேக்கம் |
| ஈஸா அலைஹிஸ்ஸலாம் | இன்ஜீல் | ஸுர்யானி / ஸிரிய |
| முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் | புர்கான் | அரபு |

நபிமார்கள் அனைவரும் மனிதர்களாவர். அவர்களிடம் அன்பு, வாய்மை, நீதி, நேர்மை, தியாகம், தூய்மை, பிறர் நலன்பேணல், அமானிதம் பேணல், நுண்ணறிவு, ஈகை போன்ற உயர்ந்த பண்புகள் பூரணமாகக் காணப்பட்டன. மேலும் மக்கள் அவர்களை நபியென்று இனங்காண்பதற்காக அல்லாஹ் அவர்களுக்கு முஃஜிஸாத்களை (அற்புதங்களை) வழங்கியிருந்தான். அவர்கள் அவற்றைக் கொண்டு தாம் நபியென்பதை நிரூபித்துக் காட்டி அல்லாஹ்வின் மார்க்கத்தின் பால் மக்களை அழைத்தார்கள்.

### சில ரஸூல்மார்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட முஃஜிஸாத்களும்

1. மூஸா அலைஹிஸ்ஸலாம் - கைத்தடி பாம்பாகுதல், கை பிரகாசமாதல்.
2. தாவூத் அலைஹிஸ்ஸலாம் - இரும்பை மிருதுவாக்கல்.
3. ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் - ஜின்கள், காற்று போன்றவற்றை வசப்படுத்தல், ஏனைய உயிரினங்களின் மொழியை விளங்குதல்.
4. ஈஸா அலைஹிஸ்ஸலாம் - மரணித்தவர்களை உயிர்ப்பித்தல், பிறவிக் குருடன், குஷ்டரோகி போன்றவர்களை சுகப்படுத்தல், வீடுகளில் மறைந்துள்ள பொருட்களைக் கூறுதல்.
5. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் - அல் குர்ஆன்

அல்லாஹ் உலகில் தோன்றிய எல்லா சமூகங்களுக்கும் அவர்களை நேர்வழிப்படுத்துவதற்காக நபிமார்களை அனுப்பியுள்ளான். மறுமையில் மனிதர்கள் விசாரிக்கப்படுகின்றபோது ஒவ்வொரு சமூகத்தாரும் தமக்கு அனுப்பப்பட்ட நபியுடனேயே அல்லாஹ்வின் முன்னிலையில் தோன்றுவர். ஒவ்வொரு நபியும் தம் உம்மத்தினர் குறித்து அல்லாஹ்விடம் சாட்சி கூறுபவராக இருப்பார்.

நபிமார்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தை அழகிய முறையில் தாம் அனுப்பப்பட்ட சமூகத்தவர்களுக்கு எத்திவைக்கும்போது கடுமையாக சோதிக்கப்பட்டார்கள்.

சிலர் அவர்களின் போதனைகளை ஏற்றுக் கொண்டனர். வேறு சிலர் எதிர்த்தனர்.

அவர்களை ஊரைவிட்டு விரட்டினர். கொலை செய்ய முயற்சித்தனர். ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம், யஹ்யா அலைஹிஸ்ஸலாம் ஆகிய நபிமார்களை கொலை செய்தனர். நபிமார்கள் தமக்கெதிராக வந்த எல்லா சவால்களையும் பொறுமையுடனும் மன உறுதியுடனும் எதிர் கொண்டார்கள்.

நபிமார்களைப் புறக்கணித்து தம் மனோ இச்சைப்படி வாழ்ந்த பல சமூகங்கள் பல்வேறு விதமான முறையில் அழிக்கப்பட்டுள்ளன. நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சமூகம் வெள்ளத்தைக் கொண்டும், ஹூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஆத் சமூகம் காற்றைக் கொண்டும், ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஸமூத் சமூகம் பேரிடியைக் கொண்டும், லூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களது சமூகம் கல்மாரி பொழிதலைக் கொண்டும் அழிக்கப்பட்டதாக அல் குர்ஆன் குறிப்பிடுகிறது.

உலகிற்கு அனுப்பப்பட்ட எல்லா நபிமார்களும் இஸ்லாம் என்ற அல்லாஹ்வின் மார்க்கத்தைக் கட்டியெழுப்பும் பணியிலேயே ஈடுபட்டார்கள். அதனை ஆரம்பித்து வைத்தவர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களாவார். முடித்து வைத்தவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார். ஆகவேதான் அல்லாஹ் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை **'காத்தமுன் நபிய்யீன்'** நபிமார்களில் இறுதியானவர் என்றும் **'ரஹ்மதுன் லில் ஆலமீன்'** அகிலத்தாருக்கு அருட்கொடை என்றும் குறிப்பிடுகின்றான்.

உலகிற்கு அனுப்பப்பட்ட எல்லா நபிமார்களும் மரணமாயினர். விதிவிலக்காக ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மாத்திரம் விண்ணுலகிற்கு உயர்த்தப்பட்டார். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீண்டும் உலகிற்கு வந்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முழுமைப்படுத்திய தீனை முழு உலகிலும் அமுல்படுத்தி செல்வமும் அமைதியும் நிலவும் ஒரு தேசத்தை உருவாக்குவார்கள் என்பது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

## சில நபிமார்களும் அவர்களது சிறப்புப் பெயர்களும்

| நபியின் பெயர் | சிறப்புப் பெயர் | பொருள் |
|---|---|---|
| ஆதம் அலைஹிஸ்ஸலாம் | அபுல் பஷர் | மனிதர்களின் தந்தை |
| இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் | கலீலுல்லாஹ் | அல்லாஹ்வின் நண்பன் |
| மூஸா அலைஹிஸ்ஸலாம் | கலீமுல்லாஹ் | அல்லாஹ்வுடன் பேசியவர் |
| ஈஸா அலைஹிஸ்ஸலாம் | ரூஹுல்லாஹ் | அல்லாஹ்வின் ரூஹ் |

***அனைத்து நபிமார்களையும் ஏற்றத்தாழ்வின்றி விசுவாசிப்பதும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முழுமையாகப் பின்பற்றுவதும் எமது கடமையாகும்.***

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

أُولُو الْعَزْمِ   أَبُو الْبَشَرِ   كَلِيْمُ اللهِ   رُوْحُ اللهِ   خَاتَمُ النَّبِيِّيْنَ   الْمُعْجِزَاتُ   الصُحُفُ

وَحْيٌ   الرَسُوْلُ   النَبِيُّ   خَلِيْلُ اللهِ   رَحْمَةٌ لِلْعَالَمِيْنَ

### பயிற்சி

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக :**

1. உலுல் அஸ்ம் எனப்படும் நபிமார்கள் யாவர்?
2. நபிமார்களிடம் காணப்படும் உயர்ந்த குணப் பண்புகள் சிலவற்றைக் கூறுக.
3. விண்ணுலகிற்கு உயர்த்தப்பட்ட நபி யார் ?
4. கொலை செய்யப்பட்ட இரு நபிமார்களினதும் பெயர்களைத் தருக.

**ஆ. பொருத்தமான முறையில் இணைக்குக.**

| | |
|---|---|
| நூஹ் அலைஹிஸ்ஸலாம் | ஸுர்யானி மொழி |
| மூஸா அலைஹிஸ்ஸலாம் | அல் குர்ஆன் |
| முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் | கப்பல் |
| ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் | பனூ இஸ்ரவேலர் |
| ஈஸா அலைஹிஸ்ஸலாம் | ஜின்கள் |



# தொழுகையின் பயன்கள்

தொழுகை ஷஹாதாவுக்கு அடுத்தபடியான பிரதான கடமை. தொழுகையை நிலைநாட்டுமாறு அல் குர்ஆன் பல இடங்களில் எமக்குக் கட்டளையிடுகின்றது. இதனை முறையாகவும் அல்லாஹ்வுக்காக என்ற தூய எண்ணத்துடனும் (இக்லாஸ்) நிறைவேற்றுமாறு இஸ்லாம் எங்களைப் பணிக்கின்றது. இவ்வாறு தொழுகையை உரிய முறையில் நிறைவேற்றும் போது நாம் உலகிலும் மறுமையிலும் எண்ணற்ற நன்மைகளையும் பயன்களையும் நிச்சயம் பெற்றுக் கொள்ள முடியும். இப்பயன்களில் சிலதை நாம் இங்கு நோக்குவோம்.

## மறுமைப் பயன்கள்:

### 1. தொழுகை பாவக் கறைகளை நீக்குகின்றது.

நாம் நிறைவேற்றும் தொழுகைகள் எமது சிறு பாவங்களை நீக்கி எம்மைப் பரிசுத்தப்படுத்துகின்றன. தொழுகைக்காக எடுத்து வைக்கும் ஒவ்வோர் எட்டுக்கும் எமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

''ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றுவது உங்கள் வீட்டுக்கு முன்னால் பெருக்கெடுத்தோடும் நதியிலே நீங்கள் தினமும் ஐந்து முறை குளிப்பது போன்றதாகும்.'' (முஸ்லிம்)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இன்னொரு முறை இவ்வாறு குறிப்பிட்டார்கள்: ''ஐவேளைத் தொழுகை, ஒரு ஜுமுஆவிலிருந்து அடுத்த ஜுமுஆ, ஒரு ரமழானிலிருந்து அடுத்த ரமழான் என்பன அவற்றுக்கிடையில் நிகழும் சிறு பாவங்களுக்குக் குற்றப் பரிகாரமாக உள்ளது.'' (ஸஹீஹு முஸ்லிம்)

### 2. தொழுகை பிரகாசம் தருகின்றது.

தொடர்ச்சியாகத் தொழுகையை நிறைவேற்றுபவர் இவ்வுலகிலும் மறுவுலகிலும் பிரகாசத்தைப் பெறுகின்றார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்: ''யார் தொழுகையைப் பேணி நிறைவேற்றுகின்றாரோ அவருக்கு அது ஒளியாகவும் அத்தாட்சியாகவும் மறுமையில் விமோசனமாகவும் மாறிவிடும். யார் அதனை முறையாக நிறைவேற்றவில்லையோ அவருக்கு ஒளியோ, வெற்றியோ கிடைக்காது. அவர் மறுமை நாளில் காரூன், பிர்அவுன், ஹாமான், உபை இப்னு கலப் போன்றோருடன் இருப்பார்''. (அஹ்மத்)

### 3. தொழுகை உயர்ந்த அந்தஸ்தைத் தருகின்றது.

தொழுகையை நிறைவேற்றுபவர் அல்லாஹ்விடத்தில் உயர் அந்தஸ்தைப் பெற்றுக் கொள்கின்றார். மறுமையில் மிகவும் சிறப்புக்குரியவராக இவர் இருப்பார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது தோழர்களுக்கு இவ்வாறு கூறினார்கள்:

''நீங்கள் அதிகம் ஸுஜூத் செய்யுங்கள். நிச்சயம் நீங்கள் ஒரு ஸுஜூத் செய்யும்போது அல்லாஹ் உங்களுக்கு ஓர் அந்தஸ்தை உயர்த்தி விடுகிறான்; ஒரு பாவத்தை மன்னித்து விடுகிறான். (முஸ்லிம்)

### 4. தொழுகை சுவனத்தின் திறவுகோல்.

தொழுகை நாம் சுவனம் செல்வதற்கு மிக மிக அவசியமானது. தொழுகையை முறையாக நிறைவேற்றாதவர் இப்பாக்கியத்தை ஒருபோதும் பெற மாட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ரபீஆ பின் கஃப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்து ''அல்லாஹ்வின் தூதரே சுவனத்தில் நான் உங்களோடு இருக்க வேண்டும் என வேண்டுகின்றேன்'' என்றார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''வேறு ஏதும் வேண்டுமா?'' எனக் கேட்டபோது அந்த ஸஹாபி ''இல்லை. அதுதான் வேண்டும்'' என்றார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''நீர் அதிகம் ஸுஜூத் செய்வதற்கு உம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வீராக'' என்றார்கள். (முஸ்லிம்)

இன்னொரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

***''தொழுகை சுவனத்தின் திறவுகோல்.'' (திர்மிதி)***

''யார் காலையும் மாலையும் பள்ளிவாசலுக்குச் (தொழுகைக்காகச்) சென்று வருகின்றாரோ அப்போதெல்லாம் அவருக்கு அல்லாஹ் சுவனத்தில் உயர்ந்த இடத்தைத் தயார்படுத்தி வைக்கின்றான்.'' (புகாரி, முஸ்லிம்)



5. தொழுபவர்களுக்காக மலக்குமார் பிரார்த்தனை புரிகின்றனர்.

தொழுகையை நிறைவேற்றுபவருக்காக மலக்குமார் நித்தமும் பிரார்த்தனை புரிகின்றனர். ஒரு நீண்ட ஹதீஸின் இறுதியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

''ஒருவர் பள்ளிவாசலில் நுழைந்து தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் மலக்குகள் அவர் மீது ஸலவாத் சொல்கின்றனர். (அதாவது பிரார்த்தனை புரிகின்றனர்). அவர்கள் இவ்வாறு கூறுவர், ''யா அல்லாஹ் இவர் மீது அருள் புரிவாயாக. யா அல்லாஹ் இவரது பாவங்களை மன்னிப்பாயாக!'' (புகாரி, முஸ்லிம்)

6. தொழுகை அளவற்ற நன்மைகளைப் பெற்றுத் தருகின்றது.

தொழுகையை ஒழுங்காகவும் இக்லாஸுடனும் நிறைவேற்றும்போது அளவற்ற நன்மைகளை அல்லாஹ் வழங்குகின்றான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு முறை இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

'' யார் தனது வீட்டிலிருந்து வுழூ செய்த நிலையில் கடமையாக்கப்பட்ட தொழுகை ஒன்றை நிறைவேற்றப் புறப்பட்டுச் செல்கின்றாரோ அவருக்கு இஹ்ராம் அணிந்த ஒரு ஹாஜியின் நன்மை கிடைத்து விடுகின்றது.'' (அபீதாவூத்)

## உலகியற் பயன்கள்:

1. தொழுகை மோசமான, பாவமான விடயங்களை விட்டும் எம்மைத் தடுக்கின்றது.

தொழுகை ஒழுக்கம் மிக்க மனிதர்களை உருவாக்குகின்றது. தொடர்ச்சியாகத் தொழுகையை நிறைவேற்றுபவர் மோசமான செயல்களைச் செய்ய வெட்கப்படுவார். தன்னை அல்லாஹ் நித்தமும் அவதானித்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வைப்

பெறுவார். பாவச் செயல்கள் மூலம் தான் நிறைவேற்றும் தொழுகைகளின் பயன்களை இழந்துவிட அவர் விரும்பமாட்டார்.

இதனைத்தான் அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

***''...நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கி விடுகின்றது..'' (29: 45)***




### 2. தொழுகை ஆரோக்கியம் தருகின்றது.

தொழுகை ஒரு சிறந்த உடற்பயிற்சியாக இருக்கின்றது. தொழுகையின்போது அநேகமான உறுப்புக்கள் இயங்குகின்றன. ஒருவர் சுறுசுறுப்பாகத் தம் கருமங்களை ஆற்றுவதற்கும் தொழுகை பயிற்சியளிக்கின்றது. தொழுகையைத் தொடர்ச்சியாக நிறைவேற்றும் ஒருவர் எப்போதும் தன்னை சுத்தமான நிலையில் வைத்திருக்க வேண்டும். எனவே, உடல் அழுக்குகளிலிருந்து வுழூ, குளிப்பு மூலம் சுத்தம் பெற தொழுகை எம்மைப் பயிற்றுவிக்கின்றது. இது உடல், உள ஆரோக்கியத்துக்கு முக்கியமானதாகும்.

### 3. தொழுகை மன அமைதி தருகின்றது.

மன அழுத்தம், கவலை, விரக்தி போன்றவற்றிலிருந்து தொழுகை எம்மை மீட்டெடுக்கின்றது. எமக்கு மனநிம்மதியையும் அமைதியையும் அது ஏற்படுத்துகின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரச்சினைகள் ஏற்படும்போது, ''பிலாலே தொழுகையைக் கொண்டு எமக்கு அமைதி தாருங்கள்'' எனக் கூறுவார்கள். மேலும் ''எனது கண்குளிர்ச்சி தொழுகையில் தான் உள்ளது'' என்பார்கள். (அஹ்மத், நஸாஈ)

### 4. தொழுகை ஒற்றுமையை ஏற்படுத்துகின்றது.

ஜமாஅத்தாகத் தொழுகையை நிறைவேற்றுவது இஸ்லாத்தில் மிகவும் வலியுறுத்தப்பட்ட விடயமாகும். இதன் மூலம் குறித்த ஊரில் அல்லது தெருவில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் ஐந்து வேளைகள் ஓரிடத்தில் ஒன்றுகூடுகின்றனர். நிற, மொழி, பிரதேச வேறுபாடுகளை மறந்து ஓரணியாக நின்று ஒற்றுமையாகத் தொழுகையை அவர்கள் நிறைவேற்றுகின்றனர். ஜமாஅத் தொழுகையின் மூலம்

தலைமைத்துவக் கட்டுப்பாட்டையும் கற்றுக் கொள்கின்றனர். தொழுகையின் பின்னர் சந்தித்து சுக துக்கங்களை விசாரித்துக் கொள்கின்றனர். இதன் மூலம் சமூக ஒற்றுமையும் ஒத்துழைப்பும் பலம் பெறுகின்றது.

### 5. தொழுகை நேர முகாமைப் பயிற்சியைத் தருகின்றது

அநேகமான தொழுகைகள் நேரம் வரையறுக்கப்பட்டதாக உள்ளன. இவற்றை உரிய நேரத்திலே நிறைவேற்றுவதன் மூலம் நேரத்துக்கு வேலை செய்யும் பயிற்சியை நாம் பெறுகின்றோம். தொழுகை போன்று ஏனைய கருமங்களையும் திட்டமிட்டு அவற்றை உரிய நேரத்துக்குச் செய்து முடிக்க தொழுகை எமக்குப் பயிற்சி அளிக்கின்றது. அத்துடன் அதிகாலையில் எழுந்து சுறுசுறுப்பாக இயங்குவதற்கு தஹஜ்ஜுத், ஸுப்ஹுத் தொழுகைகள் விசேடமாக உதவுகின்றன.

**இவை போன்ற பல்வேறு நன்மைகளைத் தொழுகை நமக்குப் பெற்றுத் தருகின்றது. எனவே, உலகிலும் மறுமையிலும் நாம் ஈடேற்றம் பெற தொழுகையை முறையாக நிறைவேற்றி வருவோமாக.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

إِخْلَاصٌ    شَهَادَةٌ

### பயிற்சி

1. தொழுகையை முறையாக நிறைவேற்றுபவர் உலகில் பெறும் பயன்கள் மூன்றைக் குறிப்பிடுக.
2. தொழுகையை நிலைநாட்டுவதால் மறுமையில் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக.
3. கூட்டாகத் தொழுகையை நிறைவேற்றுவதால் கிடைக்கும் விசேட நன்மைகள் எவை?
4. தொழுகை எவ்வாறு சுவனம் செல்லக் காரணமாகின்றது என்பதை விளக்குக.
5. தொழுகையின் பயன் பற்றிய ஒரு ஹதீஸைத் தேடி அரபியில் எழுதுக.




# தொழுகையின் ஓதல்கள்

தொழுகை என்பது அதற்குரிய நிய்யத்துடன் ஆரம்பித்து குறிப்பிட்ட சில அசைவுகளையும் ஓதல்களையும் உள்ளடக்கி ஸலாத்துடன் நிறைவுபெறும் ஓர் இபாதத் ஆகும். இது ஒவ்வொரு முஸ்லிமும் நிறைவேற்ற வேண்டிய கட்டாயக் கடமையாகும். முஸ்லிமையும் முஸ்லிம் அல்லாதவரையும் வேறுபடுத்தும் பிரதான பிரிகோடாகத் தொழுகையே அமைந்துள்ளது. மறுமையில் அடியானிடம் விசாரிக்கப்படும் முதல் விடயமாகவும் தொழுகையே உள்ளது.

தொழுகையை உரிய முறைப்படி நிறைவேற்றுவதன் மூலம் மாத்திரமே அதன் பயனை அடைந்து கொள்ள முடியும். தொழுகையில் பர்ழ், ஸுன்னத், முப்திலாத் எனப் பல விடயங்கள் உள்ளன. அவற்றைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். பர்ளு என்பது கட்டாயமான செயற்பாடுகள் சிலவற்றையும் ஓதல்கள் சிலவற்றையும் உள்ளடக்கியுள்ளது. நாம் தொழுகையில் கண்டிப்பாக ஓத வேண்டிய பர்ளான ஓதல்களைத் தற்போது நோக்குவோம். இவற்றைச் சரிவர ஓதாதவிடத்து எமது தொழுகைகள் பாத்திலாக (செல்லுபடியற்றதாக) ஆகிவிடும்.

### 1) தொழுகையின் பர்ழான ஓதல்கள்

*1. ஆரம்ப தக்பீர் (தக்பீர் தஹ்ரீம்) கூறுதல்*

اَللّٰهُ أَكْبَرُ - அல்லாஹ் மிகப் பெரியவன்.

*2. ஒவ்வொரு ரக்அத்திலும் ஸூரத்துல் பாத்திஹா ஓதுதல்*

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ. اَلْحَمْدُ للهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

**பொருள்:** ''அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (ஆரம்பிக்கின்றேன்). எல்லாப் புகழும் அகிலத்தாரின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே. அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன். அவன் நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி. உன்னையே

வணங்குகின்றோம்; உன்னிடமே உதவி தேடுகின்றோம். எங்களுக்கு நேரான பாதையைக் காட்டுவாயாக. அப்பாதை நீ அருள் புரிந்தவர்களின் பாதை. அது உனது கோபத்துக்கு உள்ளானவர்களதோ வழிகெட்டவர்களதோ பாதை அல்ல.''

ஜமாஅத்தாகத் தொழும்போது இமாம் ஸூரத்துல் பாத்திஹா ஓதுவதை மஃமூம்கள் மௌனமாக செவிமடுக்க வேண்டும். இமாம் ஓதி முடிந்த பின்னர் மஃமூம்கள் இந்த ஸூறாவை மௌனமாக ஓதிக் கொள்ள வேண்டும்.

*3. இறுதி அத்தஹிய்யாத் ஓதுதல்*

اَلتَّحِيَّاتُ الْمُبَارَكَاتُ الصَّلَوَاتُ الطَّيِّبَاتُ لِلهِ السَّلاَمُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ. السَّلاَمُ عَلَيْنَا وَعَلَى عِبَادِاللهِ الصَّالِحِيْنَ. أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ.

**பொருள்:** ''காணிக்கைகளும் அருள்களும் பிரார்த்தனைகளும் நல்லறங்களும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே உங்கள் மீது சாந்தியும் அல்லாஹ்வின் அருளும் பாக்கியங்களும் உண்டாவதாக. எங்கள் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாவதாக. வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார் என நான் சாட்சியம் கூறுகின்றேன்.''

*4. இறுதி அத்தஹிய்யாத்தைத் தொடர்ந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் ஓதுதல்*

اَللّٰهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ. اَللّٰهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍكَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ.

**பொருள்:** ''இறைவா! இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ ஸலவாத் கூறியது போல் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் ஸலவாத் கூறுவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவன், மகத்துவம் மிக்கவன். இறைவா! இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ அருள் புரிந்தது போல் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் அருள் புரிவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவன், மகத்துவம் மிக்கவன்''

*5. இறுதி ரக்அத்தில் முதலாவது ஸலாம் கூறுதல்*

السَّلاَمُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ

**பொருள்:** ''உங்கள் மீது சாந்தியும் அல்லாஹ்வின் கருணையும் உண்டாவதாக!''

## 2) தொழுகையின் ஸுன்னத்தான ஓதல்கள்

தொழுகையில் பர்ழான ஓதல்கள் இருப்பது போலவே ஸுன்னத்தான ஓதல்களும் உள்ளன. அவற்றை ஓதுவதால் அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் எமது தொழுகையில் ஏற்படும் சிறு தவறுகள், குறைபாடுகள் நீங்கவும்

தொழுகை முழுமை பெறவும் வாய்ப்பாக அமையும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத் தந்த இவ்வாறான ஓதல்களை நாம் இங்கே கற்றுக்கொள்வோம்.

*1. ஆரம்ப தக்பீரின் பின்னர் துஆஉல் இஸ்திப்தாஹ் ஓதுதல்*

وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِيْ فَطَرَ السَّمَاوَاتِ وَالأَرْضَ حَنِيفًا مُسْلِماً وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِيْنَ. إِنَّ صَلاَتِيْ وَنُسُكِيْ وَمَحْيَايَ وَمَمَاتِيْ للهِ رَبِّ الْعَالَمِيْنَ. لاَشَرِيكَ لَهُ وَبِذَلِكَ أُمِرْتُ وَأَنَا مِنَ الْمُسْلِمِيْنَ.

**பொருள்:** ''வானங்களையும் பூமியையும் படைத்தவனை நோக்கி சத்திய இஸ்லாத்தைச் சார்ந்தவனாக எனது முகத்தைத் திருப்பி விட்டேன். நான் இணை வைப்பவர்களில் உள்ளவன் அல்லன். நிச்சயமாக எனது தொழுகையும் எனது வணக்கமும் எனது வாழ்வும் எனது மரணமும் அகிலத்தாரின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே உரியன. அவனுக்கு யாதொரு இணையும் இல்லை. இவ்வாறுதான் நான் ஏவப்பட்டுள்ளேன். நான் கட்டுப்பட்ட முஸ்லிம்களுள் ஒருவனாவேன்.''

மேலதிகமாக பின்வரும் துஆவையும் ஓதிக்கொள்ள முடியும்.

اَللّهُمَّ بَاعِدْ بَيْنِيْ وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ. اَللّهُمَّ نَقِّنِيْ مِنَ الْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ. اَللّهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ.

**பொருள்:** ''கிழக்குக்கும் மேற்குக்கும் இடையில் தூரத்தை ஏற்படுத்தியது போல் யா அல்லாஹ் எனக்கும் எனது பாவங்களுக்கும் இடையில் தூரத்தை ஏற்படுத்திவிடுவாயாக. யா அல்லாஹ்! வெண்ணிற ஆடையிலிருந்து அழுக்கு அகற்றப்படுவது போல் எனது பாவங்களிலிருந்து என்னைத் தூய்மைப்படுத்துவாயாக. யா அல்லாஹ்! எனது பாவங்களை நீரினால், பனியினால், ஆலங்கட்டியினால் கழுவியகற்றி விடுவாயாக!'' (புகாரி)

*2. ஸூரா பாத்திஹா ஓதுவதற்கு முன்னர் அமைதியாக இஸ்திஆதா கூறுதல்*

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ.

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானின் தீங்கிலிருந்து நான் பாதுகாவல் தேடுகின்றேன்.

*3. ஸூரா பாத்திஹா ஓதியதன் பின்னர் ஆமீன் கூறுதல்.*

آمِيْنَ ஏற்றுக் கொள்வாயாக.

*4. ஸூரா பாத்திஹா ஓதியதன் பின்னர் அல் குர்ஆனின் ஏதேனும் ஒரு ஸூராவை அல்லது சிலவசனங்களை ஓதுதல்*

*5. ஒவ்வொரு நிலைக்குச் செல்லும் போதும் தக்பீர் கூறுதல். (இஃதிதால் தவிர்த்து)*

اَللهُ أَكْبَرُ அல்லாஹ் மிகப் பெரியவன்.

6. ருகூஉவில் மூன்று முறை தஸ்பீஹ் கூறுதல்

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ وَبِحَمْدِهِ

மகத்தான எனது இரட்சகனைத் தூய்மைப்படுத்துவதோடு அவனைப் புகழ்கின்றேன்.

7. ருகூஉவில் இருந்து இஃதிதாலுக்கு வரும்போது பின்வருமாறு கூறுதல்

سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ

அல்லாஹ் தன்னைப் புகழ்ந்தவனுக்குச் செவிமடுத்து விட்டான்.

8. இஃதிதாலில் பின்வருமாறு ஓதுதல்

رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْءَ السَّمَاوَاتِ وَمِلْءَ الأَرْضِ وَمِلْءَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ.

எமது இரட்சகனே! வானங்கள், பூமி, அவற்றுக்குப் பின்னுள்ள நீ நாடிய அனைத்திலும் நிறைந்த புகழ் உனக்கே உரித்தாகட்டும்.

9. ஸுப்ஹு, ரமழான் கால வித்ரு, அனர்த்த காலங்களின்போது ஐங்காலத் தொழுகைகளில் இறுதி ரக்அத்தில் ஸுஜூதுக்குச் செல்லும் முன்னர் குனூத் ஓதுதல்

اَللّٰهُمَّ اهْدِنِيْ فِيْمَنْ هَدَيْتَ. وَعَافِنِيْ فِيْمَنْ عَافَيْتَ. وَتَوَلَّنِيْ فِيْمَنْ تَوَلَّيْتَ. وَبَارِكْ لِيْ فِيْمَا أَعْطَيْتَ. وَقِنِيْ شَرَّ مَا قَضَيْتَ. فَإِنَّكَ تَقْضِيْ وَلَا يُقْضَى عَلَيْكَ. وَإِنَّهُ لَا يَذِلُّ مَنْ وَالَيْتَ وَلاَ يَعِزُّ مَنْ عَادَيْتَ. تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ. فَلَكَ الْحَمْدُ عَلَى مَا قَضَيْتَ. اَسْتَغْفِرُكَ وَأَتُوْبُ إِلَيْكَ. وَصَلَّى اللّٰهُ عَلَى النَّبِيِّ الأُمِّيِّ وَآلِهِ وَصَحْبِهِ وَسَلَّمْ.

யா அல்லாஹ்! நீ நேர்வழி காட்டியவர்களுடனே எனக்கும் நேர்வழி காட்டுவாயாக. நீ நிவாரணம் அளித்தவர்களுடனே எனக்கும் நிவாரணம் அளிப்பாயாக. நீ உதவி அளித்தவர்களுடனே எனக்கும் உதவி அளிப்பாயாக. நீ எனக்குத் தந்தவற்றில் எனக்கு அபிவிருத்தி அளிப்பாயாக. நீ விதித்ததன் தீமையை விட்டும் என்னைப் பாதுகாப்பாயாக. நீயே தீர்ப்பளிப்பவன். உனக்கு யாரும் தீர்ப்பளிக்க முடியாது. நீ சிநேகம் கொண்டவன் இழிவடைய மாட்டான். உன் விரோதத்துக்குள்ளானவன் கண்ணியம் பெற மாட்டான். எமது இரட்சகனே! உனது உபகாரங்கள் உயர்ந்து விட்டன. நீ விதித்தவைக்காக உனக்கே எல்லாப் புகழும். உன்னிடம் மன்னிப்புக் கோரி உன் பக்கமே மீள்கின்றேன். உம்மி நபி மீதும் அன்னாரின் கிளையார், தோழர்கள் மீதும் அல்லாஹ் ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாக!

10. ஸுஜூதிலே பின்வருமாறு மூன்று முறை தஸ்பீஹ் ஓதுதல்

سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى وَبِحَمْدِهِ

மகத்தான எனது இரட்சகனைத் தூய்மைப்படுத்துவதோடு அவனைப் புகழ்கின்றேன்.

11. இரு ஸுஜூத்களுக்கு இடையில் (நடு இருப்பில்) பின்வருமாறு ஓதுதல்

رَبِّ اغْفِرْ لِيْ وَارْحَمْنِيْ وَاجْبُرْنِيْ وَارْفَعْنِيْ وَارْزُقْنِيْ وَاهْدِنِيْ وَعَافِنِيْ

இரட்சகனே! என்னை மன்னித்து விடுவாயாக. என்மீது அருள் புரிவாயாக. என் குறைகளை நிவர்த்தி செய்வாயாக. என்னை உயர்வுபடுத்திப் பாக்கியங்களை அளிப்பாயாக. எனக்கு நேர்வழிகாட்டி சுகமளிப்பாயாக.

### 12. முதலாம் அத்தஹிய்யாத் ஓதுதல்

اَلتَّحِيَّاتُ الْمُبَارَكَاتُ الصَّلَوَاتُ الطَّيِّبَاتُ لِلهِ. اَلسَّلاَمُ عَلَيكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ اَلسَّلاَمُ عَلَيْنَا وَعَلَى عِبَادِاللهِ الصَّالِحِيْنَ. أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ

அனைத்துவிதமான கண்ணியமும் தொழுகையும் நல்லறங்களும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே உங்கள் மீது சாந்தியும் அல்லாஹ்வின் அருளும் பாக்கியங்களும் உண்டாவதாக. எங்கள் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாகட்டும். வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார் என நான் சாட்சியம் கூறுகின்றேன்.

### 13. முதல் அத்தஹிய்யாத்தின் இறுதியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறுதல்

اَللّٰهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ

யா அல்லாஹ்! முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறுவாயாக.

### 14. இறுதி அத்தஹிய்யாத்தைத் தொடர்ந்து ஸலாம் கொடுக்க முன்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மீது ஸலவாதுல் இப்ராஹீமிய்யா ஓதுதல், மேலும் ஸுன்னத்தான ஓதல்களை ஓதுதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அத்தஹிய்யாத்தின் பின்னர் ஓதுவதற்கு பல துஆக்களைக் கற்றுத் தந்துள்ளார்கள்.

உதாரணம்:

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ عَذَابِالْقَبْرِ وَأَعُوْذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَسِيْحِ الدَّجَّالِ وَأَعُوْذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَفِتْنَةِ الْمَمَاتِ اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ الْمَأْثَمِ وَالْمَغْرَمِ.

இறைவா! கப்ரின் வேதனையை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். தஜ்ஜாலின் குழப்பத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். வாழும்போதும் மரணிக்கும்போதும் ஏற்படும் சோதனைகளில் இருந்து நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். இறைவா! பாவத்தை விட்டும் கடனை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். (புகாரி)

اَللّٰهُمَّ إِنِّيْ ظَلَمْتُ نَفْسِيْ ظُلْمًاكَثِيْرًا وَلاَ يَغْفِرُ الذُّنُوْبَ إِلاَّ أَنْتَ فَاغْفِرْ لِيْ مَغْفِرَةً مِنْ عِنْدِكَ وَارْحَمْنِيْ

إِنَّكَ أَنْتَ الْغَفُوْرُ الرَّحِيْمُ.

இறைவா! நான் எனக்கு அதிகம் அநியாயம் இழைத்துவிட்டேன். உன்னைத் தவிர யாரும் பாவங்களை மன்னிக்க முடியாது. எனவே, உன் புறத்திலிருந்து எனக்கு பாவமன்னிப்பை வழங்குவாயாக. எனக்கு அருள் புரிவாயாக. நீயே மன்னிப்பவன். நிகரற்ற அன்புடையவன். (புகாரி)

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

فَرْضٌ تَكْبِيْرٌ سَلاَمٌ تَكْبِيْرُ التَّحْرِيْمِ اِعْتِدَالٌ

قَبْرٌ دَجَّالٌ مُبْطِلاَتٌ إِسْتِعَاذَةٌ دُعَاءُ الْإِسْتِفْتَاحِ رَكْعَةٌ بَاطِلٌ

### பயிற்சி

1. ஸூரா பாத்திஹா ஓதாமல் ஒருவர் தனியாக தொழுகையை நிறைவேற்ற முடியுமா?
2. துஆஉல் இஸ்திப்தாஹ் என்றால் என்ன?
3. தொழுகையில் ஓதப்படும் பர்ழான ஓதல்களின் எண்ணிக்கை யாது?
4. سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهُ என்பதன் பொருளை எழுதுக.
5. இஃதிதாலின்போது ஓத வேண்டிய துஆவை எழுதுக.

### செயற்பாடு

தொழுகையின் பர்ழான ஓதல்களை வேறாகவும் ஸுன்னத்தான ஓதல்களை வேறாகவும் எழுதி வகுப்பில் காட்சிப்படுத்துவதுடன் அவற்றை மனனமிடுக.



# 6

# தொழுகையின் வகைகள்

தொழுகை இஸ்லாத்தில் மிக உயரிய வணக்கமாகும். இது அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்துகின்றது. தொழுகையின்போது ஒரு முஸ்லிம் தனது இரட்சகனான அல்லாஹ்வுடன் உரையாடுகின்றான். மனிதனைப் பாவங்களிலிருந்து பரிசுத்தப்படுத்தும் இம்மகத்தான கடமையில் நாம் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளோம். இத்தொழுகை இஸ்லாத்தில் பல்வேறு அடிப்படைகளில், பல வகைகளாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. தொழுகையை நிறைவேற்றுவதில் உள்ள கடமைப்பாடு, நிறைவேற்றப்படும் முறை என்பவற்றின் அடிப்படைகளில் இதனை வேறுபடுத்தி நோக்கலாம்.

## 1. பர்ளு

### 1) பர்ளு ஐன்

ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய தொழுகையை இது குறிக்கும். இதனை நிறைவேற்றாத போது அவர் பாவியாகக் கருதப்படுவார். பின்வருவன பர்ளு ஐனைச் சார்ந்தவை ஆகும்.

- ஐவேளைத் தொழுகைகள் : ஸுப்ஹ் (பஜ்ர்), ளுஹர், அஸர், மஃரிப், இஷா
- ஜும்ஆ தொழுகை
- நேர்ச்சைத் தொழுகை

### 2) பர்ளு கிபாயா

சமூகத்தில் இதனைப் போதிய அளவினர் நிறைவேற்றுவது கடமையாகும். இல்லாதபோது அனைவரும் பாவிகளாகக் கருதப்படுவர். உதாரணமாக

- ஜனாஸா தொழுகை (மரணித்தவருக்காகத் தொழுதல்)

# 2. ஸுன்னத்

அனைத்து ஸுன்னத்துத் தொழுகைகளையும் அவற்றின் தன்மைகள், அவற்றை நிறைவேற்றும் முறைகள், அவை நிறைவேற்றப்பட வேண்டிய கால நேரங்கள் போன்றவற்றின் அடிப்படையில் மூன்று தொகுதிகளில் உள்ளடக்கி நோக்குவர்.

அ. ஸுன்னா முஅக்கதா - ஸுன்னா கைரு முஅக்கதா

ஆ. ராத்திபா - கைரு ராத்திபா

இ. ஜமாஅத்தாகத் தொழக் கூடியவை - தனித்துத் தொழக் கூடியவை

## அ. ஸுன்னா முஅக்கதா - ஸுன்னா கைரு முஅக்கதா

### 1) ஸுன்னா முஅக்கதா

இவை வலியுறுத்தப்பட்ட ஸுன்னத்தான தொழுகைகளாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவற்றைத் தவறாது பேணி வந்துள்ளார்கள்.

ஸுப்ஹ் - முன் 02, ளுஹர் முன் 02 - பின் 02, மஃரிப் - பின் 02, இஷா - பின் 02, வித்ர், பெருநாள் தொகை, கிரகணத் தொழுகை போன்றன இவற்றுக்கான சில உதாரணங்களாகும்.

### 2) ஸுன்னா கைரு முஅக்கதா

வலியுறுத்தப்படாத ஸுன்னத்தான தொழுகைகளாகும். இவை அதிக நன்மைகளைப் பெற்றுத்தரக் கூடியனவாகும்.

பர்ளான ஐவேளைத் தொழுகைக்கு முன், பின் நிறைவேற்றப்படும் ஏனைய ஸுன்னத்தான 12 ரக்ஆத்கள், தஹிய்யத்துல் மஸ்ஜித், வுழூ செய்ததும் தொழும் ஸுன்னத் தொழுகை இவற்றுக்கான சில உதாரணங்களாகும்.

## ஆ. ராத்திபா - கைரு ராத்திபா

### 1) ராதிபான ஸுன்னத்கள்

இவை நாளாந்தம் நிறைவேற்றக் கூடிய ஸுன்னத்தான தொழுகைகளாகும்.

உதாரணம்

- தஹஜ்ஜுத் தொழுகை
- வித்ர் தொழுகை
- ழுஹா தொழுகை

### 2) கைரு ராதிபான ஸுன்னத்கள்

இவை நாளாந்தம் நிறைவேற்றப்படாத ஸுன்னத்தான தொழுகைகளாகும்.

உதாரணம்

- ஸலாதுல் ஈதைன் - இரு பெருநாள் தொழுகைகள் (ஈதுல் பித்ர், ஈதுல் அழ்ஹா)
- ஸலாதுல் குஸூபைன் - இரு கிரகணத் தொழுகை (சூரிய, சந்திர)
- ஸலாதுல் இஸ்திஸ்கா - மழை வேண்டித் தொழுதல்

## இ. ஜமாஅத்தாகத் தொழக் கூடியவை - தனித்துத் தொழக் கூடியவை

பொதுவாகத் தொழுகையானது ஜமாஅத்தாகத் தொழக்கூடியவை, தனித்துத் தொழக்கூடியவை என இரண்டு வகையாகப் பிரித்து நோக்கப்படுகின்றது. அவற்றைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

| **ஜமாஅத்தாகத் தொழக் கூடியவை** | **தனித்துத் தொழக் கூடியவை** |
|---|---|
| ★ ஐவேளை பர்ளான தொழுகை | ★ ராதிபான ஸுன்னத்துக்கள் |
| ★ ஜுமுஆத் தொழுகை | ★ வித்ர் |
| ★ பெருநாள் தொழுகை | ★ தஹஜ்ஜுத் தொழுகை |
| ★ கிரகணத் தொழுகை | ★ தஹிய்யத்துல் மஸ்ஜித் |
| ★ தராவீஹ் தொழுகை | ★ ளுஹா |
| ★ ஜனாஸாத் தொழுகை | ★ ஸலாத்துல் இஸ்திஹாரா |
| ★ ரமழான் மாத வித்ர் தொழுகை | ★ ஸலாத்துல் ஹாஜா |
| ★ மழை வேண்டி தொழும் தொழுகை | ★ வுழூவின் பின் தொழும் ஸுன்னத் தொழுகை |

மேலுள்ளவற்றுள் ஜுமுஆத் தொழுகையானது கட்டாயமாக ஜமாஅத்துடன் நிறைவேற்றப்பட வேண்டிய தொழுகையாகும்.

பொதுவாக அனைத்து தொழுகைகளும் எமக்கு அளவற்ற நன்மைகளைப் பெற்றுத் தருவனவாக உள்ளன. மேலும் அவை எமது பாவங்கள் நீங்கவும் காரணமாகின்றன. அத்துடன் அவை எம்மை சுவனத்துக்கு அழைத்துச் செல்லவும் துணை செய்கின்றன.

**எனவே நாம் பர்ளான தொழுகைகளை கண்டிப்பாக உரிய நேரத்துக்கு நிறைவேற்றுவதுடன் ஸுன்னத்தான தொழுகைகளையும் அலட்சியப்படுத்தாமல் எம்மால் முடிந்தளவு நிறைவேற்றி அல்லாஹ்வின் நெருக்கத்தையும் அன்பையும் பெறுவதற்கு முயற்சிப்போம்.**

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

فَرْضُ عَيْنٍ　فَرْضُ كِفَايَةٍ　رَاتِبٌ　نَفْلٌ　أَبْعَاضُ　ضُحَى　مُؤَكَّدَةٌ

صَلاةُ الحَاجَةِ　صَلاةُ الْكُسُوفَيْنِ　صَلَاةُ الْإِسْتِسْقَاءُ　وِتْرٌ　صَلَاةُ الْعِيْدَيْنِ　تَحَجُّدٌ

**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

*1. பின்வரும் தொழுகைகளை பர்ளு, ஸுன்னா என வகைப்படுத்துக.*

*1) ஜுமுஆத் தொழுகை*

*2) நேர்ச்சைத் தொழுகை*

*3) பெருநாள் தொழுகை*

*4) பஜ்ர் தொழுகை*

*5) கிரகணத் தொழுகை*

*6) ழுஹாத் தொழுகை*

*2. கண்டிப்பாக ஜமாஅத்தாக நிறைவேற்ற வேண்டிய தொழுகை ஒன்றைக் குறிப்பிடுக.*

*3. ஜமாஅத்தாகவும் தனித்தும் தொழக் கூடிய இரு தொழுகைகளைக் குறிப்பிடுக.*

*4. நாளாந்தம் நிறைவேற்றக் கூடிய ஸுன்னத்தான தொழுகைகள் ஐந்தை எழுதுக.*

*5. ஐங்காலத் தொழுகையின் முன், பின் நிறைவேற்றப்படும் ஸுன்னத்தான தொழுகைகளை அட்டவணைப்படுத்துக.*



# 7

# ஸஜ்தாக்கள்

ஸஜ்தா என்ற பதத்தின் கருத்து சிரம் பணிதல் என்பதாகும். சிரசை நிலத்தில் வைத்து தனது முழுமையான கீழ்ப்படிதலை அல்லாஹ்வுக்கு வெளிப்படுத்தும் செயலையே இது குறிக்கும். இதன்போது மனிதன் அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமாக இருக்கின்றான். தொழுகையில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான செயலாக ஸஜ்தா அமைந்துள்ளது. இதன் சிறப்புக்கள் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.

''அடியான் அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமாக இருக்கும் சந்தர்ப்பம் ஸுஜூத் ஆகும். எனவே, அதில் அதிகமாகப் பிரார்த்தியுங்கள்.''

''நீங்கள் அல்லாஹ்வுக்காக அதிகம் ஸுஜூத் செய்யுங்கள். ஏனெனில், நீங்கள் செய்யும் ஒரு ஸஜ்தா மூலம் அல்லாஹ் உங்களது அந்தஸ்தை உயர்த்துகின்றான். உங்களது பாவத்தை மன்னித்து விடுகின்றான்.''

பர்ளான தொழுகைகளிலும், ஸுன்னத்தான தொழுகைகளிலும் நாம் நிறைவேற்றும் ஸஜ்தாக்கள் கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய பர்ழான வகையைச் சார்ந்த ஸஜ்தாக்களாகும். தொழுகை அல்லாத சந்தர்ப்பங்களிலும் ஸஜ்தாக்கள் நிறை வேற்றப்படுகின்றன. அவை ஸுன்னத் ஆனவையாகும். அவை **ஸஜ்தா திலாவத், ஸஜ்தா ஸஹ்வு, ஸஜ்தா ஷுக்ர்** முதலானவையாகும். ஸஜ்தா திலாவத், ஸஜ்தா ஸஹ்வு ஆகிய இவ்விரண்டு ஸஜ்தாக்களும் வுழூவுடனேயே நிறைவேற்றப்படல் அவசியமாகும். ஸஜ்தாவுக்குரிய உறுப்புகள் ஏழாகும். அவை நெற்றி, இரு கைகளின் உட்பாகங்கள், இரு முழங்கால்கள், இரு கால் விரல்களின் உட்பாகங்கள் ஆகியனவாகும்.

## ஸஜ்தா திலாவத்

அல் குர்ஆனில் மொத்தம் 15 இடங்களில் ஸஜ்தாவுடைய ஆயத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றை ஓதுபவர், ஓதுவதைச் செவிமடுப்பவர் ஸஜ்தா செய்வது ஸுன்னத்தான ஓர் இபாதத் ஆகும். இதனையே ஸஜ்தா திலாவத் என்கிறோம். உதாரணமாக ஸூரதுல் ஹஜ்ஜில் 77ஆவது வசனம் இவ்வாறு அமைந்துள்ளது.

***''நம்பிக்கையாளர்களே நீங்கள் குனிந்து சிரம் பணிந்து ஸுஜூத் செய்து உங்கள் இறைவனை வணங்குங்கள். (22: 77)***

இதன் சிறப்பு பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

''ஒரு மனிதன் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதி ஸுஜூத் செய்தால் 'எனக்குக் கேடே! ஸுஜூத் செய்யுமாறு மனிதனுக்குக் கட்டளையிடப்பட்ட போது அவன் ஸுஜூத் செய்து சுவர்க்கத்துக்குரியவனாகி விட்டான். ஸுஜூத் செய்யுமாறு நான் ஏவப்பட்டு ஸுஜூத் செய்ய மறுத்தேன். இதனால் நரகத்துக்குரியவனாகி விட்டேன்' என்று ஷைத்தான் அழுதவாறு அங்கிருந்து செல்வான்'' (முஸ்லிம்)

தொழுகையில் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதினாலும் ஸஜ்தா செய்வது ஸுன்னத் ஆகும். ஜமாஅத் தொழுகையில் இமாம் ஓதினால், இமாமுடன் மஃமூம்களும் ஸஜ்தா செய்ய வேண்டும். ஸஜ்தா திலாவத் செய்கிறேன் என்று மனதால் நினைத்துக் கொண்டு தக்பீர் சொல்லி ஸுஜூதுக்குச் செல்ல வேண்டும். ஒரு ஸுஜூத் செய்துவிட்டு தக்பீர் சொல்லி மீண்டும் நிலைக்கு வர வேண்டும். மீதியுள்ள ஆயத்துக்களை ஓதிவிட்டு வழமை போல தொழுகையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

தொழுகை அல்லாத வேளைகளில் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதினால் அல்லது செவிமடுத்தால் அல்லாஹ்வுக்காக ஸஜ்தா செய்கிறேன் என எண்ணிக் கொண்டு ஒரு ஸஜ்தா செய்ய வேண்டும்.

ஸஜ்தா திலாவத்தின்போது அதற்கென ஓதும் விஷேட துஆவை ஓதிக் கொள்ளலாம். வேறு பல துஆக்களும் காணப்படுகின்றன.

## ஸஜ்தா ஸஹ்வு

இதன் கருத்து மறதிக்கான ஸுஜூத் என்பதாகும். தொழுகையில் ஏதேனும் ஒரு செயலைத் தவறாக அதிகமாக செய்ததற்காகவோ அல்லது ஏதேனும் ஒன்று மறதியாக விடுபட்டதற்காகவோ அல்லது ஏதேனும் ஒரு செயல் குறித்து சந்தேகம் தோன்றினாலோ அதற்காக நிறைவேற்றப்படும் இரண்டு ஸுஜூத்களையே இது குறிக்கின்றது. பின்வரும் நிலைமைகளை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

*1. அப்ஆளு ஸுன்னத்துக்களில் ஒன்றை நினைவுடனோ மறதியாகவோ விட்டுவிடல் (உதாரணம் - முதலாம் அத்தஹிய்யாத் விடுபடல்)*

*2. தொழுகையை முறிக்கக் கூடிய ஒரு செயலை மறதியாக செய்தல் (உதாரணம் - நான்கு ரக்அத் தொழுகையை ஐந்து ரக்அத்தாக தொழுதல், தொழுகையில் கதைத்தல்)*

*3. தொழுகையில் சந்தேகம் ஏற்படுதல் (உதாரணம் தொழுகையின் போது எத்தனை ரக்அத் தொழுதேன் என சந்தேகித்தல் - இவ்வாறு சந்தேகம் ஏற்பட்டால் குறைந்த எண்ணிக்கையைச் செய்திருப்பதாகக் கருதி தொழுகையை நிறைவேற்ற வேண்டும். பின்னர் அத்தஹிய்யாத் ஓதிய பின் ஸலாம் கொடுக்க முன்பு ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும்.*

## ஸஜ்தா ஷுக்ர்

*இதனை நன்றி பாராட்டும் ஸஜ்தா எனக் குறிப்பிடலாம். இதுவும் ஸுன்னத்தான ஒரு செயலாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மகிழ்ச்சி கரமான செய்தி கிடைத்தால் அல்லது ஏதாவது ஒரு காரியம் இலகுவாக அமைந்து விட்டால் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு ஒரு ஸுஜூத் செய்வார்கள். எனவே, எமக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி கிடைத்தால், ஏதாவது விடயம் எமக்கு இலகுவாக அமைந்தால் அல்லது ஆபத்தொன்றிலிருந்து நாம் பாதுகாப்புப் பெற்றால் ஸஜ்தா ஷுக்ர் செய்வது ஒரு நற்செயலாகும்.*

*ஸஜ்தா ஷுக்ர் செய்கிறேன் என்ற நிய்யத்துடன் தக்பீர் சொல்லி ஒரு ஸுஜூத் செய்ய வேண்டும். ஸஜ்தாவுக்குரிய உறுப்புக்கள் ஏழும் நிலத்தைத் தொடும் விதமாக ஸஜ்தா செய்ய வேண்டும்.*

***ஸஜ்தாக்களின் வகைகள் பற்றி விரிவாக அறிந்து கொண்ட நாம் அவற்றை நமது வாழ்வில் கடைப்பிடித்து நடப்போமாக!***



பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

سُجُودٌ　　سَجَدَةُ تِلاَوَةٍ　　سَجَدَةُ شُكْرٍ　　سَجَدَةُ سَهْوٍ

**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**சரி, பிழை கூறுக.**

1. (அ) அல் குர்ஆனில் 36 இடங்களில் ஸஜ்தாவுடைய வசனங்கள் இடம் பெற்றுள்ளன. ( )

   (ஆ) எவ்வகையான ஸஜ்தாக்களையும் நிறைவேற்ற கட்டாயம் வுழூ செய்ய வேண்டும். ( )

   (இ) அடியான் அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமாக இருப்பது ஸுஜூதில் ஆகும். ( )

   (ஈ) பரீட்சையில் சித்தியடைந்ததற்காக நிறைவேற்ற வேண்டியது ஸஜ்தா ஸஹ்வு ஆகும். ( )

   (உ) வெள்ளிக்கிழமை ஸுப்ஹுத் தொழுகையில் இரண்டாம் ரக்அத்தில் ஸஜ்தா செய்வது கட்டாயக் கடமையாகும். ( )

2. ஸஜ்தா என்பதன் கருத்து யாது?

3. திலாவத் என்றால் என்ன?

4. ஸஜ்தாவின் சிறப்பு பற்றி ஹதீஸின் போதனைகள் மூன்றைத் தருக.

5. உமது வாழ்வில் ஸஜ்தா ஷுக்ர் செய்ததற்கான சந்தர்ப்பங்கள் மூன்றைப் எழுதுக.




# ரமழானில் கடைப்பிடிக்க வேண்டியவை

இஸ்லாமிய மாதங்களில் ஒன்பதாவது மாதமாகிய ரமழான் மாதமானது, அல்லாஹ்விடத்தில் பல்வேறு சிறப்புக்களைப் பெற்றுள்ளது. ஆயிரம் மாதங்களை விடவும் சிறந்த ஓர் இரவை இம்மாதம் பெற்றிருப்பது அதன் சிறப்புக்கு ஒரு முக்கிய காரணமாகும். அவ்வாறே இவ்விரவிலேயே அல்லாஹ் அல் குர்ஆனையும் அருளினான்.

***''மகத்துவம் மிக்க (லைலதுல் கத்ர்) இரவில் இதை நாம் அருளினோம்; மகத்துவம் மிக்க இரவு என்றால் என்னவென்று உமக்குத் தெரியுமா? மகத்துவம் மிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது.''   (97: 1-3)***

ரமழான் அல் குர்ஆன் அருளப்பட்ட மாதம் என்ற வகையில் அம்மாதத்திற்கென்றே விஷேடமான ஒரு வணக்கத்தை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். அதுதான் நோன்பு எனும் இஸ்லாத்தின் நான்காவது கடமையாகும். இது பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

***''ரமழான் மாதம் எத்தகைய மகத்துவமுடையதென்றால், அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும் நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும் நன்மை, தீமையை பிரித்தறிவிக்கக் கூடியதாகவும் உள்ள திருக்குர்ஆன் (எனும் இவ்வேதம்) அருளப் பெற்றது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகின்றாரோ அவர் அதில் நோன்பு நோற்கவும்.'' (2:185).***

இவ்வசனம் அல் குர்ஆனுக்கும் நோன்புக்கும் இடையில் உள்ள தொடர்பை விளக்குகிறது. இம்மாதத்தில் அடியார்கள் அல் குர்ஆனின் மூலமும் நோன்பின் மூலமும் அல்லாஹ்வை நெருங்க வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளார்கள். அல்லாஹ் இம்மாதத்தை பல்வேறு விதமாக அலங்கரித்து ஏனைய மாதங்களை விடச் சிறப்படையச் செய்துள்ளான்.

''ரமழான் மாதத்தில் சுவர்க்க வாயில்கள் திறக்கப்படுகின்றன; நரக வாயில்கள் மூடப்படுகின்றன; ஷைத்தான் விலங்கிடப்படுகின்றான்.'' (புகாரி, முஸ்லிம்)

''கண்ணியமிக்க லைதுல் கத்ர் இரவில் நம்பிக்கையுடனும் நற்கூலியை எதிர்பார்த்த நிலையிலும் நின்று வணங்குபவரின் முன்பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.'' (புகாரி)

அல்லாஹ் ரமழான் மாதத்திற்கு ஏன் இத்தனை சிறப்புக்களை வழங்கியுள்ளான்?

- ரமழான் மாதம் வரண்ட பாலை நிலத்தில் காணப்படும் பசுந்தரை போன்றது.
- ரமழான் மாதம் வரட்சிக் காலத்தில் அகப்படும் மதுரமான நீர்ச் சுனை போன்றது.
- ரமழான் மாதம் வறுமையில் வாடும் மனிதனுக்குக் கிடைக்கும் புதையல் போன்றது.
- ரமழான் மாதம் பசித்திருப்பவன் முன்னிலையில் வைக்கப்படும் உணவுத் தட்டு போன்றது.

இவ்வாறான அரிய சந்தர்ப்பங்களைத் துஷ்பிரயோகம் செய்ய முடியுமா? அவற்றைத் துஷ்பிரயோகம் செய்பவர் அல்லது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளாதவர் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன? ரமழான் மாதத்தின் பயன்களை அடைந்து கொள்ளாமல் பொடுபோக்காகக் கழிக்கின்றவன் அல்லாஹ்விடத்தில் குற்றவாளியாகக் கருதப்படுகிறான்.

ரமழான் மாதத்தின் மகத்துவம் காரணமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஸஹாபாக்களும் ரமழான் வருவதற்கு முன்பே அதற்காகத் தம்மை தயார்படுத்திக் கொள்வார்கள். ஆசையோடு அதனை எதிர்பார்த்திருப்பார்கள். ரமழான் வந்ததும் தம்மை வரிந்து கட்டிக் கொண்டு நன்மை செய்வதில் ஈடுபடுவார்கள்.

மாஇல் இப்னு பழ்ல் என்ற தாபிஈ கூறுகிறார்: ''ஸஹாபாக்கள் ரமழானை வேண்டி ஆறு மாதங்கள் பிரார்த்திப்பார்கள். அடுத்த ஐந்து மாதங்களும் ரமழானில் செய்த நன்மைகளை ஏற்றுக் கொள்ளும்படி பிரார்த்திப்பார்கள்.''

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ரமழான் வரும்போது பின்வருமாறு கூறுவார்கள்: ''பாவங்களில் இருந்து எம்மைத் தூய்மைப்படுத்தும் மாதமே உன் வருகை நல்வரவாகட்டும்.''

இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பற்றி நாபிஃ என்பவர் அறிவிக்கிறார்:

''இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ரமழான் மாத இரவில் மக்கள் மஸ்ஜிதை விட்டுச் செல்லும் வரை வீட்டில் இருப்பார்கள். மக்கள் சென்று முடிந்ததும் தண்ணீர் பையொன்றுடன் அங்கு சென்று வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவார்கள். சுப்ஹுத் தொழுகை முடிந்த பின்னரே வீட்டிற்கு வருவார்கள்.'' என நாபி, என்பவர் அறிவிக்கின்றார்.

## ரமழானில் கடைப்பிடிக்குமாறு இஸ்லாம் காட்டித் தரும் நல்லமல்கள்

### 1. நோன்பு நோற்றல்:

***''விசுவாசிகளே உங்களுக்கு முன்பிருந்தோர் மீது விதியாக்கப்பட்ட பிரகாரமே உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சம் உடையோர் ஆகலாம்.'' (2: 183)***

பருவ வயதை அடைந்த முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் இது கடமையாக்கப்பட்டுள்ளது. தக்க காரணமின்றி நோன்பை விடுபவர் குற்றவாளியாவார். அவர் அதற்காகக் குற்றப் பரிகாரம் நிறைவேற்ற வேண்டும். நோன்பு நோற்பவர் அல்லாஹ்விடத்தில் அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்கிறார்.

''யார் நம்பிக்கையுடனும் நன்மை வேண்டியும் ரமழானில் நோன்பு நோற்கிறாரோ அவரது முன்செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகின்றன.'' (புகாரி, முஸ்லிம்) ஹதீஸ் குத்ஸியில் வந்துள்ளதாவது: ''நோன்பு எனக்குரியது; அதற்குரிய கூலியை நானே கொடுப்பேன்.'' (முஸ்லிம்)

**2. இரவுத் தொழுகை:** ரமழான் மாதத்தில் இத் தொழுகையானது விஷேடமான ஓர் அமலாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இத்தொழுகையின் மகத்துவம் பற்றிப் பின்வருமாறு கூறினார்கள்: ''யார் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் ரமழானில் நின்று வணங்குகிறாரோ அவரது முன்னைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகின்றன.'' (புகாரி)

**3. அல் குர்ஆன் ஓதுதல்:** அல் குர்ஆன் அருளப்பட்ட மாதம் என்ற வகையில் ரமழானில் அதனை ஓதுவது முக்கியமான அமலாகக் கருதப்படுகிறது. ரமழானின் ஒவ்வோர் இரவிலும் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல் குர்ஆனைக் கற்றுக் கொடுத்ததாக ஹதீஸ்களில் வந்துள்ளன.



**4. பாவ மன்னிப்புக் கோரல்:** ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குத்பா உரை நிகழ்த்துவதற்காக மிம்பரில் ஏறும்போது மூன்று முறை ஆமீன் கூறினார்கள்.

இதற்கான விளக்கத்தை ஸஹாபாக்கள் கேட்டபோது, ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கேட்ட சில துஆக்களுக்குத்தான் ஆமீன் கூறியதாகக் கூறினார்கள். அதில் ஒரு துஆ, பின்வருமாறு அமைந்திருந்தது.

''ஒருவன் ரமழானை அடைந்தும் அவன் அதில் பாவ மன்னிப்புப் பெறவில்லையோ அவன் நாசமாகட்டும்'' என்பதாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''ஆமீன்'' கூறிய இச்சம்பவமானது ரமழான் மாதத்தில் பாவ மன்னிப்புக் கோருவதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.



**5. பிரார்த்தித்தல்:** நோன்பாளி அல்லாஹ்வுடன் மிகவும் நெருக்கமாக இருக்கும் நேரம் நோன்பு துறக்கும் நேரமாகும். ஆகவே, அந்நேரத்தை துஆ கேட்பதற்காகப் பயன் படுத்துவது ஸுன்னத் ஆகும்.

**6. தர்மம் செய்தல்:** நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனிதர் களிலேயே அதிகம் தர்மம் செய்பவராக காணப்பட்டார்கள் என்றும் ரமழானில் வீசும் தென்றலை விட வேகமாக தர்மம் செய்பவராக இருந்தார்கள் என்றும் ஹதீஸ்களில் வந்துள்ளன.

**7. இஃதிகாப் இருத்தல்:** பள்ளிவாசலில் முழுமையாகத் தரித்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் இந்த அமல் ரமழானின் கடைசிப் பத்தில் நிறைவேற்றுகின்ற முக்கியமான ஒரு ஸுன்னாவாகும்.

**8. ஸக்காதுல் பித்ர்:** இது, சிறுவர்கள் உட்பட அனைத்து முஸ்லிம்களுக்காகவும் கொடுக்கப்பட வேண்டிய ரமழானுக்குரிய விஷேட தர்மமாகும். பெருநாள் தொழுகைக்குச் செல்லுமுன் இதனை நிறைவேற்ற வேண்டும்.

மேற்கூறப்பட்ட அம்சங்களோடு நல்ல நூல்களை வாசித்தல், பிறருக்கு உதவி செய்தல், நல்ல வார்த்தைகளைப் பேசுதல், நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல், நல்லுபதேசங்களுக்குச் செவிமடுத்தல், குடும்ப உறவைப் பேணல், வீட்டுச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல் போன்றனவும் நாம் ரமழானில் கவனத்தோடு கடைப்பிடிக்க

வேண்டிய நற்செயல்களாகும். ரமழானில் நாம் செய்யும் ஒவ்வொரு ஸுன்னத்தான அமலுக்கும் பர்ளுடைய நன்மையும், ஒவ்வொரு பர்ளுக்கும் எழுபது பர்ளுகளுடைய நன்மையும் கிடைக்குமென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே, நாம் இம்மாதத்தில் அதிகமாக நற்காரியங்களில் ஈடுபட முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறே தீய காரியங்களைத் தவிர்ந்து நடக்கவும் வேண்டும். ஏனெனில், தீய செயல்களால் நாம் நோன்புடன் செய்கின்ற நற்செயல்கள் கூட, பயனற்றுப் போகின்றன. அதுபற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் எச்சரித்துள்ளார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''யார் தீய வார்த்தை பேசுவதையும் தீய செயல்கள் செய்வதையும் விட்டு விடவில்லையோ அவர் நோன்பின் மூலம் பசித்திருப்பதிலும் தாகித்திருப்பதிலும் அல்லாஹ்வுக்கு எவ்வித தேவையும் இல்லை.'' (புகாரி )

ரமழானில் நாம் செய்யும் நன்மைகள் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு பின்வரும் தீமைகளில் இருந்து நாம் முழுமையாகத் தவிர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

## நாவு மற்றும் செயலுடன் தொடர்பான தீமைகள்

பொய், புறம், கோள், படுதூறு, வீண் பேச்சு, கேலி, பரிகாசம் செய்தல், பிறருக்குத் துன்பம் விளைவித்தல், பிறர் பொருளை அபகரித்தல், மற்றவர்களின் மானத்தைப் போக்குதல், சண்டைப் பிடித்தல், மக்களுக்கு இடையூறு விளைவித்தல், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் போன்றன இவற்றுள் சிலவாகும்.

ரமழான் மாதத்தை இஸ்லாமிய வழிகாட்டலுக்கு அமைய கழிப்பதன் மூலம் அது எமக்குப் பல்வேறு பயன்களை வழங்குகிறது. அவற்றுள் சில:

1. இறையச்சத்தை வளர்த்தல்
2. ஆன்மீக செயற்பாடுகளில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்
3. பொறுமையைக் கற்றுத் தருதல்
4. கஷ்டங்களை எதிர்கொள்ளும் மனவலிமையைத் தருதல்
5. பாவங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளும் பக்குவத்தைத் தருதல்
6. உடலாரோக்கியம் கிடைத்தல்

**ரமழான் மாதத்தை நல்ல முறையில் கழித்து உன்னத பயன்களை அடைந்து கொள்வோமாக!**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

شَهْرُ رَمَضَان  لَيْلَةُ الْقَدْر  اِعْتِكَافٌ  زَكَاةُ الْفِطْر  مِمْبَرٌ  خُطْبَةٌ

**பயிற்சி**

1. ரமழான் மாதத்தின் மூன்று சிறப்புக்களை எழுதுக.
2. ரமழான் மாதத்தில் கடைபிடிக்க வேண்டிய அமல்களைப் பட்டியலிடுக.
3. ரமழான் மாதத்தின் மூலம் நாம் அடையும் பயன்களைக் குறிப்பிடுக.
4. ரமழான் மாதத்தில் நாம் தவிர்ந்துகொள்ள வேண்டியவைகளைப் பட்டியற்படுத்துக.




# ஸக்காத், ஸதகா அறிமுகம்

## ஸக்காத்

அல்லாஹ் மனிதனுக்கு வழங்கிய ஓர் அருட்கொடையே செல்வமாகும். அதனைப் பெற்றவர், தான் மாத்திரம் அதனை அனுபவிக்காது அதிலிருந்து பிறருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். அதற்கான ஒரு வழிமுறையாகவே ஸக்காத்தும் ஸதகாவும் அமைந்துள்ளன.

ஸக்காத் என்ற சொல் தூய்மை, வளர்ச்சி, அபிவிருத்தி, அருள் போன்ற அர்த்தங்களைத் தருகின்றது. ஸக்காத் வழங்குவதனால் அதனை வழங்குபவரின் சொத்து அபிவிருத்தியும் வளர்ச்சியும் அடைகின்றது. அவரது உள்ளம் தூய்மை பெற்று தயாளம், பிறர் நலம் பேணல் போன்ற நற்குணங்களைப் பெற்றுக் கொள்கின்றது.

ஸக்காத் என்ற சொல்லின் விரிந்த கருத்தை நோக்கினால்,

**ஸக்காத் விதியாவதற்குரிய நிபந்தனைகளுக்கு உட்படுகின்ற முஸ்லிம்கள், தமது சொத்தில் (குறிப்பிட்ட நிஸாபை அடைந்த பின்னர்) அல்லாஹ் விதியாக்கிய ஒரு குறித்த விகிதத்தை அல் குர்ஆன் கூறும் எட்டுக் கூட்டத்தினரிடையே பகிர்ந்தளித்தல்** என்பதாகும்.

இது அடிப்படையான வணக்கங்களில் மூன்றாவதாகவும் இஸ்லாமியப் பொருளாதாரத்தின் உயிர் நாடியாகவும் காணப்படுகின்றது.

அல் குர்ஆனும் ஸுன்னாவும் இந்தக் கடமை குறித்து மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளன.

***''நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்தும் ஸக்காத்தைக் கொடுத்தும் வாருங்கள்.'' (2: 110)***

***''எவர்கள் அல்லாஹ் தன் அருளினால் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருட்களில் கஞ்சத்தனம் செய்கின்றார்களோ அதனை அவர்கள் தங்களுக்கு நல்லதென்று எண்ணிவிட வேண்டாம். அது அவர்களுக்குத் தீங்காகவே இருக்கும். கஞ்சத்தனத்தால் சேர்ந்த பொருட்கள் மறுமையில் அவர்களது கழுத்தில் அரிகண்டமாக (இரும்பு வளையமாக) மாட்டப்படும்.'' (3: 180)***

அல்லாஹ் அல் குர்ஆனில் தொழுகையோடு இணைத்து வலியுறுத்திச் சொன்ன ஒரேயொரு கடமை ஸக்காத் ஆகும்.




ஒரு முஸ்லிமுடைய வாழ்வில் அதிமுக்கியமான அம்சமாக அமைந்துள்ள தொழுகை என்ற அந்த வணக்கம் சீரானால் அனைத்து செயல்களுமே சீர்பெற்று விடும் என்று வர்ணிக்கப்பட்ட வணக்கமாகும். மறுமை விசாரணையின்போது முதலில் கேட்கப்படும் வினாவும் தொழுகையாகவே உள்ளது. இத்தகைய முக்கியத்துவம் பெற்ற தொழுகையுடன் பிணைத்து ஸக்காத்தை அல் குர்ஆன் குறிப்பிட்டிருப்பது அதன் சிறப்புக்கும் முக்கியத்துவத்துக்கும் போதுமான சான்றாகும்.

இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

''தொழுகையை நிலைநாட்டுமாறும் ஸக்காத் கொடுக்குமாறும் கட்டளையிடப் பட்டுள்ளீர்கள். யார் ஸக்காத் கொடுக்கவில்லையோ அவருக்குத் தொழுகை கிடையாது.'' (தப்ஸீர் தபரி பா: 14 ப: 153)

ஸக்காத்தின் முக்கியத்துவத்தைப் பல்வேறு ஹதீஸ்கள் உணர்த்துகின்றன.

''ஸக்காத் மூலம் நீங்கள் உங்கள் செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்'' (அபூதாவூத்)

*''ஸக்காத்தை வழங்காது தடுத்துக்கொள்ளும் சமூகத்தினரை அல்லாஹ் பஞ்சத்தைக் கொண்டு சோதிப்பான்.'' (தபரானி)*

**ஸக்காத் கடமையை முறையாக நிறைவேற்றினால் சமூகம் பயனடையும்; செல்வம் பெருகும்; அல்லாஹ்வின் பாதுகாப்புக் கிடைக்கும்; பஞ்சம் நீங்கும்; வறுமை ஒழியும்; பொருளாதார ஏற்றத்தாழ்வு குறையும்; ஏழைகளின் அடிப்படைப் பிரச்சினைகள் தீரும்; குற்றச் செயல்கள் குறையும். அமைதியும் பரக்கத்தும் நிறைந்த ஒரு சமூகம் தோற்றம் பெறும். மறுமையில் ஈடேற்றம் கிடைக்கும்.**

*இவ்வாறு பல நன்மைகளை ஸக்காத் அள்ளித் தருவதனால் அது தனித்துவம் பெற்றுத் திகழ்கின்றது.*

*ஸக்காத் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகவும், குறிப்பிட்ட சிலர் கட்டாயம் நிறைவேற்ற வேண்டியதாகவும் அமைந்துள்ளது. அதனை நிறைவேற்றா திருப்பது இம்மையிலும் மறுமையிலும் தண்டனை கிடைக்கப் பெறக் காரணமாக அமையும்.*

## ஸதகா


*ஸக்காத், ஸதகா என்பன ஒரே கருத்தைத் தருவதாக இருப்பினும் அவற்றுக்கிடையே சில வேறுபாடுகளைக் காண முடியும். அல் குர்ஆன் ஸதகா என்ற பதத்தை ஸக்காத் என்ற கருத்திலேயே அனேக இடங்களில் பயன்படுத்தியிருக்கின்றது. எனினும், அது பொதுவாக தர்மம் என்ற கருத்தையே தருகின்றது. ஸதகா ஸுன்னத்தான ஒரு செயலாகும்.*

**ஒரு மனிதன் தனது சொத்திலிருந்து ஒரு பகுதியை ஒருவருக்கு இறை திருப்தியை எதிர்பார்த்து வழங்குதல்** *என்பதையே ஸதகா என்ற பதம் குறிக்கின்றது. இப்பதம் மிகவும் விரிந்த கருத்தில் பயன்படுகின்றது. பொருட்கள், செல்வங்கள் மூலம் கொடுக்கும் தர்மம் மட்டுமன்றி, செயல்களினாலும் தர்மம் இடம் பெறுகின்றது. பின்வரும் நபிமொழி இதனைத் தெளிவுபடுத்துகின்றது:*

*''நீ உன் சகோதரனின் முகத்தைப் பார்த்து புன்னகைப்பதும் ஸதகாவாகும். நீ நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதும் ஸதகாவாகும். வழி தெரியாதிருக்கும் ஒருவனுக்கு வழிகாட்டுவதும் ஸதகாவாகும். பாதையிலிருந்து முட்கள், எலும்புகளை நீ அகற்றுவதும் ஸதகாவாகும். உனது வாளியால் நண்பனின் வாளிக்கு நீர் அள்ளிக் கொடுப்பதும் ஸதகாவாகும். பார்வை இழந்த ஒருவனுக்கு நீ வழிகாட்டுவதும் ஸதகாவாகும்.'' (புகாரி)*

*இவற்றிலிருந்து ஸதகா என்பது விரிந்த கருத்தைக்கொண்ட ஒரு நற்செயலாகும் என்பது புரிகின்றது. இதன் சிறப்பை அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:*

***''நம்பிக்கையாளர்களே, எவர்கள் தங்கள் பொருளை (பிறருக்கு உதவிடும் நோக்கில்) இரவிலும், பகலிலும், இரகசியமாகவும், வெளிப்படையாகவும் செலவு செய்கிறார்களோ அவர்களுக்குரிய கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு. தவிர, அவர்களுக்கு (மறுமையில்) எவ்வித பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.'' (2: 274)***



நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ''தர்மங்கள் செய்பவர் இறைவனுக்கு அருகில் இருக்கிறார். அவர் மனிதர்களுக்கு அருகாமையில் இருக்கிறார். அவர் சுவர்க்கத்துக்கு அருகாமையில் இருக்கிறார். நரகத்தை விட்டும் வெகு தொலைவில் இருக்கிறார். கஞ்சத்தனமுடைய ஒரு வணக்கவாளியைவிட தாராள தன்மையுடன் தர்மம் செய்கின்ற ஒரு அறிவீனன் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்துக் குரியவனாவான்.'' (திர்மிதி)

சொத்து செல்வங்களை நேசிப்பதும் அதனை சேமித்து வைப்பதும் மனித இயல்புகளில் ஒன்று. ஆயினும், பிறருக்கு தர்மம் செய்யாமல் சேமிப்பவன் பல துன்பங்களை மறுமையில் சந்திக்க நேரிடுவான் என அல் குர்ஆன் எச்சரிக்கின்றது. இறை பாதையில் செலவிட முனையும்போது ஷைத்தான் அதைத் தடுக்கவே எத்தனிப்பான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ''ஒரு மனிதன் தனது செல்வத்திலிருந்து தர்மம் செய்திட விரும்பும்பொழுது எழுபது ஷைத்தான்கள் அவனிடம் ஓடோடி வந்து அதனைக் கொடுப்பதிலிருந்து அவனைத் திசைதிருப்ப முயலுகின்றனர்'' (அஹ்மத்)

இந்த நிலையில் ஒரு மனிதன் ஷைத்தானை வெற்றிகொண்டு தருமம் செய்யும்போது மலக்குமார்களின் நற்பிரார்த்தனைக்கு ஆளாகின்றான். ஒவ்வொரு நாளும் இரண்டு மலக்குகள் பூமியில் இறங்குகின்றார்கள். அவர்களுள் ஒருவர் ''யா அல்லாஹ் நல்ல வழிகளில் செலவு செய்பவருக்கு நீ மென்மேலும் வழங்குவாயாக'' என்று சொல்வார். அடுத்தவர் ''யா அல்லாஹ் கொடுக்காது, தர்மம் செய்யாது தடுத்துக் கொள்கின்றானோ அவனுக்கு அழிவைக் கொடுப்பாயாக'' என்று பிரார்த்திப்பார். (முஸ்லிம்)

ஸக்காத், ஸதகா ஆகிய இரு கடமைகளுக்குமிடையேயான வேறுபாட்டை பின்வரும் அட்டவணை புலப்படுத்துகின்றது:

| ஸக்காத் | ஸதகா |
|---|---|
| ★ பர்ளானது | ★ ஸுன்னத்தானது |
| ★ குறிப்பிட்ட சில பொருட்களில் மாத்திரம் கடமையானது | ★ எப்பொருளிலும் கொடுக்கப்படலாம் |
| ★ குறிப்பிட்ட சிலரின் மீது கடமையானது | ★ விரும்பிய எவரும் கொடுக்கலாம் |
| ★ எவ்வாறு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை உண்டு | ★ விரும்பிய விதத்தில் எவ்வளவும் கொடுக்கலாம் |
| ★ அல் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள எட்டு கூட்டத்தினருக்கே கொடுக்க வேண்டும் | ★ விரும்பிய எவருக்கும் கொடுக்கலாம் |
| ★ பொருள், சொத்து குறிப்பிட்ட அளவை அடைந்திருக்க வேண்டும் | ★ தன்னிடம் எவ்வளவு இருந்தாலும் வழங்கலாம். |
| ★ சொத்து, பொருள், குறிப்பிட்ட கால அளவு (ஹவ்ல்) தன்னிடமிருக்க வேண்டும். | ★ எவ்வளவு காலம் என்ற நிபந்தனையில்லை |

**ஆகவே ஸக்காத், ஸதகா என்பவற்றின் மகிமையை விளங்கி அறிந்து எமது வாழ்வில் அவற்றைக் கடைப்பிடித்தொழுகுவோமாக.**

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

زَكَاةٌ　　صَدَقَةٌ

### பயிற்சி

(அ) பின்வரும் தொடர்களுக்குரிய பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

1. ஸக்காத் என்ற பதத்தின் மொழிக் கருத்து
   (வரி, செல்வம், தூய்மை)

2. ஸதகா என்பதன் கருத்து
   (பிச்சைக் கொடுத்தல், தர்மம் செய்தல், உணவளித்தல்)

3. ஸதகா என்ற நற்செயல்
   (ஸுன்னத், வாஜிப், பர்ள்)

4. அல் குர்ஆன் தொழுகையோடு இணைத்து வலியுறுத்திய கடமை
   (நோன்பு, ஸக்காத், ஹஜ்)

5. ஸக்காத் கொடுப்பதால் செல்வம்
   (அபிவிருத்தி அடையும், குறையும், அழியும்)

(ஆ) சுருக்கமான விடை தருக.

1. ஸக்காத் என்பதன் வரைவிலக்கணம் யாது?
2. ஸக்காத் - ஸதகா வேறுபாடுகள் மூன்று தருக.
3. ஸக்காத்தின் சிறப்புக்கு இரண்டு ஆதாரங்கள் தருக.
4. ஸதகாவின் சிறப்பைக் கூறும் இரண்டு அல் குர்ஆன் வசனங்களைத் தேடி எழுதுக.
5. ஸக்காத் கடமையின் முக்கியத்துவம் குறித்து நற்சிந்தனை ஒன்று தயாரிக்குக.

### செயற்பாடு

நீங்கள் உங்களது வாழ்வில் எவ்வாறு ஸதகா செய்ய முடியும்? அதற்கான வழிமுறைகள் யாவை எனக் கலந்துரையாடி எழுதுக.



# 10

# துஆக் கேட்போம்

'துஆ' என்ற சொல் வேண்டுதல், அழைத்தல், இறைஞ்சுதல் எனப் பல்வேறு அர்த்தங்களைத் தருகின்றது. அடியான் தனது தேவைகளை வேண்டி அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதை இது குறிக்கிறது. இது முக்கியமானதொரு வணக்கமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''வணக்கங்களின் தலையாயது துஆவாகும்'' என்றார்கள்.

அல்லாஹ் எம்மீது விதித்துள்ள தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற அடிப்படையான வணக்க வழிபாடுகள்கூட அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையில் நெருக்கத்தை ஏற்படுத்தி அல்லாஹ்விடம் கையேந்துவதற்கான சந்தர்ப்பத்தையே ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

அல்லாஹ்வின் படைப்பினங்களில் அவனிடம் மிகவும் சிரேஷ்டமானவர்கள் ரஸூல்மார்களும் நபிமார்களுமாவர். இவர்களும் தமது வாழ்வின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்விடம் அதிகமதிகம் பிரார்த்திப்பவர்களாக இருந்துள்ளார்கள். அல்லாஹ் இவர்களது பிரார்த்தனைகளை எமக்கு முன்னுதாரணமாகக் குறிப்பிடுகிறான்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் **''எங்கள் இரட்சகா எங்களுக்கு நாங்கள் அநியாயம் செய்துகொண்டோம். எங்களை நீ மன்னிக்காவிட்டால் நாங்கள் நஷ்டவாளர்களாகி விடுவோம்.'' (7: 23)** எனக் கேட்டார்கள்.

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் **''இறைவா என்னையும் எனது பெற்றோரையும் உன்னை விசுவாசம் கொண்ட நிலையில் என் வீட்டில் நுழைந்தவர்களையும் இன்னும் முஃமினான ஆண்களையும் முஃமினான பெண்களையும் மன்னிப்பாயாக. அநியாயக்காரர்களுக்கு அழிவைக் கொடுப்பாயாக!'' (71:28)** எனக் கேட்டார்கள்.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் **''எங்கள் இறைவா எம் இருவரையும் (இஸ்மாயீல்) உனக்கு வழிபடும் முஸ்லிம்களாகவும் எங்களுடைய சந்ததியிலிருந்து ஒரு கூட்டத்தினரை உனக்கு முற்றிலும் வழிபடும் முஸ்லிம்களாகவும் ஆக்கிவைப்பாயாக, நாம் செய்ய வேண்டிய கிரியைகளையும் எமக்குக் காட்டித் தருவாயாக. எம்மை மன்னிப்பாயாக. நீயே மன்னிப்பவனாகவும் இரக்க முடையவனாகவும் இருக்கின்றாய்.'' (2: 128)** எனக் கேட்டார்கள்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், **''இறைவா என் உள்ளத்தை விரிவாக்குவாயாக. என் காரியத்தை இலகுவாக்குவாயாக. மக்கள் எ ன் பேச்சை விளங்கும் வண்ணம் என் நாவிலுள்ள முடிச்சை நீக்கி விடுவாயாக.'' (20:25-28)** எனக் கேட்டார்கள்.

நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனைத்து விடயங்களையும் பிரார்த்தனையோடு ஆரம்பித்து பிரார்த்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரார்த்தனைகளில் ஈடுபடும்போது அழுது மன்றாடுவார்கள். தனது இயலாமையையும் அடிமைத்தனத்தையும் முழுமையாக வெளிப்படுத்துவார்கள். தாயிப் நகரில் இருந்து திரும்பி வரும் போதும் பத்ரு யுத்தத்தின்போதும் கேட்ட பிரார்த்தனைகள் இதற்கு மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரார்த்தனையின் முக்கியத்துவம் பற்றி பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார்கள்.

''யார் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கவில்லையோ அவன் மீது அல்லாஹ் கோபப்படுகின்றான்.'' (இப்னு மாஜா)

''பிரார்த்தனை முஃமினின் ஆயுதமாகும்.'' (ஹாகிம்)

''பிரார்த்திப்பதில் இயலாதவனாக இருப்பவனே அனைத்தையும் விட பெரும் இயலாதவனாவான்.'' (தபரானி)

மேற்கூறப்பட்ட முன்மாதிரிகளுக்கும் போதனைகளுக்கும் அமைய நீங்களும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றீர்களா? உங்களுக்கோ அல்லது உங்கள் பெற்றோர் உறவினருக்கோ கஷ்டங்கள் வரும்போது நோய்கள் வரும் போது நீங்கள் போட்டிகளில் கலந்து கொள்ளும் போது, பரீட்சைக்கு முகம் கொடுக்கும் போது, ஆபத்துக்களை எதிர் நோக்கும் போது, தேவைகள் ஏற்படும் போது இவ்வாறான சந்தர்ப்பங்களிலெல்லாம் நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களா?

உங்கள் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களை நீங்கள் அனுபவித்துள்ளீர்களா? அவற்றை உங்களால் நினைவுபடுத்திப் பார்க்க முடியுமா?

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

''எந்தப் பாவத்தையும் கேட்காத, குடும்ப முறிவை வேண்டாத ஒரு முஸ்லிமின் பிரார்த்தனைக்கு அல்லாஹ் மூன்றில் ஒரு விதமாக பதிலளிக்காமல் இருக்கமாட்டான்.

1. கேட்டதை உலகிலேயே கொடுப்பான்.

2. மறுமையில் கொடுப்பதற்காக தாமதப்படுத்துவான்.

3. கேட்டதற்குச் சமமான ஒரு தீங்கை அவனை விட்டும் நீக்குவான்.

இதைக் கேட்ட நபித் தோழர்கள் நாம் அதிகம் பிரார்த்தித்தால்? எனக்கேட்ட போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''அல்லாஹ்விடத்தில் மிகவும் அதிகமாக இருக்கிறது'' எனப் பதிலளித்தார்கள். (திர்மிதி)

அல்லாஹ்விடம் பிரார்த்திப்பது எமது கடமை. அவன் நாடினால் நாம் கேட்பதை உடனடியாக அங்கீகரிப்பான். அல்லது பிற்படுத்துவான். அல்லது இவ்வுலகில் தராமலே இருப்பான். எமது பிரார்த்தனையின் பிரதிபலனை நாம் கண்கூடாக காணாதபோதும் பிரார்த்திப்பதை கைவிட்டு விடக்கூடாது. அதில் நம்பிக்கை இழந்து விடவும் கூடாது. நிச்சயமாக அல்லாஹ் அதில் ஒரு நலவை நாடியிருப்பான்.

பிரார்த்திக்கும்போது பின்வரும் ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பது நபி வழியாகும்.

1. வுழூவுடன் பிரார்த்தித்தல்
2. கிப்லாவை முன்னோக்கி சப்தத்தைத் தாழ்த்திப் பிரார்த்தித்தல்
3. துஆவை ஹம்த், ஸலவாத்துடன் ஆரம்பித்து முடித்தல்
4. இருகரமேந்தி மனத்தூய்மை, பணிவு, உள்ளச்சம், எதிர்பார்ப்பு ஆகியவற்றுடன் பிரார்த்தித்தல்
5. பிரார்த்திப்பதற்கு முன் நல்லமல்கள் புரிவதுடன் நல்லமல்களை முன்னிறுத்திக் கேட்டல்
6. மூன்று முறை கேட்டல்
7. அல் குர்ஆனிலும் ஹதீஸிலும் வந்துள்ள துஆக்களைக் கொண்டு பிரார்த்தித்தல்
8. அல்லாஹ்வின் திருநாமங்களைக் கொண்டு பிரார்த்தித்தல்
9. பிரார்த்திப்பதற்கு மிகப் பொருத்தமான கால நேரங்களைப் பயன்படுத்திக் கொள்ளல். உதாரணமாக:
    - பின்னிரவு வேளைகள்
    - வெள்ளிக்கிழமை
    - ரமழான் மாதம்
    - அரபா தினம்
10. மிகச் சிறந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளல். உதாரணமாக:
    - மழை பொழியும்போது
    - அதானுக்கும் இகாமத்துக்கும் இடையில்
    - நோன்பு துறக்கும்போது
    - ஸுஜூதில் இருக்கும்போது
    - பிரயாணத்தின்போது

### 1. அல் குர்ஆனில் வந்துள்ள சில துஆக்கள்

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

''எங்கள் இறைவனே எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக. மறுமையிலும் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக. இன்னும் எங்களை (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக''. *(2:201)*

رَبَّنَا أَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَتَوَفَّنَا مُسْلِمِينَ

'''எங்கள் இறைவனே! எங்கள் மீது பொறுமையைச் சொரிவாயாக. முஸ்லிம்களாக (உனக்கு முற்றிலும் வழிப்பட்டவர்களாக எங்களை ஆக்கி), மரணிக்கச் செய்வாயாக'' *(7:126)*

### 2. அல் ஹதீஸில் வந்துள்ள சில சந்தர்ப்ப துஆக்கள்

உதாரணமாக ★ **பள்ளிவாசலுக்குள் நுழையும்போது ஓதும் துஆ**

اللَّهُمَّ افْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ

இறைவா! உனது அருள் வாசல்களை எனக்காகத் திறப்பாயாக ஆதாரம்: (முஸ்லிம் 1165)

★ **நோயாளியை நலன் விசாரிக்கச் சென்றால் ஓதும் துஆ**

اللَّهُمَّ رَبَّ النَّاسِ مُذْهِبَ الْبَاسِ اشْفِ أَنْتَ الشَّافِي لَا شَافِيَ إِلَّا أَنْتَ شِفَاءً لَا يُغَادِرُ سَقَمًا

இறைவா! மனிதர்களின் எஜமானே! துன்பத்தை நீக்குபவனே! நீ குணப்படுத்து. நீயே குணப்படுத்துபவன். உன்னைத் தவிர குணப்படுத்துபவன் யாருமில்லை. நோயை அறவே மீதம் வைக்காமல் முழுமையாகக் குணப்படுத்து! (புகாரி)

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

دُعَاءٌ    عِبَادَةٌ    حَمْدٌ    صَلَوَاتٌ    قِبْلَةٌ

### பயிற்சி

1. துஆ என்ற சொல்லின் மொழி ரீதியான கருத்துக்களைத் தருக.
2. துஆ வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இரு ஹதீஸ்களைக் கூறுக.
3. அல்லாஹ் எமது துஆவிற்கு எவ்விதமாகப் பதிலளிக்கிறான் என்பதைக் குறிப்பிடுக.
4. பிரார்த்திப்பதற்குப் பொருத்தமான மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

### செயற்பாடு

அல் குர்ஆனிலிருந்து ஐந்து துஆக்களையும் ஹதீஸில் இருந்து ஐந்து துஆக்களையும் ஒன்று திரட்டி ஒரு கையேடு தயாரியுங்கள்.



# ஆலிம்களை கண்ணியப்படுத்துவோம்

அல்லாஹ் அனைத்தையும் படைத்தவன். அனைத்தையும் அறிந்தவன். அவனே ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தான். அவனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் கற்றுக் கொடுத்தான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அவர்களிலிருந்து வழிவழியாகக் கற்று வந்தவர்களே ஆலிம்களாவர்.

இஸ்லாம் அறிவை விரும்புகிறது. அதனைக் கற்றுக் கொண்ட அறிஞர்களையும் விரும்புகிறது.

***‘‘அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கே கல்வி ஞானத்தைக் கொடுக்கிறான். எவர் கல்வி ஞானம் கொடுக்கப் பெறுகின்றாரோ அவர் நிச்சயமாக அநேக நன்மைகளைப் பெற்று விடுகிறார். ஆயினும், இந்தக் கல்வியின் மூலம் அறிவாளிகளைத் தவிர (மற்றெவரும்) உணர்வு பெற மாட்டார்கள்.’’ (2: 269)***

ஒரு முஸ்லிம் கற்றவராகவோ கற்பவராகவோ செவியேற்பவராகவோ அதை நேசிப்பவராகவோ தவிர (வேறொருவராக) இருக்க முடியாது.

ஆலிம்களின் மேன்மை பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

''உங்களில் ஒரு சாதாரண மனிதரை விட எனக்கிருக்கும் உயர்வைப் போல (அறிவின்றி) வணக்கத்தில் ஈடுபடும் ஒருவரை விட அறிவுடையவர் உயர்ந்தவராவார்.'' (திர்மிதி)

ஆலிம்கள் மார்க்கத்தை நன்கு கற்றவர்கள். அவர்களுடைய வாழ்வும் செயற்பாடுகளும் அதன் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். அவர்கள் இஸ்லாத்தின் அழைப்பாளர்களாகவும் இருப்பர். அவர்களது இருப்பும் பங்களிப்பும் சமூகத்துக்கு இன்றியமையாததாகும். அவர்களை நேசித்து கண்ணியப்படுத்துவது இஸ்லாம் கூறும் வழிகாட்டலாகும்.

ஒருவர் அறிவைத் தேடிப் புறப்பட்டால் அவர் அல்லாஹ்வின் அருளுக்கு உரித்துடையவராகின்றார். சுவர்க்கத்தைச் சென்றடையும் பாதையை அல்லாஹ் அவருக்கு இலகுபடுத்திக் கொடுக்கின்றான்.

அறிவைக் கற்பதற்கும், பாதுகாப்பதற்கும், அதனை மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கும், நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பதற்கும் ஆலிம்கள் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகள் இஸ்லாமிய வரலாற்றில் பதிவாகி உள்ளன. முஸ்லிம் உலகு பலவீனப்பட்ட போதெல்லாம் அக்கறையுடனும் உறுதியுடனும் அதனைப் பலப்படுத்தி நல்வழிப்படுத்திய பல அறிஞர்களின் தியாக வரலாறுகள் காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் அவர்கள் ஆட்சியாளர்களின் தண்டனைகளுக்கு ஆளாகினர்; சிறையிடப்பட்டனர்; மரணத்தையும் தழுவினர். இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ், இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹிமஹுல்லாஹ், ஸயீத் இப்னு ஸுபைர் ரஹிமஹுல்லாஹ் போன்றோர் அவ்வாறானோருக்கான உதாரண புருஷர்களாவர்.

மார்க்க அறிவு என்பது ஒளியாகும். ஓர் ஆலிம் பெற்றுக் கொண்ட கல்வி அவரையும் சமூகத்தையும் நல்வழிப்படுத்தும். அதன் மூலம் சமூகம் சீர்பெறும். மக்கள் சுவனம் செல்லும் பாக்கியத்தைப் பெறுவர். மார்க்க அறிவு வளர வளர ஆலிம்கள் மீதான கண்ணியமும் அதிகரிக்கும்.

''அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் வானம், பூமி ஆகியவற்றில் உள்ள படைப்பினங்கள் யாவும், புற்றுக்குள் இருக்கும் எறும்பு கடலுக்குள் இருக்கும் மீன்கள் உட்பட (அனைத்தும்) மனிதர்களுக்கு நேர்வழியைக் கற்றுத் தருபவர்களுக்காக (ஆலிமுக்காக) பிரார்த்திக்கின்றன.'' (திர்மிதி)

அகில உலகங்களையும் படைத்தாளும் ரப்பாகிய அல்லாஹ்வும் அவனது மலக்குகள் மற்றும் பெரிய, சிறிய படைப்புகள் யாவும் அறிவைப் பெற்ற ஆலிம்களுக்காக

பிரார்த்திப்பதாயின் அவர்கள் உயர்ந்த அந்தஸ்துடையவர்களாக இருப்பர். அறிஞர்களின் உயர்வோ தனித்துவமானது. நபிமார்களை அடுத்து இவ்வுலகிலும் மறுவுலகிலும் முன்னிலை வகிப்போரும் அவர்களே.

அறிவையும் அறிவீனத்தையும் சமப்படுத்த முடியாது. அறிஞன் தெளிவான ஒளியில் பயணிக்கின்றான். அறிவிலி இருளில் அங்கும் இங்கும் முட்டி மோதித் தட்டுத் தடுமாறித் தவிக்கிறான். அறிஞன் அகக் கண்ணால் பார்க்கிறான். அறிவிலி புறக் கண்ணால் மட்டுமே பார்க்கிறான்.

***''நபியே! நீர் கேளும். அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? நல்லுபதேசம் பெறுவோரெல்லோரும் (கல்வி) அறிவுடையோரே!'' (39: 9)***

***''நிச்சயமாக அல்லாஹ்வுடைய அடியார்களில் அவனுக்குப் பயப்படுவதெல்லாம் உலமாக்கள் (கல்விமான்கள்)தாம். (35: 28)***

### ஆலிம்களை எவ்வாறு கண்ணியப்படுத்துவது?

- ஆலிம்கள் நபிமாரின் வாரிசுகள். எனவே அவர்களின் பணி மிக உயர்ந்ததாகும் என்ற சிந்தனையை நம்மத்தியில் வலுப்படுத்த வேண்டும்.
- அவர்களை கௌரவத்தோடு நோக்க வேண்டும்.
- அவர்களின் அறிவுரைகளைச் செவிமடுக்க வேண்டும்.
- அவர்களுடன் வீண் விவாதம் செய்ய முற்படக் கூடாது.
- அவர்களுக்குச் செய்யும் உபகாரம் ஏனையோருக்குச் செய்யும் உபகாரத்தை விட சிறந்ததாகும்.
- அவர்களின் பொருளாதாரத்தை விட, மார்க்க ஞானத்தையே நோக்க வேண்டும்.
- அவர்களின் ஆலோசனையைப் பெற்றுக் காரியமாற்றப் பழகிக் கொள்ள வேண்டும்.
- அவர்களின் நேசம் மறுமையிலும் நற் பலன் நல்கும்.

இவ்வாறு செயற்படுவதன் ஊடாக மார்க்கத்தைப் பேணும் பாக்கியம் கிடைக்கப் பெறும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

''கற்பிப்பவரும் கற்றுக் கொண்டிருப்பவரும் நேர்வழியில் இருக்கின்றனர். இந்நிலை இல்லாதவர்களிடம் எந்த நல்ல வழியும் இல்லை. (இப்னு மாஜா)

***எனவே! நாமும் கற்போம். ஆலிம்களின் சிறப்பை அறிந்து அவர்களை கண்ணியப்படுத்துவோம்.***

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

عَالِمٌ        عُلَمَاء

### பயிற்சி

1. ஆலிம்களின் உயர்வு ஹதீஸில் எவ்வாறான உதாரணம் மூலம் விளக்கப்பட்டுள்ளது?
2. அறிவு தேடிப் புறப்பட்டோர் எப்பாதையில் பயணிக்கின்றனர்?
3. ஆலிம்களுக்காக யார் யாரெல்லாம் பிரார்த்திக்கின்றனர்?
4. ஆலிம்களின் சிறப்பைக் கூறும் அல் குர்ஆன் வசனம் ஒன்றும் ஹதீஸ் ஒன்றும் தருக.
5. ஆலிம்களை கண்ணியப்படுத்தும் முறையைக் குறிப்பிடுக.
6. சமூகத்தில் ஆலிம்களின் அவசியம் பற்றிக் குறிப்பிட்டு உமது நண்பனுக்கு மடல் ஒன்று வரைக.



# 12

# நற்குணம் பேணுவோம் துர்க்குணம் தவிர்ப்போம்

அது உணவுப் பொருட்கள் குறைவாக இருந்த காலம். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஓர் ஆடு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. தமது குடும்பத்தாரிடம் ''இந்த ஆட்டைச் சமையுங்கள்'' என்று கூறினார்கள். நான்கு பேர் சுமக்கக்கூடிய பெரிய பாத்திரம் ஒன்று இருந்தது. அதில் அந்த உணவு வைக்கப்பட்டு கொண்டு வரப்பட்டது. உணவு கிடைக்காத தோழர்களெல்லாம் அழைக்கப்பட்டனர். உணவுத் தட்டைச் சுற்றி அனைவரும் அமர்ந்து சாப்பிடலானார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களுடன் அமர்ந்து கொண்டார்கள். கூட்டம் அதிகமாக இருந்ததால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மண்டியிட்டு அமர்ந்து மற்றவர்களுக்கு இடம் கொடுத்தார்கள்.

அப்பொழுது ஒரு கிராமவாசி, ''என்ன! இப்படி உட்காந்திருக்கிறீர்களே!'' என்று ஆச்சரியத்தோடு கேட்டார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''அல்லாஹ் என்னை அடக்குமுறை செய்பவனாகவும், மமதை பிடித்தவனாகவும் ஆக்கவில்லை. பெருந்தன்மை மிக்க அடியானாகவே ஆக்கியுள்ளான்'' என்று விடையளித்தார்கள். (அபூதாவூத்)

மேற்கூறப்பட்ட சம்பவத்தின் மூலம் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது? நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர். கீர்த்தி மிக்க தலைவர். ஆனாலும், மக்களோடு மக்களாகப் பழகி வந்த அழகிய குணம் பற்றி என்ன கருதுகிறீர்கள்? இவ்வாறான நற்குணத்தை நீங்களும் விரும்புகிறீர்களா? உண்மையான முஸ்லிம்கள் நற்குணங்களை என்றும் விரும்புவார்கள்.

குணங்கள் இரு வகைப்படும். ஒன்று நற்குணம். மற்றையது துர்க்குணம். எல்லோரும் விரும்பும் குணம் நற்குணமாகும். வெறுக்கும் குணம் துர்க்குணமாகும். இஸ்லாம் முஸ்லிம்களுக்கு அழகிய நற்குணங்களைப் போதிக்கின்றது. அவற்றின் மூலம் வாழ்க்கை திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் அமையும். அதனூடாக அழகிய சமூக வாழ்க்கை உருவாகும். நல்ல, தீய குணங்களை வைத்தே மனிதர்கள் அளவிடப்படுகிறார்கள். அல் குர்ஆன் நற்குணங்களைப் போதிக்கின்றது. துர்க் குணங்களைத் தடை செய்கின்றது.

அல்லாஹ்வின் தூதர் நபி ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நற்குணங்கள் நிறைந்தவராகக் காணப்பட்டார்கள்.

''உங்களை விட சிறந்த நற்குணம் கொண்டவரை நாம் கண்டதே இல்லை'' என (ஸஹாபாத்) தோழர்கள் கூறுவார்கள்.

நபி ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பண்புள்ள தூதராக, வழிகாட்டியாக, தளபதியாக, தந்தையாகவெல்லாம் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அப்பொழுதெல்லாம் அவர்களிடமிருந்து வெளிப்பட்டது அழகிய நற்குணம் மாத்திரம்தான். அதற்குச் சான்று கூறுகிறது அல் குர்ஆன்.




***''நபியே! நிச்சயமாக நீர் மகத்தான நற்குணங்கள் உடையவராகவே இருக்கின்றீர்.'' (68: 4)***

''மறுமை நாளில் ஒரு முஃமினின் தராசில் அதிக பாரத்தை ஏற்படுத்துவது நற்குணம்தான். நிச்சயமாக அல்லாஹ் கெட்ட பேச்சுக்கள் பேசுபவனையும் தீய செயல்கள் செய்பவனையும் கண்டு கோபப்படுகிறான்'' என்று நபி ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (திர்மிதி)

மறுமை நாளில் மனிதர்களுடைய நன்மைகளும் தீமைகளும் மீஸான் எனும் தராசில் நிறுக்கப்படும். நன்மைத் தட்டு கனமானால் அவர் மகிழ்ச்சி பொங்க சுவனபதி நுழைவார். தீமையின் தட்டு கனமாகி விட்டால் அவர் எரியும் நரகில் தள்ளப்படுவார். அது மிகப் பெரும் கைசேதமாகும். அப்படிப்பட்ட இக்கட்டான நிலைமை ஏற்படாமல் நற்குணம் எம்மைப் பாதுகாக்கும்.

***''நீங்கள் (ஒருவருக்குச் செய்யும்) யாதொரு நன்மையை வெளியாக்கினாலும் அல்லது அதனை மறைத்துக் கொண்டாலும் அல்லது (ஒருவர் உங்களுக்குச் செய்த) யாதொரு தீங்கை நீங்கள் மன்னித்து விட்டாலும் அது உங்களுக்கே நன்று.'' (4: 149)***

ஒரு முஸ்லிம் நற்குணங்களை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். அதன் மூலம் பல்வேறு நற்பலன்களைப் பெறமுடியும். வாழ்வில் மகிழ்ச்சியும் திருப்தியும் உண்டாகும். ஏராளமான நற்குணங்கள் இருக்கின்றன. அவற்றில் சில பின்வருமாறு:

**வாழ்வில் எடுத்து நடக்க வேண்டிய சில நற்குணங்கள்:**

- இறை பக்தியுடன் வாழ முயற்சித்தல்
- சத்தியம் தவறாது உண்மை பேசுதல்
- கொடுத்த வாக்கை நிறைவேற்றுதல்
- புன்முறுவலுடன் மற்றவரை எதிர்கொள்தல்
- பணிவோடு நடத்தல்
- பொறுமை, சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்தல்
- பாவங்களையும் தவறுகளையும் வெறுத்தல்
- நல்லோர் தொடர்புகளைப் பேணி வருதல்
- சமாதானத்தை விரும்புதல்
- வணக்கங்களில் அதிக கவனம் செலுத்துதல்
- முஸ்லிம், முஸ்லிம் அல்லாதாருடனும் நாணயத்துடன் நடத்தல்
- இயலாதோருக்கு இரக்கம் காட்டுதலும் உதவி செய்தலும்

ஒழுக்கம் ஓங்கி நிற்கும் வரையில்தான் சமுதாயம் உயர்வு பெறும். ஒழுக்கத்தில் தவறிவிடும்போது சமுதாயம் வீழ்ச்சியடையும். நற்குணம் தனக்கும் பிறருக்கும் நலவை உண்டாக்கும். துர்க்குணம் அதற்கு எதிரான விளைவயே ஏற்படுத்தும். நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நன்மை பற்றியும் தீமை பற்றியும் விளக்கம் கேட்டபோது ''நன்மை என்பது நற்குணம்தான். தீமை என்பது உமது உள்ளத்தை உறுத்துவதும் மக்கள் அதைப் பார்த்து விடுவதை நீர் வெறுப்பதுமாகும்'' என்று கூறினார்கள். (முஸ்லிம்)

**வாழ்வில் தவிர்த்துக் கொள்ள வேண்டிய சில துர்க்குணங்கள்:**

- பொய் கூறுதல்
- பெருமையடித்தல்
- பொறாமை கொள்ளல்
- கோள் சொல்லல்
- வஞ்சனை செய்தல்
- பட்டப் பெயர் கூறுதல்

- குறை கூறுதல்
- கெட்ட வார்த்தை பேசுதல்
- கேலி, கிண்டல் செய்தல்
- நன்றி மறத்தல்
- சண்டை சச்சரவுகளில் ஈடுபடுதல்
- போதை வஸ்துக்கள் பாவித்தல்
- பெற்றோரை நோவினை செய்தல்
- பிறர் துன்பத்தில் இன்பம் காணல்

துர்க் குணங்கள் ஷைத்தானின் தீங்குகளில் உள்ளவையாகும். அவன் தீய வழிகளையே மனிதர்களுக்கு அழகாக்கிக் காட்டுவான். அவன் தன்னைப் பின்தொடர்பவர்களை நரகில் தள்ளி விடுவான். எனவேதான் ஷைத்தானின் தீய வழிகளை விட்டும் விலகிக் கொள்ளுமாறு அல் குர்ஆன் எச்சரித்துக் கொண்டிருக்கின்றது. துர்க் குணங்களால் பலவிதமான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அதன் காரணமாகப் பல்வேறு துன்பங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி வரும். அவ்வாறான சில விளைவுகள் பின்வருமாறு:

- நிம்மதி இல்லாத அதிருப்தியான மனநிலை
- நற்செயல்கள் பற்றிய வெறுப்பு
- பாவச் செயல்கள் மீது நாட்டம்
- தீயவர்களுடன் தொடர்பு அதிகரித்தல்
- நன் மக்களோடு உள்ள தொடர்பு அறுபடல்
- சமூகத்தை விட்டு ஒதுங்கிச் செல்ல முற்படல்
- சமூக விரோதிகளில் ஒருவராக அடையாளப்படுத்தப்படல்
- சுவர்க்கம் செல்லும் பாக்கியத்தை இழத்தல்

‘‘ஒரு முஸ்லிமின் உரிமையை தன் வலக் கரத்தால் ஒருவன் எடுத்தால் அவனுக்கு அல்லாஹ் நரகத்தைக் கட்டாயமாக்கி விட்டான். அவன் மீது சுவர்க்கத்தைத் தடை செய்து விட்டான். அது ஒரு ‘அராக்’ மரக் குச்சியாக இருந்தாலும் சரி’’ என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

**எனவே! நற்குணத்தைப் பேணி நற்குணசீலர்களாக வாழ வேண்டும். தீய குணங்களை விட்டும் தூரமாகி விலகிட வேண்டும். அதுவே உண்மை முஸ்லிமின் பண்பாகும்.**

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொல்

صَحَابَة

### பயிற்சி

1. இரு வகைக் குணங்களும் எவை?
2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்குணம் பற்றி அல் குர்ஆன் எவ்வாறு வர்ணிக்கின்றது?
3. நீங்கள் மிக விரும்பும் நற்குணங்கள் ஐந்து தருக.
4. நற்குணத்தால் மறுமையில் கிடைக்கும் பிரதிபலன் யாது?
5. அடுத்தவர் உரிமைகளைப் பறித்தவரின் நிலை யாது?
6. நற்குணங்களால் ஏற்படும் நன்மைகள் ஐந்து தருக.
7. துர்க்குணம் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தும்?
8. நற்குணம் பேணி, துர்க்குணம் தவிர்ப்போம் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்று தயாரிக்குக.



# 13

# சிறியோருக்கு அன்பு காட்டுவோம்

ஒரு நாள் கலீபா அபூபக்ர் ஸித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அஸர் தொழுதுவிட்டு நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்களுடன் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் கூடவே சென்றார்கள். அப்பொழுது, சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைக் கண்டு அவரை அப்படியே தூக்கி, தமது தோழின் மீது வைத்துக் கொண்ட அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ''அல்லாஹ்வின் மீது ஆணையாக, இவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையே உருவத்தில் ஒத்திருக்கின்றார். அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப் போன்றில்லையே'' எனக் கூறினார்கள். அதனைக் கேட்டு அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் புன்னகைத்தவாறு பக்கத்தில் நின்று கெண்டிருந்தார்கள். (புகாரி, முஸ்லிம்)

இச்சம்பவத்தின் மூலம் நீங்கள் எதனை விளங்கிக் கொள்கிறீர்கள்? முஸ்லிம் சமூகத்தில் சிறுவர்களுக்கு எந்தளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது? அவர்கள் மீதான அக்கறையைப் புரிந்துகொள்ள முடிகிறதா? ஸஹாபாக்கள் சிறுவர்கள் மீது அன்பு செலுத்தி வந்துள்ளார்கள். அவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளார்கள். அவர்களை மகிழ்வித்துள்ளார்கள். தாமும் மதிக்கப்படுகிறோம் என்ற மனநிலையை ஏற்படுத்தியுள்ளார்கள். இஸ்லாம் சிறுவர்கள் மீது அன்பு செலுத்தி வருமாறு வலியுறுத்தியுள்ளமையே அதற்கான காரணமாகும்.

இன்றைய சிறுவர்கள் அனைவரும் எதிர்கால சமுதாயத்தின் அங்கத்தினராவர். அவர்கள் ஆரோக்கியமாகவும் சிறந்த ஆளுமை படைத்தவர்களாகவும் வளர்க்கப்பட வேண்டும். அவ்வாறு வளர்க்கப்படும் போதுதான் அவர்களால் உலக மக்கள் சிறந்த பயனை அடைய முடியும். இல்லாவிட்டால் சமூகத்தில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட இடமுண்டு.

சிறுவர்கள் மூத்தவர்களின் அன்பையும் அரவணைப்பையும் பாதுகாப்பையும் எதிர்பார்ப்பவர்கள். அது அவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டும். அவர்கள் மூத்தவர்களிடமிருந்து பல விடயங்களை எதிர்பார்க்கிறார்கள். உணவு உடலை வளர்ப்பது போன்று, அன்பும் ஆதரவும் உள்ளத்தையும் நற் சிந்தனைகளையும் வளர்க்கின்றன. அன்பு காட்டப்படாத சிறுவர்கள் விரக்தியடையத் தொடங்கி விடுவார்கள். சமூகத்தை விட்டும் ஒதுங்க முயற்சிப்பார்கள். உற்சாகம் இழந்து குற்றம் புரியத் தொடங்குவார்கள். நாளடைவில் அவர்கள் பெரும் குற்றவாளிகளாக மாறிவிடக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குழந்தையை முத்தமிடுவதைப் பார்த்து வியப்படைந்து, ''எனக்கும் பதினொரு பிள்ளைகள் உள்ளனர். ஒருவரைக்கூட நான் இவ்வாறு முத்தமிட்டதில்லையே!'' என வியந்து கூறிய ஒரு கிராமவாசிக்கு, ''அல்லாஹுத் தஆலா உம்முடைய உள்ளத்திலிருந்து கருணையைப் பறித்து விட்டால் நான் என்ன செய்வது?'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய பதில் எமது கவனத்தை ஈர்ப்பதாகும்.

உலகில் மனித இனம் தொடர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக அல்லாஹ் குழந்தைகளைப் படைக்கிறான். குழந்தைகள் இறைவனின் அருட் கொடைகளாகும். எல்லாக் குழந்தைகளும் நல்லவர்களாகவே பிறக்கின்றனர். தீயவர்களாக எவரும் பிறப்பதில்லை. பெரியவர்களின் வளர்ப்பு, வழிகாட்டல் மூலமே அவர்கள் நன்மையின் பக்கமோ அல்லது தீமையின் பக்கமோ சாய்கின்றனர். மூத்தவர்கள் அவர்கள் மீது காட்டும் அன்பு அவர்களை நல்வழியில் செலுத்தும். பெற்றோர் தமது பிள்ளைகள் மீது அன்பு காட்ட வேண்டும். அதன் மூலம் அவர்களும் அதனைக் கற்றுக் கொண்டு செயல்படுவர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டில் வளர்ந்த அபூஹப்ஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: ''நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டில் வளர்ந்தேன். (அப்பொழுது) ஒரு முறை உணவு உண்ணும்போது பாத்திரத்தில் என் கை அங்குமிங்கும் அலைந்தது. ''சிறுவனே! அல்லாஹ்வின் பெயர் கூறி சாப்பிடத் தொடங்கு. வலது கரத்தால் சாப்பிடு. உனக்கு அருகில் இருப்பதை சாப்பிடு'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அதன் பின்பு அதுவே எனது உணவுண்ணும் பழக்கமாகி விட்டது.'' (புகாரி, முஸ்லிம்)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறுவர்கள் மீது அதிகமாக அன்பு செலுத்துவார்கள். அவர்களுக்கு ஸலாம் கூறுவார்கள்; அவர்களுக்காகப் பிரார்த்திப்பார்கள்; தமது வாகனத்தில் ஏற்றிச் செல்வார்கள். தலையைத் தடவி விடுவார்கள்; உண்பதற்குப் பழங்களையும் வேறு உணவுப் பொருட்களையும் கொடுப்பார்கள். அவர்களுக்கு நல் ஒழுக்கங்களை சொல்லிக் கொடுப்பார்கள். அவர்களின் உரிமைகளை மதித்து நடக்குமாறு அதிகமாக உபதேசித்துள்ளார்கள்.



ஒரு முறை அம்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மனைவி ''நான் உனக்கொன்று தரப்போகிறேன்'' என்று கூறி தனது மகனை அழைத்தார். ''அவருக்கு எதைக் கொடுக்கப் போகிறீர்கள்?'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்க, ''ஈத்தம் பழம்'' என்றார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''நீங்கள் அந்த ஈத்தம் பழத்தை அவருக்குக் கொடுக்கவில்லை என்றால் ஏமாற்றியதாக உங்கள் பதிவேட்டில் எழுதப்படும்'' எனக் கூறினார்கள். (அபூதாவூத்)

சிறுவர்கள் பெரியவர்களிடமிருந்தே நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொள்கிறார்கள். தமது மனதுக்கு பிடித்தமானவர்களைப் போன்று நடந்து கொள்ள அவர்கள் முயற்சிப்பார்கள். உணவு, உடை, மார்க்க விளக்கம், அன்பு, உண்மை, நேர்மை, கண்ணியம், கருணை, பெரியோரை மதித்தல், சிறியோர் மீது இரங்குதல், பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், இறை வணக்கம் புரிதல் போன்றன பெரியவர்களைப் பின்பற்றி அவர்கள் ஈடுபடும் செயல்களாகும். அதனால் சிறந்த வழிமுறைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பெரியவர்களைச் சார்ந்ததாகும். அதுவே சிறந்த சமூகப்பற்றுமாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறுவர்களை இளம் பருவத்திலிருந்தே பக்குவப்படுத்தினார்கள். ஒரு தடவை ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸதகாவாகக் கிடைத்த ஈத்தம் பழங்களிலிருந்து ஒன்றைத் தனது வாயில் போட்டுக் கொண்டார். இதைக் கவனித்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''துப்பிவிடும், துப்பிவிடும். நாம் ஸதகாவுடைய பொருட்களை உண்பதில்லை என்பது உமக்குத் தெரியாதா?'' எனக் கேட்டார்கள். (புகாரி, முஸ்லிம்)

நன்மை - தீமை, ஹலால்- ஹராம், நற்பழக்கம்-தீய பழக்கம் பற்றிய புரிதல் சிறிய வயதிலிருந்தே பயிற்றுவிக்கப்பட வேண்டும். அதனை உறுதியுடன் கடைப்பிடித்தும் வர வேண்டும். இதில் கவனயீனமாக இருக்கக் கூடாது. அதில் அவர்கள் உறுதியுடன்

இருக்கிறார்களா என்பதையும் கவனித்து வர வேண்டும். இவை சிறிய வயதில் மனதில் பதிந்துவிட்டால் பிறகு எக்காலத்திலும் அவர்கள் வழி தவற மாட்டார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையில் ஸுஜதாவிலிருக்கும் போது குழந்தைகள் முதுகின் மீது ஏறி விளையாடுவர். அப்பொழுதெல்லாம் அவர்களுக்காகத் தாமதித்தே ஸுஜூதிலிருந்து எழுவார்கள். இதன் மூலம் மிக முக்கிய கடமையான தொழுகையில் கூட அவர்கள் சிறுவர்கள் மீது காட்டிய அன்பை புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

சிறியோர் மீது அன்பு காட்டுவதும் பெரியோருக்கு மரியாதை செய்வதும் இஸ்லாமிய பண்பாடாகும். இதனை மீறி நடப்போர் இஸ்லாமியர் அல்லர் என இஸ்லாம் எச்சரிக்கின்றது.

**எனவே, சிறியவர் மீது அன்புகாட்டி அரவணைத்தும் பெரியோருக்கு மரியாதை செய்தும் வாழ்வோமாக.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

حَلَالٌ حَرَامٌ سُجُوْدٌ رُكُوْعٌ

### பயிற்சி

1. சிறியோர் மூத்தோரிடமிருந்து எதிர்பார்க்கும் மூன்று விடயங்களைக் கூறுக.
2. ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு யாருடைய மகன்? அவரை அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு ஏன் தோளில் தூக்கி வைத்துக்கொண்டார்கள்?
3. அன்பு காட்டப்படாத சிறுவர்களிடம் ஏற்படும் பாதிப்புகள் மூன்று தருக.
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபூஹப்ஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கூறிய அறிவுரை யாது?
5. பெற்றோர் ஆயினும் பிள்ளைகளிடம் பொய் கூறக் கூடாது என்பதை வலியுறுத்தும் ஹதீஸைத் தருக.
6. சிறியோர் மீது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்பு காட்டிய முறையைக் கூறுக.
7. நீங்கள் உங்களை விட வயதில் சிறிய ஒருவர் மீது அன்பு காட்டிய அனுபவம் ஒன்றைக் குறிப்பிடுக.




# பிறருக்கு உதவுவோம்

## அனாதைகள், விதவைகள் நலன் பேணுவோம்

ஒரு முறை ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து தன்னுடைய உள்ளம் கடுமையாக இருப்பதாகக் கூறினார். அப்போது, ''உங்களுடைய உள்ளம் மென்மையடையவும் உங்கள் இலட்சியம் நிறைவேறவும் விரும்பினால் அநாதைகளுடன் இரக்கமாக நடந்து கொள்ளுங்கள். இரக்கமாக அவர்களின் தலையைத் தடவுங்கள். நீங்கள் உண்பவற்றிலிருந்து அவர்களுக்குக் கொடுங்கள். (இவற்றைச் செய்யும்போது) உங்கள் உள்ளம் மிருதுவாகி விடும். உங்கள் தேவைகள் நிறைவு செய்யப்படும்'' என்று கூறினார்கள். (தபரானி)

அல்லாஹ் உலகத்தைப் படைத்து அதில் பல கோடி மனிதர்களையும் படைத்திருக்கின்றான். இவ்வுலகும் இதில் உள்ளவையும் ஒரு சிலருக்காக மட்டும் படைக்கப்படவில்லை. இவ்வுலகில் வாழும் அனைவருக்குமாகவே அவை படைக்கப்பட்டுள்ளன.

எனவே, தான் மட்டும் உண்டு உடுத்து அனுபவிக்க வேண்டும் எனும் குறுகிய நோக்குடனும் சுயநலத்துடனும் வாழ்வது தவறாகும். எல்லோரும் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று விரும்புவதும் அதற்காக உழைப்பதும் சிறப்பானதாகும். அன்பு, ஆதரவு, உணவு, உடை போன்ற தேவைகள் எல்லோருக்கும் பொதுவானவையாகும். நாம் சிறப்பாக வாழ விரும்புவதைப் போலவே ஏனையோரும் விரும்புவர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதனையே, ‘‘தாம் விரும்புவதை தன் சகோதரனுக்கும் விரும்பும் வரை உங்களில் ஒருவரும் உண்மை விசுவாசியாக மாட்டார்’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். *(புகாரி, முஸ்லிம்)*

பெற்றோரை இழந்தோர் அனாதைகள். கணவனை இழந்தோர் விதவைகள். அனாதைகளும் விதவைகளும் கவனிப்பாரற்று பரிதவிப்பதை இன்று நாம் காண்கிறோம். ஒவ்வொருவருக்கும் பல்வேறு தேவைகள் உள்ளன. அவற்றை நிறைவேற்ற உரியவர்கள் இருக்கும்போது அதன் சுமை விளங்குவதில்லை. பெற்றோர், பாதுகாவலர்களை இழக்கும்போதுதான் தேவைகளின் சுமையும் அதனை நிறைவேற்ற முடியாத பரிதவிப்பும் புரிகின்றன. அப்பொழுது வாழ்க்கை கசந்து விரக்தி நிலை தோன்றுகின்றது. அதன் காரணமாக அவர்கள் நெறிபிறழவும் வாய்ப்பு உண்டாகலாம்.

ஆகவேதான் ***‘‘அநாதைகளைக் கடிந்து கொள்ளாதீர். யாசிப்பவனை விரட்டாதீர்’’ (93: 9,10)*** என அல் குர்ஆன் போதனை செய்கிறது.

‘‘விதவைக்கும் ஏழைக்கும் உழைப்பவர்; பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிடுகையில் அவர் இறைவழியில் போராடுபவர், ஆர்வத்துடன் நின்று வணங்குபவர், தொடராக நோன்பு நோற்பவர் போன்றவராவார்’’ *(புகாரி, முஸ்லிம்)* எனக் கூறியுள்ளார்கள்.

பணவசதி உள்ளவர்களுக்கு வறுமை, பசி, பட்டினி போன்றன புரியாமற் போய்விடுகின்றன. ஆடம்பரம் அவர்களின் கண்களை மறைத்து விடுகின்றது. இதனால் ஏழைகள், அனாதைகள், விதவைகளின் துயரமும் அவர்களின் ஏக்கப் பெருமூச்சும் காதுகளில் விழாமலேயே போய் விடுகின்றன. அவர்களின் உள்ளக் குமுறல்கள் கவலையோடும் கண்ணீரோடும் போராடிக் கரைந்து போகின்றன.

***‘‘(நபியே! மறுமையின்) தீர்ப்பைப் பொய்யாக்குவோனை நீர் (கவனித்துப்) பார்த்தீரா? (திக்கற்ற) அனாதைகளை விரட்டுபவன் அவன்தான். அவன் ஏழைகளுக்கு (ஆகாரமளிக்காததுடன்) ஆகாரமளிக்கும் படி (பிறரைத்) தூண்டுவதுமில்லை.’’ (107:1-3)***

அனாதைகளை மிகவும் நன்றாக நடத்த வேண்டும். அவர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டும். அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும். இவற்றை உளத் தூய்மையோடு செய்யும்போது இதுவும் ஒரு வணக்கமாகவே கருதப்படும். இவ்வாறான பண்புகளின் காரணமாக அவர்கள் நேர்வழியில் சிந்திக்கவும் செயல்படவும் வழி பிறக்கும்.

‘‘தனக்குரிய அல்லது தனக்குத் தெரியாத ஓர் அனாதையைப் பொறுப்பேற்றவரும் நானும் சுவர்க்கத்தில் இவ்வாறு இருப்போம்’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது இரு விரல்களை இணைத்துக் காட்டி விளக்கம் கூறியுள்ளார்கள்.

தனது குடும்பத்திலுள்ள அனாதையானாலும் வேறு அனாதையானாலும் அவர்கள் மீது காட்டும் அன்பு, ஆதரவிற்காக சுவர்க்கத்தில் நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களுடன் இருக்கும் பாக்கியம் கிடைக்கும். அதுவும் சுட்டு விரலும் நடு விரலும் போல நெருக்கமாக இருப்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.



''யதீம்'' என்று அழைக்கப்படும் அனாதைகளுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் அநீதியாக நடந்து கொள்ளக் கூடாது. அவ்வாறு செய்வது மிகப் பெரும் துரோகமாகும். அவர்களுக்குரிய பொருட்கள், சொத்துக்கள் எதுவாக இருப்பினும் அவற்றைப் பாதுகாத்துப் பராமரித்து உரிய வயதை அடையும்போது அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்களுக்குப் பாதுகாவலர் இல்லை என்பதற்காக அவர்கள் விடயத்தில் அநீதி இழைக்கக் கூடாது.

***''எவர் அநாதைகளின் பொருட்களை அநியாயமாக விழுங்கி விடுகிறார்களோ, அவர்கள் தங்கள் வயிறுகளில் நிச்சயமாக நெருப்பையே கொட்டிக் கொள்கின்றார்கள். பின்னர் (மறுமையில்) கொளுந்து விட்டெரியும் நெருப்பினுள் செல்வார்கள்.'' (4: 10)***

சமூகத்தில் விதவைப் பெண்கள் அதிகம் காணப்படுகிறார்கள். அவர்களும் கவனிக்கப்பட வேண்டும். அவ்வாறு சரியான முறையில் பராமரிக்கப்படாவிட்டால், அவர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் மிகப் பெரும் சிரமத்திற்கு ஆளாவர்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விதவைகளின் மறு வாழ்வுக்காகப் பல வழி காட்டல்களை வழங்கியுள்ளார்கள். விதவைகளை மறுமணம் செய்தார்கள். அவ்வாறே ஸஹாபாக்களையும் மறுமணம் செய்து கொள்ளுமாறு ஆர்வமூட்டினார்கள்.

சமூகத்தில் வலது குறைந்தோர், தீராத நோயாளிகள், கவனிப்பாரற்ற முதியோர் என மற்றவர்களின் உதவியை வேண்டி நிற்கும் பலர் உள்ளனர். அவர்களது இயலாமை, துன்பம் துயரங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுக்கும் உதவி ஒத்தாசை புரிந்து வர வேண்டும்.

''ஏழைகள் ஒதுக்கப்பட்டு, வசதிபடைத்தவர்கள் மட்டும் அழைக்கப்படும் வலீமா விருந்துதான் (திருமண உணவு) விருந்துகளில் மிகக் கெட்டதாகும்.'' (புகாரி, முஸ்லிம்)

''உங்கள் மத்தியிலுள்ள பலவீனர்களின் காரணமாகவே உங்களுக்கு உதவி செய்யப்படுகிறது. அவர்கள் காரணமாகவே உங்களுக்கு உணவளிக்கப்படுகிறது.'' (புகாரி)

''எனக்காக, பலவீனர்களைத் தேடுங்கள். நீங்கள் உதவி செய்யப்படுவதும், உணவளிக்கப்படுவதும் உங்கள் மத்தியில் உள்ள பலவீனர்களால்தான் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (அபூதாவூத்)

**சமூகத்தின் அங்கங்களான அனாதைகள், விதவைகள், நோயாளிகள், முதியோர் மற்றும் பலவீனர்கள் ஆகியோரை இனம் கண்டு அவர்களுக்கு முடியுமான அனைத்து உதவி ஒத்தாசைகளும் புரிந்து சமூகப் பாதுகாப்பையும் இறை அருளையும் பெற்றுக் கொள்வோம்.**

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

يَتِيْمٌ　　وَلِيْمَةٌ

## பயிற்சி

**இடைவெளி நிரப்புக:**

1. அநாதைகளுக்கு இரக்கம் காட்டுவதனால் இதயத்தில் .................. உண்டாகிறது.
2. தான் விரும்பியதை தன் ............................... விரும்பும் வரை உங்களில் ஒருவர் ........................ மாட்டார்.
3. ........................... கடிந்து கொள்ளாதீர் ............................... வெருட்டாதீர் என்பது அல் குர்ஆனின் போதனையாகும்.
4. மறுமையின் தீர்ப்பைப் பொய்யாக்குபவன் யாரென்றால் ....................... வெருட்டுபவனும் ஏழைகளுக்கு ............................. ......... அளிக்காதவனுமாவான்.
5. .................................. ஒதுக்கப்பட்டு ............................... அழைக்கப்படும் திருமண விருந்து மிகக் கெட்டது.
6. நீங்கள் .............................. செய்யப்படுவதும் .................... அளிக்கப்பெறுவதும் பலவீனர்களின் காரணத்தினாலாகும்.



# பாவங்களிலிருந்து விலகி நிற்போம்

***''எவர் (பாவங்களை விட்டு விலகிப்) பரிசுத்தவானாகிறாரோ அவர் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டார்.''  (87: 14)***

''நிச்சயமாக அல்லாஹ் நன்மைகளையும் தீமைகளையும் பதிவு செய்கிறான்'' என்று கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தொடர்ந்து பின்வருமாறு விபரித்தார்கள்.

''ஒருவர் நன்மை செய்ய நினைத்துவிட்டால் அல்லாஹ் அதற்கு ஒரு முழு நன்மையைப் பதிவு செய்கிறான். அவர் அதனை செய்துவிட்டால் அதற்கு பத்து முதல் எழுநூறு நன்மைகள், அல்லது அதற்கும் அதிகமாக எழுதுகிறான். ஒருவர் தீமை செய்ய எண்ணி, அதை அவன் செய்யாது விட்டு விட்டால், அல்லாஹ் அதற்கு ஒரு முழுமையான நன்மையை எழுதி விடுகிறான். அதை அவன் செய்துவிட்டால், அதற்கு ஒரு பாவத்தையே எழுதுகிறான். (புகாரி, முஸ்லிம்)

மனிதர்களுடைய செயல்கள் இரு வகைப்படும். ஒன்று நன்மையானவை; மற்றையது பாவமானவையாகும்.

நன்மையானவை மக்கள் விரும்புகின்றவையாகும். பாவமானவை, தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் தீங்கு விளைவிப்பவையாகும். பாவங்கள் நடைபெறுவதன் காரணமாக மானுட தர்மம் மீறப்படுகிறது. சமூகத்தின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகிறது. உலகில் குழப்பங்கள் மென்மேலும் அதிகரிக்கின்றன.

நன்மைகளை அதிகமாக செய்யுமாறும் பாவகாரியங்களிலிருந்து முழுமையாக விலகி நடக்குமாறும் இஸ்லாம் எமக்குக் கட்டளையிடுகிறது. நன்மையான செயல்கள் மனத்திருப்தியையும் மனமகிழ்வையும் ஏற்படுத்தி எம்மை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும். பாவமான செயல்கள் மனதில் குற்ற உணர்வை ஏற்படுத்தி உள்ளத்தை இருளடையச் செய்யும்; நரகத்திலும் வீழ்த்திவிடும். பாவத்திற்குரிய கூலி தீமையே ஆகும். பாவங்கள் புரிவோரைத் தண்டிப்பதாக அல் குர்ஆன் எச்சரிக்கை செய்கின்றது.

***''ஆகவே (நம்மைச்) சந்திக்கும் உங்களுடைய இந்நாளை நீங்கள் மறந்து விட்டதன் பலனை, நீங்கள் அனுபவியுங்கள். (இந்நாளை நீங்கள் மறந்தவாறே இன்று) நாமும் உங்களை மறந்து விட்டோம். நீங்கள் செய்து கொண்டிருந்த (தீ)வினையின் காரணமாக என்றென்றும் நிலையான வேதனையைச் சுகித்துக் கொண்டிருங்கள்.'' (32: 14)***

பாவங்கள் இரு வகைப்படும். ஒன்று சிறுபாவம், மற்றையது பெரும் பாவம். சிறுபாவம் பெரும் பாவங்களுக்கு இட்டுச் செல்லும். பெரும் பாவங்கள் அழிவை ஏற்படுத்தும். பாவங்களைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்த பல சமூகங்கள் அழிக்கப்பட்ட வரலாற்றை அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது. ஆத், ஸமூது கூட்டத்தினர், பிர்அவ்னும் அவனுடைய பரிவாரங்களும், நும்றூத் போன்றோரும் அவ்வாறு அழிக்கப்பட்டோருக்கு உதாரணங்களாகும்.

இவ்வுலகில் பிறந்த மனிதர்கள் யாவரும் மரணிப்பர். மறுமையை எல்லோரும் சந்தித்தேயாக வேண்டும். அவ்வேளை, அனைவரும் தத்தமது செயல்களுக்கு நியாயம் கூற வேண்டும். செய்த பாவங்களை யாரும் மறுத்துரைக்க முடியாது. ஏனெனில், விசாரணையின்போது உடல் உறுப்புக்கள், பாவம் நடந்த இடங்கள், மலக்குகளின் பதிவுகள் போன்ற சாட்சியங்கள் மூலம் அவை நிரூபிக்கப்படும்.

***''அன்றைய தினம் நாம் அவர்களுடைய வாய்கள் பேச முடியாதவாறு அவை மீது முத்திரையிட்டு விடுவோம். அவர்களுடைய கைகள் நம்மிடம் பேசும். அவர்கள் செய்து கொண்டிருந்த (பாவமான) காரியங்களைப் பற்றி அவர்களுடைய கால்களும் சாட்சி கூறும். (36: 65)***



ஒருவர் தனது செயல்களை மற்றவர்களுக்குத் தெரியாது மறைத்துக் கொள்ள முடியும். ஆனால், தன்னோடிருந்து தன்னை இயக்குகின்ற தனது உடல் உறுப்புக்களுக்குத் தெரியாமல் மறைக்க முடியுமா? மனிதனின் செயல்கள் யாவும் உறுப்புக்களாலேயே நிகழ்த்தப்படுகின்றன. இந்நிலையில், அவையே மறுமையில் சாட்சிகளாக நிறுத்தப்பட்டால் அவற்றை மறுக்க முடியுமா?

***''எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தானோ, அதனையும் அவன் (அங்கு) கண்டு கொள்வான்.'' (99: 8)***

மனிதர்கள் பாவம் செய்யும் இயல்பைக் கொண்டிருக்கிறார்கள். ஷைத்தான் மனிதனுடைய விரோதியாவான். அவன் பாவத்தின் பக்கம் மனிதனைத் தூண்டிக் கொண்டே இருப்பான். அவனுக்கு வழிபடுவோரை மறுமையில் கைவிட்டு விடுவான். அவனின் சூழ்ச்சியிலிருந்து விடுபட இறை சிந்தனையின் பக்கமும் இபாதத்தின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறே நல்ல சூழலிலும் நல்லவர்களின் நட்புடனும் வாழ முயற்சிக்க வேண்டும்.

***''அன்றி நன்மைக்கும் (அல்லாஹ்வுடைய) பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். பாவத்திற்கும் அக்கிரமத்திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டாம்'' (5: 2)*** என்று அல் குர்ஆன் எமக்கு அறிவுறுத்துகின்றது.

***''நபியே! நீர் கூறும், நிச்சயமாக என்னுடைய இறைவன் (ஆகாதென்று) தடுத்திருப்பதெல்லாம் பரகசியமாகவோ, இரகசியமாகவோ, செய்யப்படும் மானக்கேடான செயல்களையும், மற்ற பாவங்களையும் நியாயமின்றி (ஒருவர் மீது ஒருவர்) கொடுமை செய்வதையும் யாதோர் ஆதாரமும் இல்லாதிருக்கும்போதே அல்லாஹ்வுக்கு நீங்கள் இணைவைப்பதையும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவதையும் தான்.'' (7: 33)***

அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தடுத்த சில பெரும் பாவங்கள் வருமாறு:

- அல்லாஹ்வுக்கு இணை வைத்தல்
- சூனியம் செய்தல்
- கொலை செய்தல்
- வட்டியை உண்ணுதல்
- அனாதைகளின் சொத்துக்களை அனுபவித்தல்
- போரின்போது புறமுதுகு காட்டி ஓடுதல்
- கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறுதல் (புகாரி,முஸ்லிம்)

***இன்னும் சில பாவங்கள் பற்றி அல் குர்ஆனும் ஹதீஸும் விளக்கியுள்ளன.***

***''விசுவாசிகளே! நிச்சயமாக மதுபானமும் சூதாட்டமும் விக்கிரக ஆராதனையும் அம்பெறிந்து குறிகேட்பதும் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளில் உள்ளவையாகும்.'' (5: 90)***

''பெற்றோருக்கு துன்பமிழைப்பவனும் கோள் சொல்லித் திரிபவனும் மதுவில் மூழ்கியிருப்பவனும் சுவர்க்கம் நுழைய மாட்டார்கள்.'' (புகாரி, முஸ்லிம்)

''தற்கொலை செய்பவன் அதனைக் கொண்டே மறுமையில் வேதனைக் குள்ளாக்கப்படுவான்.'' (திர்மிதி)

பல பாவச் செயல்கள் உள்ளன. அவற்றிலிருந்து நாம் ஒதுங்கி வாழ வேண்டும். பாவங்கள் மனிதர்களோடு தொடர்பு பட்டிருந்தால் உரியவர்களிடம் மன்னிப்புக் கோருவது கட்டாயமாகும். பின்னர் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோர வேண்டும். அவை அல்லாஹ்வுடன் தொடர்புபட்டிருந்தால் நேரடியாக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோர வேண்டும். இதுவே வெற்றிக்கான வழியாகும்.

***''எவரேனும் தன்னுடைய தீய செயலுக்குப் பின்னர், பச்சாதாபப்பட்டு (தன் குற்றத்தைச்) சீர்திருத்திக் கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் அவருடைய மன்னிப்புக் கோருதலை அங்கீகரிப்பவனாக இருக்கின்றான்.'' (5: 39)***

**இஸ்லாமிய வழிகாட்டல்களைப் பின்பற்றி பாவங்களிலிருந்து தவிர்ந்து அதிகம் நன்மைகளைச் சேமித்து மறுமையில் நற்பேறு பெற முயல்வோமாக.**

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

عَادٌ　　ثَمُوْدُ

### பயிற்சி

1. பாவச் செயல்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் மூன்று கூறுக.
2. ஆத், ஸமூத் ஆகிய சமூகங்கள் அழிக்கப்பட்டதற்கான காரணம் யாது?
3. மறுமையில் விசாரணையின்போது கொண்டு வரப்படும் சாட்சியங்கள் யாவை?
4. முஸ்லிம்கள் எவ்விடயத்தில் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டுமென அல் குர்ஆன் கூறுகிறது?
5. திருட்டுக் குற்றத்திற்கான தண்டனை யாது?
6. பாடத்தில் கூறப்பட்ட பெரும் பாவங்கள் ஏழையும் குறிப்பிடுக.
7. தவறுதலாகப் பாவம் செய்து விட்டோர் செய்ய வேண்டிய பரிகாரம் யாது?
8. பாவச் செயல்கள் பரவாது தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் சிலவற்றை பட்டியறப்படுத்துக.

16



# நம்பிக்கை நாணயம் பேணுவோம்

இப்பிரபஞ்சத்தில் அமைதி, ஒற்றுமை, அன்பு, பரஸ்பர புரிந்துணர்வு போன்றன நிலைத்திருக்க வேண்டுமாயின் மனிதர்கள் மத்தியில் நற்குணங்கள் பேணப்பட வேண்டும். ஒரு சமூகம் அல்லது ஒரு தேசத்தின் எழுச்சிக்கு நற்பண்புகள் இன்றியமையாதவை. ஏனெனில், நற்பண்புகள் இல்லாத சமூகம் தோல்வி மற்றும் அழிவுகளையே சந்தித்து வருவதை வரலாற்றில் காண முடிகிறது. இதன் ஆபத்தான விளைவுகள் மனிதனை மட்டுமன்றி, ஏனைய படைப்பினங்களையும் பாதிப்பிற்குள்ளாக்குவதைப் பார்க்கின்றோம். மனிதர்கள் நற்பண்புகளைக் கற்றுக் கொள்ள இறை வழிகாட்டல் அவசியமாகும். அத்துடன் கல்வி, அவன் வாழும் சூழல், சமூகப் பழக்க வழக்கங்கள் போன்றனவும் துணை செய்கின்றன.

இஸ்லாம் கூறும் நற்பண்புகளுள் நம்பிக்கை நாணயம் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒவ்வொரு மனிதனிடமும் நேர்மை, வாய்மை, அமானிதங்களைப் பேணல் போன்ற முக்கிய பண்புகள் இருப்பது அவசியமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது சிறு பராயத்திலிருந்தே நம்பிக்கை, நாணயம் பேணல் போன்ற பண்புகளில் அதி சிறந்து விளங்கினார்கள். அதனாலேயே, அவர்கள் **அஸ்ஸாதிக், அல்அமீன்** (உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர்) என எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள்.

நம்பிக்கை நாணயத்தின் வெளிப்பாடாகிய வாய்மை, வாக்குறுதி மாறாமை பற்றி அல் குர்ஆன் பின்வருமாறு வலியுறுத்துகின்றது:

وَأَوْفُوا بِالْعَهْدِ إِنَّ الْعَهْدَ كَانَ مَسْئُولًا

***''மேலும், வாக்குறுதியை நீங்கள் முழுமையாக நிறைவேற்றுங்கள். ஏனெனில் நிச்சயமாக வாக்குறுதி பற்றி மறுமையில் விசாரிக்கப்படும்.'' (17 : 34)***

*அவ்வாறே மற்றுமோர் இடத்தில்:*

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُواْ أَوْفُواْ بِالْعُقُودِ

***''விசுவாசிகளே நீங்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளைப் பூரணமாக நிறைவேற்றுங்கள்'' (5:1)*** *எனக் குறிப்பிடுகின்றது.*

*காலவோட்டத்தில் இப்பண்புகளைப் பேணுவதில் மனிதனின் நிலை பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:*

*''நிச்சயமாக உங்களுக்குப் பின் ஒரு சமுதாயத்தினர் (வர) இருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை மோசடி செய்வார்கள். அவர்களிடம் எதையும் நம்பி ஒப்படைக்கப்படாது. அவர்கள் சாட்சியாக இருக்கத் தாமாகவே முன் வருவார்கள். ஆனால், சாட்சியம் அளிக்கும் படி அவர்களை யாரும் கேட்க மாட்டார்கள். அவர்கள் நேர்ச்சை செய்வார்கள். ஆனால், அதை நிறைவேற்ற மாட்டார்கள்'' எனக் குறிப்பிட்டார்கள். (புகாரி)*

*நம்பிக்கை நாணயம் பேணுவதன் மூலம் தனி நபர், குடும்பம், சமூகம் என அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் பரஸ்பர ஒற்றுமையும் இறுக்கமான பிணைப்பும் ஏற்பட்டு சகவாழ்வு செழித்தோங்குகின்றது. கூட்டுச் சேர்ந்து நடத்தப்படும் வர்த்தக நடவடிக்கைகள் வெற்றியளிக்கின்றன. அதேநேரம் கூட்டு சேர்ந்தவர்கள் தங்களுக்கிடையில் நம்பிக்கை நாணயம் பேணாது ஏனைய பங்குதாரர்களுக்கு மோசடி செய்வதன் மூலம் கூட்டு முயற்சியாண்மை தோல்வியில் முடிவதைப் பார்க்கிறோம்.*

*அல்லாஹ் கூறுவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: ''கூட்டு முயற்சியில் ஈடுபடும் ஒருவர் தன்னுடைய தோழருக்கு மோசடி செய்யாதவரை நான் அவர்களுடன் மூன்றாவது பங்காளியாய் இருப்பேன். ஆனால், அவர்களிலொருவர் மற்றவருக்கு மோசடி செய்ய ஆரம்பித்து விட்டால் அவ்விருவரை விட்டும் நான் வெளியேறி விடுகிறேன். (அபூதாவூத்)*

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''மோசடி செய்பவனுக்கு மறுமை நாளில் (அவனுடைய மோசடியை வெளிச்சமிட்டுக் காட்டும் முகமாக அடையாளக்) கொடி ஒன்று நாட்டப்பட்டு இது இன்னாருடைய மகன் இன்னாரின் மோசடி (யைக் குறிக்கும் கொடி)'' என்று கூறப்படும்.'' (புகாரி)*

*ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சந்தையில் ஓர் உணவுக் குவியலைக் கண்டு அதனுள் தனது கையை விட்டார்கள். அவர்களுடைய*

*விரல்களில் ஈரம் பட்டது. அந்த வியாபாரியை விழித்து, ''இது என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் ''அல்லாஹ்வின் தூதரே! மழை நீர் இதில் விழுந்து விட்டது'' என்று கூறினார். அதற்கு அவர்கள் ''மக்களுக்குத் தெரியும் வண்ணம் அதை வைத்திருக்க வேண்டாமா?'' எனக் கேட்டுவிட்டு, ''யார் ஏமாற்றுகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்லர்'' என்று கூறினார்கள். (முஸ்லிம்)*

***எனவே, நம்பிக்கை நாணயம் மிக்கவர்களாக, அமானிதங்களைப் பேணி இறை கட்டளையின் படியும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் வாழ்வை அமைத்துக் கொள்ள முயற்சிப்போம்.***

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

الْأَمِيْنُ الصَّادِقُ

**பயிற்சி**

1. *நம்பிக்கை நாணயம் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?*
2. *வாக்குறுதி நிறைவேற்றலை வலியுறுத்தும் அல் குர்ஆன் வசனம் ஒன்றைக் குறிப்பிடுக.*
3. *மோசடியில் ஈடுபடக் கூடாதென்பதற்கு ஓர் உதாரணம் தருக.*
4. *உமக்குத் தெரிந்த நம்பிக்கை நாணயத்தை வெளிப்படுத்தும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுக.*




# பிரயாண ஒழுங்குகள்

மனிதன் நாளாந்த வாழ்வில் பல்வேறு பயணங்களை மேற்கொள்கின்றான். குறுங்காலப் பயணம், நீண்ட காலப் பயணம் என அவை அமைவதுண்டு. உழைப்பு, கல்வி தேடல், உல்லாசம், நண்பர்கள், உறவினர்களைத் தரிசித்தல், நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல், ஹஜ், உம்ரா போன்ற வணக்கங்களை நிறைவேற்றல் எனப் பல்வேறு நோக்கங்களைக் கொண்டவையாகவும் அவை அமைவதுண்டு. இஸ்லாம் காட்டித் தந்த ஒழுங்குமுறையில் பயணங்களை அமைத்துக் கொள்கின்றபோது அவை அல்லாஹ்விடமிருந்து நற்கூலியைப் பெற்றுத்தரும். பாவங்கள் நிகழ்வதிலிருந்து தற்காத்துக் கொள்ள உதவும். மறுமையில் ஈடேற்றத்தைப் பெற்றுத்தரும்.

அல் குர்ஆன் பயணம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

***‘‘(நபியே) நீர் கூறும் பூமியில் சுற்றித் திரிந்து (ஆரம்பத்தில்) படைப்புகளை எவ்வாறு உற்பத்தி செய்கின்றான் என்பதைப் பாருங்கள்.’’ (29: 20)***

***‘‘(நபியே! நீர் அவர்களை நோக்கி) ‘‘நீங்கள் பூமியில் சுற்றித் திரிந்து (உங்களைப் போல்) பொய்யாக்கிக்கொண்டிருந்தவர்களின் முடிவு என்னவாயிற்று என்று கவனித்துப் பாருங்கள்’’ என்று கூறும். (6: 11)***

***‘‘அவன்தான் உங்களுக்கு பூமியை (நீங்கள் வசிப்பதற்கு வசதியாக ஆக்கி வைத்தான். ஆகவே, இதன் பல்வேறு கோணங்களுக்கும் சென்று அவன் (உங்களுக்கு) அளித்திருப்பவற்றைப் புசித்துக்கொண்டிருங்கள். (மறுமையில்) அவனிடமே (அனைவரும்) செல்ல வேண்டி இருக்கின்றது.’’ (67: 15)***

பயணம் செய்வதை ஆகுமாக்கிய இஸ்லாம் அதற்குரிய ஒழுங்குகளையும் கற்றுத் தந்துள்ளது. அவற்றை அறிந்து வாழ்வில் கடைப்பிடித்துப் பயணங்களை மேற்கொள்கின்ற போது அது இறை அருளையும் நற்கூலியையும் பெற்றுத் தரும். அவ்வொழுங்குகளாவன:

## 1. தூய எண்ணம் (இஃலாஸ்)

மனித செயற்பாடுகள் அனைத்தும் நிய்யத்தைப் பொறுத்தே அமைகின்றது. எனவே, ஒரு முஸ்லிம் தான் மேற்கொள்கின்ற பயணம் இறைவனை நெருங்குவதற்காகவும் அவனது நற்கூலியைப் பெற்றுக் கொள்வதற்கும் துணை செய்கின்றதா என்பதை ஒரு கணம் மனதில் இருத்திய பின்பே பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். இறையன்புக்கும் அவனது திருப்திக்குமுரியதாக பயணம் அமையாதபோது அதனை ஷைத்தானுடைய பயணம் என இஸ்லாம் எச்சரிக்கின்றது.

''ஒரு மனிதன் வீட்டிலிருந்து வெளியேறுகின்றபோது அவனது கையில் இரண்டு கொடிகள் காணப்படும். அதில் ஒன்று மலக்கின் ஆதிக்கத்தில் இருக்கும். மற்றையது ஷைத்தானின் ஆதிக்கத்தில் இருக்கும். அடியான் அல்லாஹ்வின் அன்பை, நேசத்தைப் பெறக்கூடிய பயணத்தில் இருக்கும்போது, மலக்கு அக்கொடியுடன் அம்மனிதன் தன் பயணத்தை முடித்து வீடு திரும்பும் வரை தொடர்வார். அம்மனிதனோ இறை கோபத்தைப் பெற்றுத் தரக்கூடிய பயணத்தை மேற்கொண்டால் அவன் வீடு திரும்பும் வரை ஷைத்தான் அக்கொடியுடன் அவனைத் தொடர்வான்.'' (அஹ்மத்)



## 2. அல்லாஹ்விடம் உதவி தேடல்

பயணங்களை மேற்கொள்ள முன்னர் அல்லாஹ்விடம் உதவி தேடிக் கொள்வது, அதற்காக இரண்டு ரக்அத்துக்கள் தொழுவது போன்றன நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டித் தந்த வழிமுறைகளாகும்.

*''மனிதனுக்கு சுபிட்சத்தைப் பெற்றுத் தரக்கூடியவை அல்லாஹ்விடம் உதவி தேடுவதும், அல்லாஹ் அவனுக்கு விதித்தவற்றில் திருப்தி காண்பதுமாகும்.'' (அஹ்மத்)*

## 3. ஆலோசனை பெறல்

பயணத்தின் நோக்கம் கல்வி தேடல், உழைப்பு, வணக்கம் எதுவாக இருந்தாலும் பயணத்தை மேற்கொள்ள முன்னர் நல்லவர்களுடன் அது குறித்து ஆலோசனை பெற்றுக் கொள்வது சிறந்தது. நல்ல ஆலோசனைகள் பயணத்தை சௌகரியமாக மேற்கொள்வதற்கும் தனது குடும்பத்தவர்கள் குறித்து பாதுகாப்பான, வசதியான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் துணை புரியும்.

***''அவர்கள் தங்களுடைய ஒவ்வொரு காரியத்தையும் தங்களுக்குள் ஆலோசிப்பார்கள்.'' (42: 38)***

## 4. கடனைச் செலுத்துதல்

பயணத்தை மேற்கொள்பவர் தான் எவருக்கேனும் செலுத்த வேண்டிய கடன்கள் இருப்பின் அவற்றைப் பயணத்திற்கு முன் செலுத்த வேண்டும். அன்றேல் உரியவர்களுடன் கதைத்து அதனை ஒப்படைப்பதற்கான வழிமுறைகள் பற்றி ஆலோசித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். கடனைச் செலுத்தாமலும் கடன் தந்தவருக்குத் தெரியப்படுத்தாமலும் நீண்ட தூர, நீண்ட காலப் பயணங்களை மேற்கொள்வதானது அவரைப் பற்றிய தப்பபிப்பிராயங்களை பிறர் உள்ளங்களில் விதைத்து விடலாம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னிடம் அமானிதமாக ஒப்படைக்கப்பட்டிருந்த அனைத்தையும் ஹிஜ்ரத் பயணத்தை மேற்கொள்ள முன்னர் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கையளித்தார்கள். உரியவர்களுக்கு அவற்றை ஒப்படைத்து விடுமாறு வேண்டிக் கொண்டார்கள்.

## 5. தேவையானவற்றை எடுத்துச் செல்லல்

தனது பயணத்தை முழுமையாகவும் சௌகரியமாகவும் நிறைவேற்றிக் கொள்ளும் விதமாகத் தனது பயணத்திற்குப் போதுமான கைச்செலவு, உடைகள் மற்றும் அவசியமான அனைத்தையும் தன்னோடு எடுத்துச் செல்வது வரவேற்கத்தக்கது. ஏனெனில், அது பிறரில் தங்கி நிற்பதிலிருந்தும் அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்து வதிலிருந்தும் தடுத்துவிடும்.

## 6. தொழுகை நேரங்களைக் கவனத்திற் கொள்ளல்

பயணத்தின்போது இயன்றளவு தொழுகையை நிறைவேற்றக் கூடிய விதத்தில் பயணத்தை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும். தொழுகைகளைச் சுருக்கியும் சேர்த்தும் தொழுவதற்கான அனுமதியை அல்லாஹ் சலுகையாகத் தந்துள்ளான். அச் சலுகைகளையும் எடுத்து நடக்கக்கூடியவாறு எமது பயணங்களைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.



## 7. அஜ்னபி, மஹ்ரமி வரையறைகளைப் பேணல்

ஆணோ, பெண்ணோ பிரயாணத்தின்போது அஜ்னபிகளுடன் தனித்துப் பயணம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

பெண்கள் தமக்குப் பாதுகாப்பான, (திருமண உறவு தடுக்கப்பட்ட) மஹ்ரம்களுடன் பயணம் செய்யலாம். எனினும் தனித்துப் பயணம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

''ஒரு பெண் ஓர் இரவு அல்லது ஒரு பகல் கூட தனியாகப் பயணம் செய்ய வேண்டாம்.'' (புகாரி)

## 8. பிறர் உரிமைகளைப் பேணல்

பிரயாணத்தின்போது சக பயணிகளினது உரிமைகளைப் பேணி நடக்க வேண்டும். அவர்கள் எங்களது தற்காலிக அயலவர்களாவர். எனவே, அயலவர்களுக்குரிய உரிமைகளைப் போன்று இவர்களதும் உரிமைகளை மதித்து நடக்க வேண்டும்

***''...உங்களுடன் இருக்கக் கூடிய நண்பர்களுக்கும் பயணிகளுக்கும் உங்களிடம் உள்ள அடிமைகளுக்கும் அன்புடன் நன்றி செய்யுங்கள்...'' (4: 36)***

எந்த வகையிலும் பக்கத்திலிருக்கும் பயணிகளுக்கும் தன்னோடு பயணத்திலிருக்கும் அடுத்தவர்களுக்கும் சொல்லால், செயலால், உடல் ரீதியான அல்லது உள ரீதியான எந்தவொரு இடையூறோ, துன்பமோ ஏற்படாத வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். எவரேனும் ஆசனம் கேட்டால் உடன் வழங்க வேண்டும்.

***''நம்பிக்கையாளர்களே! (நீங்கள் யாதொரு சபையிலிருக்கும்போது எவரேனும்) உங்களை நோக்கி சபையில் அகன்று இடம் கொடுங்கள் என்று கூறினால் (அவ்வாறே) நீங்கள் அகன்று இடம் கொடுங்கள்.(58: 11)''***

## 9. தலைவரைத் தெரிவுசெய்தல்

இருவருக்கு மேற்பட்டோர் பயணம் ஒன்றை மேற்கொள்வதாயின் தமக்கிடையே ஒரு தலைவரை நியமித்துக் கொள்வது சிறந்தது.

## 10. உரிய துஆக்களை ஓதுதல்

பயணத்தைத் தொடங்கும்போதும் இடையிலும், முடித்துத் திரும்பும்போதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத் தந்த துஆக்களை ஓதிக் கொள்வது சிறப்பானது.

**பயணத்தைத் தொடங்கி வாகனத்தில் ஏறியதும் ஓதும் துஆ:**

سُبْحَانَ الَّذِي سَخَّرَ لَنَا هَذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِينَ وَإِنَّا إِلَى رَبِّنَا لَمُنْقَلِبُونَ

''இந்த வாகனத்தை எமது கட்டுப்பாட்டுக்கு வசப்படுத்தித் தந்த எல்லாம் வல்ல அல்லாஹ் தூயவன். திண்ணமாக நம்மை பரிபாலிப்பவர்கள்பால் நாம் திரும்ப வேண்டியிருக்கின்றோம்.''

**பயணத்தை முடித்துத் திரும்பும்போது:**

آيِبُوْنَ تَائِبُوْنَ عَابِدُوْنَ لِرَبِّنَا حَامِدُوْنَ

''இறைவனை வணங்கியவர்களாகவும் புகழ்ந்தவர்களாகவும் மன்னிப்புக் கேட்பவர்களாகவும் திரும்புகின்றோம்.''

## 11. வழியனுப்பல், வரவேற்றல்

ஒருவரை பயணத்திற்கு வழியனுப்பும்போது அவருடன் சற்றுத் தூரம் செல்வதும் தமக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுவதும் நற்பழக்கமாகும். மேலும் வழியனுப்பும்போது பின்வரும் துஆவை ஓதுவது சிறந்தது.

أَسْتَوْدِعُ اللهَ دِينَكَ وَأَمَانَتَكَ ، وَخَوَاتِيمَ عَمَلِكَ

''உங்களுடைய தீனை, அமானிதத்தை, மேலும் செயல்களின் முடிவை இறைவனிடம் நான் ஒப்படைக்கின்றேன்.''

## 12. பயணத்திலிருந்து திரும்பி வந்தவரை வரவேற்றல்

பயணத்திலிருந்து திரும்பி வந்தவரை வரவேற்று அவருடன் அன்பான, கனிவான வார்த்தைகளால் கதைப்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் கைலாகு செய்வதும் அவரைக் கட்டித் தழுவி முஆனகா செய்வதும் வரவேற்கத்தக்கது.

***எனவே, எமது பயணங்களில் இஸ்லாம் காட்டித்தந்த ஒழுங்குகளைப் பேணி நடப்பதனூடாக இறை பொருத்தத்தையும் அவனது நற்கூலியையும் பெற்றுக்கொள்ள முயற்சிப்போமாக.***

## பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

إِسْتِخَارَةٌ    نِيَّةٌ    دُعَاءٌ    ذِكْرٌ    بَرَكَةٌ

### பயிற்சி

1. சரி, பிழை கூறுக.

   அ. பூமியின் பல்வேறு கோணங்களுக்கும் செல்வதை அல்குர்ஆன் தூண்டுகிறது. (   )

   ஆ. பயணம் செய்வது ஓர் இபாதத் ஆகும். (   )

   இ. பயணம் மேற்கொள்ள முன்னர் எவரிடமும் ஆலோசனை பெற வேண்டியதில்லை. (   )

   ஈ. பயணத்தின்போது தொழுகையை விட்டுவிடலாம். (   )

   உ. அஜ்னபியான பெண்களை அழைத்துக் கொண்டு பயணம் செய்வதில் தவறில்லை. (   )

2. பலர் சேர்ந்து பிரயாணம் செய்யும்போது தலைவர் ஒருவரைத் தெரிவு செய்துகொள்வதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.

3. பயணத்திற்கு முன்னர் அல்லாஹ்விடம் உதவி தேடுவதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.

4. பயணத்தின்போது பிறருக்கு இடையூறின்றி நடப்பதற்கான வழிமுறைகள் மூன்றைக் குறிப்பிடுக.

### செயற்பாடு

குடும்பத்தவர்களுடன் சேர்ந்து மேற்கொள்ளும் பயணம் ஒன்று சிறப்பாக அமைவதற்கான திட்டமொன்றைத் தயாரியுங்கள்.




# அல் குர்ஆன் ஓதுவதன் சிறப்புகள்

அல் குர்ஆன் மனித இனத்துக்கு வழிகாட்டும் அல்லாஹ்வின் அருள் வாக்காகும். அது மனிதனை நேர்வழியின்பால் இட்டுச் செல்கின்றது. அவனது ஈருலக வாழ்வுக்கும் வழிகாட்டுகிறது. உள்ளத்திற்கு அமைதியை அள்ளித் தருகின்றது. வாழ்வில் பரகத்தை ஏற்படுத்துகின்றது. மறுமையில் அல்லாஹ்விடம் பரிந்து பேசுகின்றது. அளப்பரிய நன்மைகளைப் பெற்றுத் தருகின்றது. இந்த மகத்துவமிக்க அல் குர்ஆனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பல உள்ளன. அவற்றுள் அதனை ஓதுவதும் ஒன்றாகும். இனி நாம் அவ்வாறு அதனை ஓதுவதன் சிறப்புக்களை அறிந்து கொள்வோம்.

***''இந்தக் குர்ஆனை நன்கு திருத்தமாக ஓதுங்கள்.'' (73:4)***

***''அல் குர்ஆனில் உங்களுக்கு இயன்றளவு ஓதுங்கள்.'' (73: 20)***

''நிச்சயமாக இந்த அல் குர்ஆன் அல்லாஹ்வின் உறுதிமிக்க கயிறு; வழிகாட்டும் பேரொளி; பயன்மிகு சஞ்சீவி; அதனைப் பற்றிப் பிடிப்போருக்கு அது பாதுகாப்பளிக்கும்; அதனைப் பின்தொடர்வோருக்கு அது வெற்றியளிக்கும்; கோணலை அது சீராக்கும்; தவறுகளைச் சரிப்படுத்தும்; அதன் அற்புதங்கள் முடிந்துவிடப் போவதில்லை; திரும்பத் திரும்ப ஓதுவதால் அது பழைமை அடைவதுமில்லை. எனவே, அதனை நீங்கள் ஓதி வாருங்கள்.'' *(அல்ஹாகிம்)*

மேற்சொன்ன அல் குர்ஆன், ஸுன்னாவின் வழிகாட்டல்கள் ஒவ்வொரு முஸ்லிமும் அல் குர்ஆனை ஓதி ஒழுக வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன.

பொதுவாக நல்லமல்கள் ஆரம்பம் - செயன்முறை - இறுதி என்ற அனைத்தும் நிகழ்வதன் மூலமே முழுமை பெறுகின்றன. உதாரணமாக தொழுகை தக்பீரதுல் இஹ்ராமில் ஆரம்பித்து பல செயன்முறைகளை உள்ளடக்கி ஸலாத்துடன் முடிவடைகின்றபோதே முழுமை பெறுகின்றது. ஆனால், திலாவதுல் குர்ஆனைப் பொறுத்தவரை அவ்வாறல்ல. அதன் ஓர் எழுத்தையேனும் ஓதுவது, ஒரு பகுதியை ஓதுவது, முழுமையாக ஓதுவது, மற்றும் செவிமடுப்பது, மனனமிடுவது முதலான ஒவ்வொரு செயலும் முழுமை பெற்ற நன்மை தரும் நற்செயல்களாகும்.

''ஒருவர் அல்லாஹ்வின் வேதத்திலிருந்து ஓர் எழுத்தை ஓதினால் அதற்காக அவருக்கு ஒரு நன்மையுண்டு. அந்த ஒரு நன்மை அது போன்று பத்து நன்மைகளுக்குச் சமமாகும். 'அலிப் - லாம் - மீம் -' என்பது ஓர் எழுத்து என நான் கூறவில்லை. அலிப் ஓர் எழுத்து. லாம் ஓர் எழுத்து. மீம் ஓர் எழுத்து ஆகும்.'' (திர்மிதி)

''அல் குர்ஆனை உடையவர்களே! நீங்கள் அல் குர்ஆனைத் தலையணையாக ஆக்கிக் கொள்ள வேண்டாம். இரவிலும் பகலிலும் அதனை உரிய முறைப்படி ஓதுங்கள்; அதனைப் பரப்புங்கள்; அதனை இனிய குரலில் ஓதுங்கள்; அதன் கருத்துக்களைச் சிந்தித்து ஆராய்ச்சி செய்யுங்கள். அப்போது நீங்கள் வெற்றியடைவீர்கள். அதனுடைய நன்மைகளை (இவ்வுலகில்) பெற அவசரப்படாதீர்கள். நிச்சயமாக அதற்குரிய கூலி (மறுமையில்) உண்டு.'' (பைஹகி)

எனவே, காலையிலும் மாலையிலும் இனிய குரலில் அல் குர்ஆனை ஓதுவதை வழக்கமாக்கிக் கொண்டு, அதனைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் அக்கறை செலுத்துவதன் மூலம் மறுமையில் நிறைவான கூலியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மறுமை நாளில் ஒவ்வொருவரும் தனது வெற்றி, தனது ஈடேற்றம் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பர். அங்கு எவரும் எவருக்காகவும் பரிந்து பேச முடியாது. ஆனால், அல் குர்ஆனோ அதனை ஓதியவருக்காக அந்நாளில் பரிந்து பேசும்.

''நீங்கள் அல் குர்ஆனை ஓதுங்கள். ஏனெனில் அதை ஓதியவருக்கு அது மறுமையில் அல்லாஹ்விடம் பரிந்து பேசும்.'' (முஸ்லிம்)

''அல் குர்ஆன் ஓதுவதில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக என்னை திக்ர் செய்வதற்கும் என்னிடம் துஆ கேட்பதற்கும் அவகாசம் எவருக்குக் கிடைக்கவில்லையோ அவருக்கு துஆ கேட்பவர்கள் அனைவருக்கும் கொடுப்பதை விட அதிகமானதை நான் வழங்கிடுவேன்'' என்று அல்லாஹ் கூறுவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள். (திர்மிதி)

''அல் குர்ஆனில் நன்கு தேர்ச்சியடைந்தவர் கண்ணியமிக்க நல்லோர்களாகிய மலக்குகளுடன் இருப்பார்கள். மேலும் குர்ஆனைத் திக்கித் திக்கிச் சிரமப்பட்டு ஓதுபவர்களுக்கு இரண்டு மடங்கு நற்கூலிகள் இருக்கின்றன.'' (புகாரி)

''(கியாமத்து நாளில்) அல் குர்ஆன் உடையவரை நோக்கி அல் குர்ஆனை ஓதிக் கொண்டே செல்வாயாக! சுவர்க்கத்தின் பதவிகளில் உயர்ந்து கொண்டே செல்வாயாக! உலகில் நீ குர்ஆனை நிறுத்தி நிறுத்தி ஓதியது போன்று ஓதுவாயாக! நீ ஓதி முடிக்கும் கடைசி ஆயத்தில்தான் உனது தங்குமிட மிருக்கிறது என்று கூறப்படும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

அல்லாஹ்வை நெருங்குவதற்கும் ஸகீனத்தை (உள அமைதி) அடைந்து கொள்வதற்கும், சுவனத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒரு சிறந்த சாதனமாக அல் குர்ஆனை ஓதுவது அமைந்துள்ளது. மேலும் அது உள்ளத்தில் படிந்திருக்கும் கறைகளை நீக்கி, சுத்தப்படுத்தி பிரகாசிக்கவும் செய்கிறது.

இத்தகு சிறப்புக்களை அள்ளித்தரும் உயர்ந்த நற்செயலான அல் குர்ஆன் ஓதுவதை ஒரு முஸ்லிம் நாளாந்தம் வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். காலையிலும் மாலையிலும் ஓதிவர வேண்டும். அதுவே அவரது ஈமானுக்கு ஓர் அடையாளமாகும்.

**''(நபியே!) நாம் வேதம் கொடுத்தவர்களில் எவர்கள் அதை ஓத வேண்டிய முறைப்படி (அறிந்து) ஓதுகிறார்களோ அவர்களே அல் குர்ஆன் ஆகிய இதனை விசுவாசிப்பவர்களாவர்.'' (2: 121)**

அல் குர்ஆனை ஓதுவதன் மூலம் எமது வீடுகள் இறையருளும் பரக்கத்தும் கொண்டதாக அமைகின்றன. அதனை ஓதாதபோது அது பாழடைந்த வீடு போலாகி வறுமையும் ஷைத்தானும் அங்கு குடிகொள்ளும்.

அல் குர்ஆனை ஓதாதிருப்பது அதனைப் புறக்கணிப்பதற்கு நிகராகும். இது பற்றி இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்விடம் முறையிடுவதை அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

**''என் இறைவனே! நிச்சயமாக என்னுடைய மக்கள் இந்தக் குர்ஆனை முற்றிலும் வெறுத்துத் தள்ளி விட்டனர்.'' (25: 30)**



இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''தன்னுடைய சமூகத்தினர் இந்த அல் குர்ஆனை வெறுத்து ஒதுக்கிப் புறக்கணித்துவிட்டனர்'' அல்லாஹ்விடம் யாரைப் பற்றி முறையிடப் போகின்றார்களோ அந்நிலைமையை விட்டும் நாம் விலகியிருக்க வேண்டும்.

**இதற்கொரு வழியாக அல் குர்ஆனை விசுவாசிப்பதோடு, அதன்மீது பற்றுவைத்து காலையிலும் மாலையிலும் அதனை அதிகம் ஓதுபவர்களாகவும் படிப்பவர்களாகவும் அதன் வழி நடப்பவர்களாகவும் நாம் எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அதன் மூலம் நாம் ஈருலகிலும் வெற்றியடையலாம்.**

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

سَكِيْنَةٌ تِلَاوَةٌ

## பயிற்சி

**அ. சரி பிழை கூறுக.**

1. அல் குர்ஆன் அதனை நம்பியவருக்கு மறுமையில் அல்லாஹ்விடம் பரிந்து பேசும். ( )
2. அல் குர்ஆனை திக்கித் திக்கி சிரமப்பட்டு ஓதுபவருக்குக் கூலி கிடைப்பதில்லை. ( )
3. அல் குர்ஆனை ஓதுபவர் ஸகீனத்தை அடைந்து கொள்வார். ( )
4. அலிப், லாம், மீம் என்று ஓதுவதன் மூலம் ஒருவர் பத்து நன்மைகளைப் பெற்றுக் கொள்வார். ( )
5. வெள்ளிக் கிழமை தினத்தில் ஸூரா கஹ்பை ஓதுவது நபிவழியாகும். ( )

**ஆ. சுருக்கமான விடை தருக.**

1. அல் குர்ஆன் ஓதுவதன் மூலம் கிடைக்கும் மறுமைப் பயன்கள் இரண்டு குறிப்பிடுக.
2. அல் குர்ஆனை ஓதுவதன் சிறப்புக்களைக் குறிப்பிடும் இரண்டு ஹதீஸ்களைத் தருக.


# 19

# ஸூரா அல்மாஊன்

## سُوْرَةُ الْمَاعُوْنْ

அல்லாஹ்வின் அருள் வேதமான அல் குர்ஆனை ஓதுவதன் சிறப்பு அதனை விளங்குவதன் முக்கியத்துவம் குறித்து முன்னைய பாடத்தில் கற்றோம். அதன் போதனைகளை விளங்குவதன் ஒரு முயற்சியாக நாம் ஸூரா அல்மாஊன் என்ற அத்தியாயத்தை நோக்குவோம்.

இது அல் குர்ஆனின் 107 ஆவது அத்தியாயமாகும். ஏழு வசனங்களைக் கொண்ட மக்கீ ஸூராவாகும். முதல் மூன்று வசனங்கள் மக்காவிலும் அடுத்த நான்கு வசனங்கள் மதீனாவிலும் அருளப்பட்டது. இதன் இறுதி வசனத்தில் இறுதிச் சொல்லாக இடம்பெற்றுள்ள ‘அல்மாஊன்’ என்ற பதம் ஸூராவின் பெயராக சூட்டப்பட்டுள்ளது. இதன் கருத்து அற்பப் பொருள் என்பதாகும். இனி ஸூராவையும் அதன் மொழி பெயர்ப்பையும் தெரிந்துகொள்வோம்.


سُورَةُ الْمَاعُونِ مَكِّيَّةٌ وَهِيَ سَبْعُ آيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

أَرَءَيْتَ الَّذِىْ يُكَذِّبُ بِالدِّيْنِ ١ فَذٰلِكَ الَّذِىْ يَدُعُّ الْيَتِيْمَ ٢ وَ
لَا يَحُضُّ عَلٰى طَعَامِ الْمِسْكِيْنِ ٣ فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ ٤ الَّذِيْنَ هُمْ عَنْ
صَلَاتِهِمْ سَاهُوْنَ ٥ الَّذِيْنَ هُمْ يُرَآءُوْنَ ٦ وَيَمْنَعُوْنَ الْمَاعُوْنَ ٧

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுகின்றேன்.

1. (நபியே) கூலி கொடுக்கும் நாளைப் பொய்யாக்குபவனை நீங்கள் கவனித்துப் பார்த்தீர்களா?
2. (திக்கற்ற) அனாதைகளை விரட்டுபவன் அவன்தான்.
3. அவன் ஏழைகளுக்கு (உணவளிக்காததுடன்) உணவளிக்குமாறு (பிறரைத்) தூண்டுவதுமில்லை.
4. (கவனமற்ற) தொழுகையாளிகளுக்கும் கேடுதான்.
5. அவர்கள் எத்தகையவர்கள் என்றால் தங்கள் தொழுகைகளை விட்டும் மறந்தவர்களாக இருக்கிறார்கள்.
6. மேலும் அவர்கள் (தொழுத போதிலும் மக்களுக்குக்) காண்பிக்கவே தொழுகிறார்கள்.
7. (மேலும் ஊசி போன்ற) அற்பப் பொருளையும் (இரவல் கொடுக்காது) தடுத்துக் கொள்கிறார்கள்.

## *இந்த ஸூரா தரும் படிப்பினைகள்:*

1. *இவ்வுலகில் செய்யும் நற்செயல்களுக்கு நற்பலனும், பாவ காரியங்களுக்குத் தண்டனையும் மறுமையில் கிடைக்குமென்ற மனிதனின் நம்பிக்கையே, மனிதன் படைப்பினங்கள் மீது அன்பு காட்டவும் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சீராக செய்து தனது வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்ளவும் முக்கிய தூண்டுகோலாக அமையும்.*
2. *எந்த மனிதனிடம் மறுமை நாள் பற்றிய நம்பிக்கை உள்ளத்தில் ஆழப் பதியவில்லையோ அவன்தான் அனாதைகளை முரட்டுத் தனமாக நடத்துவான். அவர்களைக் கேவலமாகக் கருதி வெருட்டவும் செய்வான். அவர்களின் உரிமைகளை மறுத்து, தொல்லை கொடுத்து, சொத்துக்களை அபகரிப்பான். இதற்கு மாற்றமாக அனாதைகளையும் ஏழைகளையும் அன்புடன் வரவேற்று உபசரிப்பது நியாயத் தீர்ப்பு நாளை நம்பியதற்குச் சான்றாகும்.*
3. *ஏழைகளுக்கு உணவளிப்பது மாத்திரமன்றி, பிறரை ஏழைகளுக்கு உணவளிக்கத் தூண்டுபவராக இருப்பதுவும் மறுமை மீதான விசுவாசத்தின் அடையாளமாகும்.*
4. *இஸ்லாத்தில் எந்தவொரு செயலும் உளத் தூய்மையுடன் நிறை வேற்றப்படாதபோது அவற்றுக்கு அல்லாஹ்விடத்தில் எந்தப் பெறுமானமும் கிடையாது. பிறர் பார்த்து மதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நிறைவேற்றப்படும் தொழுகை பயனற்றதாகி விடும். அவர்கள் தொழுகைக்குரிய*

*புறத் தோற்றங்களை நிறைவேற்றுகின்றார்கள். அந்தத் தொழுகை அவர்களது உள்ளத்தோடு ஒன்றியிருக்காது. ஓதுபவை குறித்து அவனது உள்ளம் உணராது. தொழுகையின் யதார்த்தத்தை அவர்கள் எண்ணிக்கூட பார்க்க மாட்டார்கள். எனவே, உண்மையான தொழுகை அல்லது பயனுள்ள தொழுகை என்பது மன ஒருமைப்பாட்டுடன் அதன் யதார்த்தத்தை நெஞ்சில் நிறுத்தி இறைவனுக்காக என்ற தூய எண்ணத்துடன் நிறைவேற்றப்படுவதாகும்.*

5. *அற்பப் பொருளைக் கூட இரவலாகக் கொடுப்பதற்கு ஒருவரது உள்ளம் முன்வரவில்லை என்றால் அவரது மறுமை நம்பிக்கையில் கோளாறு உள்ளது என்பதுவே கருத்தாகும். அவரது தொழுகை அவரில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பதே உண்மையாகும்.*

***எனவே, இந்த ஸூராவை ஓதி விளங்கி, இதனை மனனமிட்டு அதன் போதனைகளை உள்ளத்தில் ஆழமாகப் பதித்து நற்செயல்களில் ஈடுபட்டு வெற்றியடைய வழியமைத்துக் கொள்வோமாக!***

பயிற்சி

**(அ). பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. *ஸூரா அல்மாஊன் அல் குர்ஆனில் (103/ 105/ 107) ஆவது அத்தியாயமாகும்.*
2. *அல்மாஊன் என்பதன் கருத்து (உதவி/ குறை கூறுதல்/ அற்பப் பொருள்) என்பதாகும்.*
3. *ஸூரா அல்மாஊனில் இடம்பெற்றுள்ள 'அத்தீன்' என்ற சொல்லின் கருத்து (மார்க்கம்/ கூலி கொடுக்கும் நாள்/ எழுந்து நிற்கும் நாள்) என்பதாகும்.*
4. *''தொழுகையாளிகளுக்கு கேடுதான்'' என இந்த ஸூரா அடையாளப் படுத்தியவர்கள் (விட்டுவிட்டு தொழுபவர்கள்/ தொழுகையை விட்டும் மறந்தவர்கள்/ தொழாதவர்கள்) ஆவர்.*

**(ஆ,) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:**

1. *(அ) ஸூரா அல்மாஊன் போதிக்கின்ற விடயங்கள் மூன்றைக் குறிப்பிடுக.*

   *(ஆ) ஸூரா மாஊனில் எத்தனை ஆயத்துக்கள் உள்ளன?*

   *(இ) அல்மாஊன் என்பதற்குச் சில உதாரணங்கள் தருக.*
2. *இந்த அத்தியாயம் நம்பிக்கையையும் சமூக வாழ்வையும் எவ்வாறு தொடர்புபடுத்துகின்றது?*
3. *மறுமை நம்பிக்கையற்றவன் என்பதை எடுத்துக்காட்ட இந்த ஸூரா முன்வைக்கும் பண்புகளைக் குறிப்பிடுக.*

4. எமது தொழுகைகளை உயிரோட்டமாக அமைத்துக் கொள்வதற்கான வழிகள் யாவை?

5. அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் உதவுவதற்கான வழிமுறைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

**(இ) பின்வருவனவற்றை இணைக்குக:**

| அ | ஆ |
|---|---|
| 1. தொழுகையாளிகளுக்கு கேடுதான் | اَرَءَيْتَ |
| 2. நீர் பார்க்கவில்லையா? | يَدُعُّ الْيَتِيْمَ |
| 3. அற்ப பொருட்களையும் தடுப்போர் | يُرَاءُوْنَ |
| 4. அனாதைகளை விரட்டுதல் | فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ |
| 5. பிறருக்கு காண்பிக்கவே | وَيَمْنَعُوْنَ الْمَاعُوْنَ |




# ஹதீஸின் வகைகள்
## (குத்ஸீ, நபவி)

*வஹீ என்ற பதத்தின் மூலம் இரு முக்கிய விடயங்கள் நாடப்படுகின்றன. ஒன்று அல்லாஹ்வின் கலாமாகிய அல் குர்ஆன். இது* ***வஹீ மத்லுவ்வு*** *(ஓதிக் காண்பிக்கப்பட்ட வஹி) என அழைக்கப்படும். மற்றையது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஹதீஸ்களாகும். இது* ***வஹீ கைறு மத்லுவ்வு*** *(ஓதிக் காண்பிக்கப்படாத வஹி) என அழைக்கப்படும்.*

*நாம் இப்பாடத்தில் வஹீயின் இரண்டாம் பிரிவாகிய ஹதீஸ்கள் பற்றி அறிந்து கொள்வோம்.*

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வார்த்தைகளும் வஹீயாக அருளப்பட்டவையே என்பதைப் பின்வரும் அல் குர்ஆன் வசனம் உறுதிசெய்கின்றது:*

*அதாவது:*

وَمَا يَنْطِقُ عَنِ الْهَوٰىؕ اِنْ هُوَ اِلَّا وَحْيٌ يُّوْحٰى

***‘‘அவரது விருப்பப்படி எதனையும் அவர் கூறுவதில்லை. அவர் கூறுவதெல்லாம் வஹீ தவிர வேறில்லை.’’ (53: 3-4)***

*அவ்வாறே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்:*

'' أَلاَ وَإِنِّي أُوتِيْتُ الْقُرْآنَ وَمِثْلَهُ مَعَهُ ''

''அறிந்து கொள்ளுங்கள் எனக்கு அல் குர்ஆனும் அதனுடன் அது போன்று இன்னுமொன்றும் கொடுக்கப்பட்டுள்ளன.'' (அபூதாவூத், அஹ்மத்)

மேற்குறிப்பிட்டவாறு ஹதீஸ்கள் வஹீ என்ற தலைப்பினுள் அடங்கியுள்ள போதிலும் அடிப்படையில் அல் குர்ஆனுக்கும் ஹதீஸ்களுக்குமிடையில் பல வேறுபாடுகள் உள்ளன. அல் குர்ஆனின் வார்த்தைகள், அதன் உள்ளடக்கம் அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்டவையாக இருக்கும். ஹதீஸ்களின் உள்ளடக்கம் அல்லாஹ்விடமிருந்து அறிவிக்கப்பட்டவையாகவும் அவற்றின் வார்த்தைப் பிரயோகங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடையதாகவும் அமைந்திருக்கின்றன. இதுவே அல் குர்ஆனுக்கும் ஹதீஸுக்குமிடையிலான அடிப்படை வேறுபாடாகும்.

இனி ஹதீஸ்களின் முக்கிய இரு பிரிவுகளைான ஹதீஸ் குத்ஸீ, ஹதீஸ் நபவீ பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

## ஹதீஸ் குத்ஸீ

அல்லாஹ் கூறுகிறான் என்ற வார்த்தையுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ்கள் **ஹதீஸ் குத்ஸீ** என அழைக்கப்படுகின்றன. உதாரணமாக:

يَقُولُ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَليهِ وَسَلَّمَ عَنِ اللهِ سُبْحَانَهُ وَتَعَالَى: "قال اللهُ أَعْدَدْتُ لِعِبَادِيَ الصَّالِحِينَ مَا لاَ عَيْنٌ رَأَتْ وَلاَ أُذُنٌ سَمِعَتْ وَلاَ خَطَرَ عَلَى قَلْبِ بَشَرٍ" (رواه البخاري)

அல்லாஹ் கூறுவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: ''எனது ஸாலிஹான அடியார்களுக்கு எந்தக் கண்ணும் கண்டிராத எந்தக் காதும் கேட்டிராத மனித கற்பனைக்கு எட்டாதவற்றை நான் தயார்செய்து வைத்துள்ளேன்'' என அல்லாஹ் கூறுகின்றான். (புகாரி)

### அல் குர்ஆனுக்கும் ஹதீஸ் குத்ஸீக்கும் இடையிலான வேறுபாடு

1. அல் குர்ஆன் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஊடாக அருளப்பட்டதாகும். ஹதீஸ் குத்ஸீ சில சமயங்களில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஊடாகவும் மற்றும் சில சமயங்களில் வேறு வடிவங்களிலும் அருளப்பட்டுள்ளன.
2. அல் குர்ஆன் அனைத்தும் முதவாதிர் எனும் முழுமையான நம்பகத் தரம் வாய்ந்ததாகும். ஹதீஸ் குத்ஸீ அவ்வாறானதல்ல. அதில் பல வகை உண்டு.
3. அல் குர்ஆன் தொழுகையில் ஓதப்படக்கூடிய ஒன்றாகும். அத்துடன் அதனை ஓதுவது ஒரு வணக்கமுமாகும். ஆனால், ஹதீஸ் குத்ஸீ அவ்வாறானதல்ல.

4. அல் குர்ஆன் முஃஜிஸாக்களுள் ஒன்றாகும். ஹதீஸ் குத்ஸீ முஃஜிஸாக்களுள் அடங்குவதில்லை.
5. அல் குர்ஆன் வரையறுக்கப்பட்ட 6666 வசனங்களைக் கொண்டது. ஹதீஸ் குத்ஸி எண்ணிக்கை சரியாகக் குறிப்பிடப்படவில்லை.
6. அல் குர்ஆன் முழுவதும் மனித உள்ளங்களில் பரவலாக மனனமிடப் பட்டுள்ளது. ஹதீஸ் குத்ஸி முழுவதும் அவ்வாறு மனனமிடப்படவில்லை.
7. ஹதீஸ் குத்ஸீ ஆர்வமூட்டல், அச்சமூட்டி எச்சரிக்கை செய்தல், எதிர்பார்ப்புடன் கூடிய நம்பிக்கை போன்ற கருப்பொருளையே அதிகம் சார்ந்திருக்கும்.

## ஹதீஸ் நபவீ

இவ்வகை ஹதீஸ்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சொல், செயல், அங்கீகாரம், அவர்களது சரீரம் மற்றும் பண்புகள் தொடர்பான விவரணங்களை உள்ளடக்கியதாகும். இவற்றுள் **சொல் சார்ந்தவை - கவ்லி** எனவும் **செயல் சார்ந்தவை - பிஅலி** எனவும் **அங்கீகாரம் பெற்றவை - தக்ரீரி** எனவும் அழைக்கப்படுகின்றன. பின்வருவன ஹதீஸ் நபவிக்கான சில உதாரணங்களாகும்:

قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيهِ وَسَلَّم  :"كَلِمَتَانِ خَفِيفَتَانِ عَلَى اللِّسَانِ، ثَقِيْلَتَانِ فِيْ الْمِيْزَانِ، حَبِيْبَتَانِ إِلَى الرَّحْمَنِ سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ: سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ، ".

''நாவுக்கு (மொழிவதற்கு) இலகுவானதும், தராசுக்குப் பாரமானதும், அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானதுமான இரு சொற்றொடர்கள் உள்ளன. அவை: ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி, ஸுப்ஹானல்லாஹில் அழீம் என்பனவாகும்'' (புஹாரி முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.

قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيهِ وَسَلَّم : "إِذَا كُنْتُمْ ثَلَاثَةً، فَلَا يَتَنَاجَ رَجُلَانِ دُوْنَ الْآخَرِ حَتَّى تَخْتَلِطُوا بِالنَّاسِ أَجَلَ أَنْ يَحْزِنَه".

''நீங்கள் மூவர் இருக்கும்வேளை, மக்களோடு கலக்காதவரை மூன்றாம் நபரை விட்டு விட்டு இருவர் இரகசியம் பேச வேண்டாம். அது அவருக்குக் கவலையை ஏற்படுத்தும்.'' (புஹாரி)

**இவ்வாறாக இலட்சக் கணக்கில் நபி மொழிகள் உள்ளன. எனவே ஹதீஸ்களுக்கு முக்கியத்துவம் வழங்கி அதனை நமது வாழ்வில் நடைமுறைப்படுத்த முயற்சிப்போமாக.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

الْحَدِيْثُ الْقُدْسِيْ النَّبَوِي الْوَحْيُ مُعْجِزَاتٌ مُتَوَاتِرٌ وَحْيٌ مَتْلُوْ

وَحْيٌ غَيْرَ مَتْلُوْ تَقْرِيْرِي فِعَلِي قَوْلِي

### பயிற்சி

**(அ) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

*1.* ஹதீஸ் குத்ஸீ இஸ்லாத்தின் மூன்றாவது மூலாதாரமாகும். ( )

*2.* அல் குர்ஆன் முழுவதும் முழுமையாக ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும். ( )

*3.* சொல், செயல், அங்கீகாரம் போன்றன ஹதீஸ் நபவியில் உள்ளன. ( )

*4.* வஹீ கைறு மத்லுவ்வு என்பது அல் குர்ஆனைக் குறிக்கும். ( )

**(ஆ) பின்வருவனவற்றுக்கு உதாரணமாக ஒவ்வொரு ஹதீஸ் தெரிந்து எழுதுக.**

★ ஹதீஸ் குத்ஸீ

★ ஹதீஸ் நபவி



# 21

# ஹதீஸின் பிரிவுகள்

இஸ்லாத்தின் பிரதான இரு அடிப்படைகளுள் அஸ்ஸுன்னா எனப்படும் ஹதீஸ்கள் இரண்டாவதாகும். அவற்றைப் பாதுகாக்கும் பணியை ஸஹாபாக்கள் தொடக்கம் இஸ்லாமிய சமூகத்தின் துறைசார் அறிஞர்கள் முன்னெடுத்தனர். ஸஹாபாக்கள் காலத்தில் ஹதீஸ்கள் வாய்வழியாகவே பரிமாறப்பட்டு வந்தன. அவற்றைத் தொகுக்கும் பணி தாபிஈன்கள் காலத்திலேயே முக்கியத்துவம் கொடுத்து மேற்கொள்ளப்பட்டது. ஏனெனில், பிற்காலத்தில் ஹதீஸ்களுக்கிருந்த அங்கீகாரத்தைப் பயன்படுத்திப் பல்வேறு பிரிவினர் தத்தமது அணிக்குப் பலம் சேர்க்க ஹதீஸ்களைப் புனைந்தனர். இவ் அபாயத்திலிருந்து ஸுன்னாவையும் முஸ்லிம் சமூகத்தையும் பாதுகாக்கும் பெரும் பணியை அவ்வக்கால ஹதீஸ் துறை அறிஞர்கள் மேற்கொண்டனர். அதனடிப்படையிலேயே ஹதீஸ்களைத் தரம் பிரித்து அவற்றைத் தொகுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஹதீஸ் துறையின் பாதுகாப்புக்கும் விருத்திக்கும் ஸஹாபாக்களும் தாபிஈன்களும் அவர்களைத் தொடர்ந்து துறைசார் முன்னணி அறிஞர்கள் பலரும் அரும் பணியாற்றியுள்ளனர். அவர்களுள் அன்னை ஆஇஷா, அபூஹுரைரா, அப்துல்லாஹ் இப்னு உமர், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹும் போன்ற ஸஹாபாக்களும், இமாம் அப்துல்லாஹ் பின் முபாரக், இமாம் இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ, இமாம் ஸஈத் இப்னு முஸய்யப், இமாம் புகாரீ, இமாம் முஸ்லிம் ரஹிமஹுமுல்லாஹ் போன்ற பலரும் குறிப்பிடத்தக்கோராவர்.

காலத்தின் தேவையும் ஹதீஸின் பாதுகாப்பும் கருதி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுள் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இஸ்னாத் (ஹதீஸ் அறிவிப்பாளர் தொடர்) அடிப்படை அறிமுகப்படுத்தப்பட்டதைக் கொள்ளலாம். அத்துடன் ஸுன்னாவின் நம்பகத் தன்மையும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகின்றது. இஸ்னாதை ஒட்டியதாக அதற்குத் துணையாக அஸ்மாஉர் ரிஜால், இல்முல் ஜரஹ் வத்தஃதீல் போன்ற விஷேட துறைகள் வளர்ச்சி பெற்றன. இவையனைத்தையும் தழுவியதாகவே **உலூமுல் ஹதீஸ்** அல்லது **இல்முல் முஸ்தலஹ்** எனும் துறை காணப்படுகிறது.

இஸ்னாத் எனும் அறிவிப்பாளர் தொடரில் இடம்பெறும் ராவிகள் எனப்படும் அறிவிப்பாளர்களின் எண்ணிக்கை, அவர்களின் தொடர் இடையறாமை, அவர்களது மனனம், நம்பகத்தன்மை, மார்க்கப் பின்னணி போன்ற விடயங்களில் அவர்கள் கொண்டிருக்கும் சிறப்புத் தகைமைகளை அடிப்படையாகக் கொண்டே ஹதீஸ்கள் **ஸஹீஹ், ஹஸன், ழஈப்** என தரப்படுத்தப்படுகின்றன.

***ஸஹீஹ்:*** இவ்வகையான ஹதீஸ்கள் தேவையான அனைத்துத் தகைமைகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படும். இதில் ராவிகள் தொடர் இடையறாதிருப்பதுடன் அதில் இடம்பெற்றுள்ள அனைத்து ராவிகளும் நம்பிக்கைக்குரியவர்களாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பர். ஸஹீஹ் எனும் அந்துஸ்துப் பெற்ற ஹதீஸ்களை ஏற்றுக் கொள்வதும் அதனை வாழ்வில் கடைப்பிடிப்பதும் முஸ்லிம்கள் மீது கட்டாயமாகும். அதனை நிராகரிப்பது இறைத் தூதை நிராகரிக்கும் வழிகேட்டைச் சார்ந்ததாகும்.

***ஹஸன்:*** ஸஹீஹான ஹதீஸுக்குரிய தகைமைகளைப் பெற்றிருந்தும் தொடரில் இடம்பெறும் ராவிகளுள் ஒருவர் ஒப்பீட்டளவில் மனன சக்தியில் குறைந்த (ஆயினும் பலவீனமற்ற) வராயிருக்கும் பட்சத்தில் அந்த ஹதீஸ் ஹஸன் தரத்திற் கணிக்கப்படும். இவ்வகை ஹதீஸ்களும் ஸஹீஹைப் போன்றே ஆதாரமாகக் கொள்ளல், நடைமுறைப்படுத்தல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படும்.

***ழஈப்:*** ஹஸன் எனும் தரத்திலுள்ள ஒரு ஹதீஸுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளில் குறை காணப்படும் பட்சத்தில் அது பலவீனமான (ழஈபான) ஹதீஸ் வகையைச் சாரும்.

இவ்வாறு ஹதீஸ்களை ஒன்றுதிரட்டி அவற்றை மிகக் கவனமாக ஆராய்ந்து அவற்றைத் தெளிவுபடுத்தும் பணியில் பெரும் எண்ணிக்கையிலான அறிஞர்கள் அன்று முதல் இன்று வரை அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்றனர். அவர்களது பணிகளின் வெளிப்பாடாக இலட்சக் கணக்கான நபிமொழிகளைப் பல வடிவங்களில் இன்று இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறு பணிசெய்த மேதைகளுள் ஆறு முன்னணி ஹதீஸ் நூற்களின் இமாம்கள் விசேடமானவர்களாவர். இவர்களது தொகுப்புக்கள் **அஸ் ஸிஹாஹுஸ் ஸித்தா** என்று அழைக்கப்படுகின்றது.

மேலும் **குதுபுஸ் ஸித்தா, ஸஹீஹைன் வஸுனன் அர்பஆ** என்ற பெயர்களிலும் அவை அழைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் அல் குர்ஆனுக்கு அடுத்த நிலையில் **ஸஹீஹைன்** என வழங்கப்படும் ஸஹீஹ் புஹாரி மற்றும் ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய இரு ஹதீஸ் கிரந்தங்களும் காணப்படுகின்றன.

அவற்றுக்கு அடுத்த நிலையில் **ஸுனன் அர்பஆ** என வழங்கப்படும் திர்மிதீ, இப்னு மாஜா, அபூதாவூத், நஸாஈ ஆகிய நான்கு கிரந்தங்களும் காணப்படுகின்றன. இவை போன்ற வேறு பல ஹதீஸ் தொகுப்புக்களும் உள்ளன.

**எனவே, ஹதீஸின் முக்கியத்துவத்தையும் சிறப்பினையும் விளங்கி ஏற்று அவற்றை எமது வாழ்வில் நடைமுறைப்படுத்த முயற்சிப்போமாக.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

السُّنَّةُ    الحَدِيْثُ    الصَّحَاحُ السِّتَّةُ    الكُتُبُ السِّتَّةُ    إِسْنَادٌ    صَحِيْحَيْنِ

صَحِيْحٌ    حَسَنٌ    مَوْضُوْعٌ    مَقْبُوْلٌ    مَرْدُوْدٌ    أَسْمَاءُ الرِّجَالِ

عِلْمُ الْجَرْحِ وَالتَّعْدِيْلِ    ضَعِيْفٌ

### பயிற்சி

1. அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தா அல்லது குதுபுஸ் ஸித்தாவில் உள்ளடங்கும் ஹதீஸ் நூற்களைக் குறிப்பிடுக.
2. ஸஹீஹான ஹதீஸ் என்றால் என்ன?
3. ஸஹீஹைன் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
4. ஹதீஸ் துறையில் அதிகம் ஈடுபாடுகாட்டிய ஸஹாபாக்கள் இருவரைக் குறிப்பிடுக.
5. இஸ்னாத் என்ற பதம் எதனைக் குறிக்கின்றது?




# மவ்ழூஆத்களின் தோற்றமும் விளைவுகளும்

ஹதீஸ்களைப் பாதுகாக்கும் பணியை நம் முன்னோர்களான ஸஹாபாக்கள், தாபிஈன்கள், அவர்கள் பின்வந்த இமாம்கள் ஏற்று அதனைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளனர் என்பதையும் முன்னைய பாடத்தில் நாம் கற்றோம். அவர்களது இம்முயற்சியின் பயனாகவே முன்னைய நபிமார்களின் வழிகாட்டல்கள் அவர்களது சீடர்களால் அல்லது சீடர்களது அக்கறையின்மையால் மாசுபடுத்தப்பட்டு வழக்கொழிந்துவிட்டமை போன்ற அவல நிலை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஸுன்னாவுக்கு ஏற்படாது தவிர்க்கப்பட்டுள்ளது.

ஹதீஸ்களைப் புனைந்துரைப்பது மாபெரும் குற்றச்செயலாகும்.

مَنْ كَذَبَ عَلَيَّ مُتَعَمِّدًا فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنَ النَّارِ

‘‘யார் வேண்டுமென்று என்னைத் தொடர்புபடுத்திப் பொய்யுரைக்கிறாரோ அவர் தனது தங்குமிடமாக நரகத்தைத் தெரிவுசெய்து கொள்ளட்டும்’’ (புகாரி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முற்கூட்டியே எச்சரித்துள்ளமையானது, ஹதீஸ் இவ்வாறானதோர் ஆபத்தை எதிர்கொள்ளும் என்பதைப் புலப்படுத்துகின்றது.

ஹதீஸ்கள் வாய்வழியாகப் பரிமாறப்பட்டு வந்தமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்ட பல்வேறு குழுவினர் தத்தமது கொள்கைகள், சிந்தனைகள், இலக்குகள் போன்றவற்றை அடைந்து கொள்ள, தத்தமது அணிகளுக்கு ஆதரவு திரட்ட நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் பெயரில் பல பொய்யான செய்திகளைப் புனைந்து வெளியிட்டனர். அவை மவ்ழூஆத் எனப்படுகின்றது. அவை மக்கள் மத்தியில் சாதாரணமாகப் பரவவும் செல்வாக்குச் செலுத்தவும் ஆரம்பித்தன.

மவ்ழூஆத்கள் அறிமுகமான வேளை மதிப்பிற்குரிய இமாம்கள் அதனை எவ்வாறு எதிர்கொண்டனர் என்பது பற்றி இமாம் முஹம்மத் இப்னு ஸீரீன் ரஹிமஹுுல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

''(கலீபா உஸ்மான் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களுக்கெதிரான) குழப்பம் ஏற்படுத்தப்படும் வரை இஸ்னாத் பற்றிக் கேட்பது வழக்கில் இருக்கவில்லை. அந்தக் குழப்பத்தின் பின்னரே ஹதீஸைக் கூறுவோரிடம் உங்களுக்குக் கூறியவர்களைக் குறிப்பிடுங்கள் என வினவப்பட்டது. அவர்கள் அஹ்லுஸ் ஸுுன்னாவைச் சார்ந்தவர்களாயின் அவர்களது ஹதீஸ்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. குழப்பக் காரர்களாயின் அவர்களது ஹதீஸ்கள் நிராகரிக்கப்பட்டன.''

மவ்ழூஆத்களை இமாம்கள் பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்துகின்றனர்.

''நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லாத, செய்யாத, அங்கீகரிக்காத செய்திகளை அவர்களது பெயரில் பொய்யாகப் புனைந்துரைத்தல்''

இவ்வகையான ஹதீஸ்கள் ழஈபான ஹதீஸ்களை விடவும் மிகவும் குறைந்த தரத்திலேயே கணிக்கப்படும். ஏனெனில், ழஈப் அடிப்படையில் ஹதீஸ் எனும் வரையறைக்கு உட்பட்டதாகும். மவ்ழூஐப் பொறுத்தவரை அறிவிப்பாளர்களுள் ஒருவரோ அல்லது பலரோ பொய் பேசுவோர் என அடையாளம் காணப்படுவதால் ஹதீஸ் எனும் அடிப்படையுள் அடக்குவதே கேள்விக்குறியாகும். இவற்றை அறிவுறுத்தல் நோக்கங்களுக்கன்றி வேறு எவ்வித சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்துவது பிழையாகும்.

இவ்வாறு மவ்ழூஆன ஹதீஸ்களைப் புனையும் செயற்பாடு கலீபா உஸ்மான் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சியின் பின்னரேயே தோன்றியது. இதன் ஆரம்ப கர்த்தாவாக அப்துல்லாஹ் பின் ஸபஃ எனும் யூத நயவஞ்சகன் காணப்பட்டதாக இமாம்கள் குறிப்பிடுகின்றனர். அதனைத் தொடர்ந்து பல்வேறு நோக்கங்களுக்காகப் பல தரப்பினரால் இப்பாதகச் செயல் மேற்கொள்ளப்பட்டது. அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்:

### 1. அல்லாஹ்வின் அன்பைப் பெறுதல்:

மார்க்கத்தில் ஆழ்ந்த அறிவின்றி வணக்க வழிபாடுகளில் அதிக ஆர்வம் கொண்ட சிலர், மக்களை வணக்க வழிபாடுகளில் ஆர்வம் கொள்ளச் செய்யவும், பாவங்களிலிருந்து விலக்குவதற்கும், பொய்யான வாக்குறுதிகளையும் சிறப்பம்சங்களையும் எச்சரிக்கைகளையும் நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம்

அவர்களது பெயரால் புனைந்து பிரசாரம் செய்தனர். இவர்கள் மக்கள் மத்தியில் ஸாலிஹானவர்களாக அங்கீகாரம் பெற்றிருந்தமையால் இவர்களது கருத்துக்களை மக்கள் சந்தேகம் கொள்ளாது ஏற்றுக் கொண்டனர். இவர்கள் ஏனைய தரப்பினரைப் பார்க்கிலும் ஆபத்தானவர்கள் என ஹதீஸ் கலை இமாம்கள் குறிப்பிடுகின்றனர்.

### 2. அரசியல், சிந்தனைப் பிரிவுகளுக்கு வலுச்சேர்த்தல்:

கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது படுகொலையின் பின்னர் தோன்றிய அரசியற் பிரிவுகள். இவர்களுள் கவாரிஜ்கள், றாபிழாக்களான ஷீஆக்கள், உமைய்யா ஆதரவாளர்கள் போன்றோரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

''அலி ரழியல்லாஹு அன்ஹு மனிதர்களுள் சிறந்தவர், இதனை மறுப்பவர் காபிராவார்'' என அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆதரவாளர்களும், ''அல்லாஹ்விடம் நம்பிக்கைக்குரியவர்கள் மூவராவர்: நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம், முஆவியா ஆகியோராவர் என்று முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆதரவாளர்களும் ஹதீஸ்கள் என்ற பெயரில் போலியான கருத்துக்களைப் பரப்பினர்.

### 3. இஸ்லாத்தை மாசுபடுத்த முற்பட்ட நயவஞ்சகர்கள்:

இஸ்லாத்தை மாசுபடுத்த முற்பட்ட இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்தில் நேரடியாக எதனையும் செய்துவிட முடியாமற் போனபோது மவ்ழூஆத்கள் மூலம் அதனை சாதிக்க முற்பட்டனர். பிற்காலத்தில் இவர்கள் 'ஸின்தீக்கள்' என அழைக்கப்பட்டார்கள்.

### 4. ஆட்சியாளர்களிடம் நற்பேறு பெற்றுக் கொள்ளல்:

சுயநலமும் பேராசையும் கொண்ட ஒரு சாரார் கலீபாக்களிடம் நற்பெயர் பெற்றுக் கொள்ளும் நோக்கில் முகஸ்துதியாக பல மவ்ழூஆத்களைப் புனைந்துரைத்தனர்.

### 5. உழைப்பிற்காகக் கதை கூறுவோர்:

அபூர்வமானதும் உணர்ச்சிகரமானதுமான கதைகள் மூலம் மக்களைத் தூண்டி அவர்களது ஆதரவையும் சன்மானங்களையும் பெற்றுக் கொள்வதற்காக கதை கூறுவோர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொடர்புபடுத்தி மவ்ழூஆத்களைப் பரப்பலாயினர்.

### 6. பிரபலம் தேடுவோர்:

புழக்கத்திலில்லாத செய்திகளைக் கூறுவதன் மூலம் மக்கள் கவனத்தைத் தம் பக்கம் திருப்புவதற்காக மவ்ழூஆத்களைப் புனைந்தனர்.

### 7. அங்காடி வியாபாரிகள்:

சந்தையில் தமது பொருட்களை விரைவாக விற்றுத் தீர்க்க அப்பொருள் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொடர்புபடுத்தி புனைந்துரைத்தனர்.

## 8. அடிப்படைவாதம் பிரதேச வாதத்தை தூண்டுதல்:

ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது ஊர் ஏனையவற்றை விட சிறப்புமிக்கது எனக் காட்டுவதற்கு புனைந்துரைத்தனர்.

மேற்கூறப்பட்டது போன்ற இன்னும் சில நோக்கங்களை மையமாகக் கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பெயரால் ஆயிரக்கணக்கான போலி வாக்கியங்கள், ஹதீஸ்கள் என அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றைத் தெரிந்தெடுத்து தெளிவுபடுத்துவதில் ஹதீஸ் துறை அறிஞர்கள் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றனர். அவர்களது இப்பணி ஹதீஸ்களின் தூய்மையைப் பாதுகாப்பதற்குப் பெரிதும் உதவியது.

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

أَهْلُ السُّنَّةِ    ضَعِيْفٌ    الْمَوْضُوْعُ

**பயிற்சி**

1. மவ்ழூஆத் எவ்வாறு தோற்றம் பெற்றது?
2. மவ்ழூஆத் ஒன்றைக் குறிப்பிடுக.
3. மவ்ழூஆத் உருவானமைக்கு மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.
4. மவ்ழூஆத்தில் ஈடுபட்ட இரு குழுவினரைப் பெயரிடுக.
5. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீது பொய்யுரைப்பவருக்கான தண்டனை யாது?




# 23

# நுபுவ்வத்தும் மிஃராஜும்


## அந் நுபுவ்வத்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமணம் முடித்ததைத் தொடர்ந்து அவரது குடும்ப, சமூக உணர்வுகள் அதிகரித்தன. ஹஜருல் அஸ்வதை கஃபாவில் பதிக்கும் நிகழ்வில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்த பங்களிப்பு அவர்கள் பற்றிய நன்மதிப்பை வலுப்படுத்தியது. இருந்தபோதும் அச்சமூகத்தில் காணப்பட்ட மோசமான நம்பிக்கைகள் மற்றும் நடவடிக்கைகள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சிந்திக்கத் தூண்டியது.



ஹிராக் குகை

இந்நிலையில் ஹிராக் குகையில் தனித்திருக்க ஆரம்பித்தார்கள். ரமழானின் இறுதிப் பகுதியில் நீண்ட நேரம் தியானத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இவ்வேளை ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திடீரெனத் தோன்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இறுகக் கட்டியணைத்து, ''இக்ரஃ (ஓதுவீராக)'' என விளித்தார்கள். உம்மி நபியவர்கள் தனக்கு ஓதத் தெரியாதென உண்மையை உரைத்தார்கள். இரண்டாம் முறையாகக் கட்டித்தழுவி, ''இக்ரஃ'' எனக் கூறிய போதும் அதே பதிலையே கூறினார்கள். மூன்றாம் முறையாகக் கட்டித் தழுவி, இக்ரஃ எனக் கூறியபோது எதை ஓதுவது எனக் கேட்டார்கள். அப்போது,




***‘‘நபியே அனைத்தையும் படைத்த உங்களது இறைவனின் திருப் பெயரால் ஓதுவீராக. அவனே மனிதனை கருவிலிருந்து படைக்கிறான். (நபியே பின்னும்) நீங்கள் ஓதுங்கள். உங்கள் இறைவன் மகா பெரும் கொடையாளி. அவன்தான் எழுதுகோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக் கொடுத்தான். அன்றி (அதன் மூலம்) மனிதர்கள் அறியாதவற்றை எல்லாம் அவனுக்கு கற்றுக் கொடுக்கின்றான்’’. (96 : 1-5)***

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அதனை ஓதினார்கள், அது அவர்களின் உள்ளத்திலும் பதிந்துவிட்டது.

இது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஒரு புதிய அனுபவமாகும். அதனால் அதிர்ச்சிக்குள்ளானார்கள். அவர்களின் உடல் பயத்தால் நடுங்கியது. வீட்டை நோக்கி விரைந்தார்கள். மனைவி கதீஜாவிடம் ‘‘என்னைப் போர்த்துங்கள்... என்னைப் போர்த்துங்கள்’’ என அவசரப்படுத்தினார்கள். கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஆறுதல் கூறி அமைதிப்படுத்தினார்கள். சற்று நேரத்தின் பின்னர் அமைதியடைந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிராவில் தனக்கு ஏற்பட்ட சம்பவத்தை எடுத்துக் கூறினார்கள்.

கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குணநலன்களை எடுத்துக்காட்டி அவரைத் தேற்றினார்கள். பின்னர் தனது உறவினரும் முன்னைய வேதங்களைப் படித்தவருமான வரகா பின் நவ்பலிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்துச் சென்றார்கள்.

தனக்கு நிகழ்ந்ததைச் சொன்னார்கள். அவர் அதை அமைதியாக செவிமடுத்த பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதையும் அவரிடம் வந்தவர் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்த **நாமூஸுல் அஃழம்** ஆகிய ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் என்பதையும் எடுத்துக் கூறினார்கள். அதேவேளை எதிர்வு கூறல்கள் சிலவற்றையும் எடுத்துச் சொன்னார்கள்.

தனது கணவரை முதன் முதலாக நபியென அங்கீகரித்த கதீஜா ரழி யல்லாஹு

அன்ஹா அவர்கள் எல்லா வகையிலும் கணவருக்குப் பக்கபலமாக நின்று உதவினார்கள். தொடர்ந்து இளமைக் கால நண்பர் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டில் வசித்த விடுதலை பெற்ற அடிமை ஸைத் பின் ஹாரிதா ரழியல்லாஹு அன்ஹு, சிறுவர் அலீ ரழியல்லாஹு அன்ஹு ஆகியோரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நபியாக ஏற்றுக் கொண்டனர். பின்னர் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் வேறு பலரை இஸ்லாத்தை ஏற்கச் செய்தார்கள்.

இதனைத் தொடர்ந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது உறவினரை விருந்துக்கழைத்து தனது தூதை எத்தி வைத்ததோடு, அவர்களின் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்தார்கள். எனினும், அங்கு ஆதரவைவிட எதிர்ப்பே உருவாகியது. அபூலஹப் தலைமையில் எதிர்ப்புக்கள் தோன்றின. எனினும், கலக்கமுறாத நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முதலில் இரகசியமாகவே தனது பிரசாரத்தை முன்னெடுத்தார்கள். பின்னர், ஸபா குன்றில் ஏறி எல்லா குலத்தவரையும் கூவியழைத்து தனது தூதை எத்திவைத்தார்கள். அங்கும் எதிர்ப்புக் குரல்களே ஒலித்தன. எனினும், அவர்கள் தமது பிரசாரத்தைக் கைவிடவில்லை. சவால்களுக்கு மத்தியில் இரகசியமாகவும் பகிரங்கமாகவும் தனது பணியை நிறைவேற்றத் துணிந்தார்கள். அப்போது ஏற்பட்ட உடல், உள, சமூக ரீதியான பாதிப்புக்களையும் சகித்துக் கொண்டார்கள்.

## அல் இஸ்ராஉம் அல் மிஃராஜும்




(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன்; அவன் தன் அடியாரை பைத்துல் ஹராமிலிருந்து (கஃபத்துல்லாஹ்விலிருந்து தொலைவிலிருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள) யமஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான்; (மஸ்ஜிதுல்அக்ஸாவின்)சுற்றெல்லைகளைநாம்அபிவிருத்திசெய்திருக்கின்றோம்; நம்முடைய அத்தாட்சிகளை அவருக்குக் காண்பிப்பதற்காக (அவ்வாறு அழைத்துச் சென்றோம்); நிச்சயமாக அவன் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும்; பார்ப்போனாகவும் இருக்கின்றான். (17:01)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆதரவாகவும், பக்கபலமாகவும் இருந்தோரான அபூதாலிப், கதீஜா ரழியல்லாஹு அன்ஹா ஆகியோரின் இழப்பும், தாயிபில் எதிர்கொண்ட கசப்பான அனுபவமும், மக்கள் அவரைக் காயப்படுத்தியமை முதலியனவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களை அதிகம் கவலை கொள்ளச் செய்தன. இந்நிலையில் அல்லாஹ் அல் அக்ஸா பள்ளிவாசலுக்கான இராப் பயணத்தையும் (அல் இஸ்ரா), வானங்களுக்கு ஊடான பயணத்தையும் (அல் மிஃராஜ்) ஏற்படுத்திக் கொடுத்தான்.

இந்த மகத்தான நிகழ்வு நுபுவ்வத் 12 ஆம் ஆண்டு ரஜப் மாதம் 27 ஆம் இரவு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 52 ஆவது வயதில் இடம்பெற்றது. அவ்விரவில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வருகிறார்கள். தூங்கிக் கொண்டிருந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விழித்தெழச் செய்கிறார்கள். அவர்களின் இதயத்தை சுத்திகரிக்கிறார்கள். புராக் எனும் வாகனத்திலேற்றி மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹரமிலிருந்து ஜெரூஸலத்திலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு (பைத்துல் முகத்தஸ்) அழைத்துச் செல்கிறார்கள். வழியில் சில காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. அவை இவ்வுலக செயற்பாடுகளின் விளைவை எடுத்துக் காட்டுவனவாக அமைந்திருந்தன. மஸ்ஜிதுல் அக்ஸாவின் ஒரு தூணில் புராக் கட்டி வைக்கப்படுகின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அங்கு முன்னைய நபிமார்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்துகிறார்கள். பைத்துல் முகத்தஸிலிருந்து மிஃராஜ் பயணத்தை ஆரம்பிக்கிறார்கள்.

இப்பயணத்தின்போது ஒவ்வொரு வானிலும் நபிமார்களைச் சந்திக்கிறார்கள். அவர்களால் வரவேற்கப்பட்டு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

முறையே ஆதம் அலைஹிஸ்ஸலாம், ஈஸா அலைஹிஸ்ஸலாம், யூஸுப் அலைஹிஸ்ஸலாம், இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம், ஹாரூன் அலைஹிஸ்ஸலாம், மூஸா அலைஹிஸ்ஸலாம், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் ஆகியோரைச் சந்திக்கின்றார்கள். ஏழு வானங்களுக்கு அப்பால் **ஸித்ரதுல் முன்தஹாவை** அடைந்து அல்லாஹ்வைச் சந்தித்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு 50 நேரத் தொழுகையைப் பரிசாக வழங்கினான். வழியில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஆலோசனைக்கேற்ப மீண்டும் மீண்டும் அல்லாஹ்விடம் சென்று படிப்படியாகக் குறைத்து ஐந்து நேரத் தொழுகையுடன் வந்து சேர்ந்தார்கள்.

இப்பயணத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சுவன இன்பங்களும் நரக வேதனைகளும் காண்பிக்கப்பட்டன. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவற்றை விளக்கினார்கள். அடுத்த நாள் காலை இந்த நிகழ்வை அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கேள்வியுற்றபோது எந்தத் தயக்கமுமின்றி உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள். இதனால்தான், அவர்கள் ஸித்தீக் (உண்மைப்படுத்தியவர்) என்ற சிறப்புப் பெயர் பெற்றார். ஆனால், காபிர்கள் அதனைப் பரிகசிக்க ஆரம்பித்தனர். கேள்விக்கு மேல் கேள்விகளைத் தொடுத்தனர். அவ்வேளை, குறித்த அந்த இரவில் வெவ்வேறு இடங்களில், தான் சந்தித்த வியாபாரக் கூட்டத்தார் பற்றிய தகவல்களைக் கூறியபோதும் மஸ்ஜிதுல் அக்ஸாவின் வடிவமைப்பு பற்றிய கேள்விகளுக்கு விடையளித்தபோதும் அவர்கள் திருப்தியடையவில்லை.

மிஃராஜ் நிகழ்வு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அற்புதங்களில் ஒன்றாகவும், அந்தஸ்தை எடுத்துக் காட்டுவதாகவும், ஈமானை பலப்படுத்துவதாகவும், அவர்களின் உள்ளத்துக்கு ஆறுதல் அளிப்பதற்காகவும் அமைகின்றது.

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

الْحَجَرُ الأَسْوَدُ    الْحِرَاءُ    الإِسْرَاءُ    الْمِعْرَاجُ    سِدْرَةُ الْمُنْتَهَى


### பயிற்சி

**அ. சுருக்கமான விடை தருக.**

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தியானம் செய்த குகை எது?
2. நாமூஸுல் அஃழம் என அழைக்கப்பட்டவர் யார்?
3. முதலில் இஸ்லாத்தை ஏற்ற பெண்மணி யார்?
4. அல்இஸ்ரா எனப்படுவது யாது?
5. ஸித்ரதுல் முன்தஹா எங்கு உள்ளது?
6. புராக் எனப்படுவது யாது?
7. மஸ்ஜிதுல் அக்ஸா எங்கு உள்ளது?
8. அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஸித்தீக் என்ற பெயர் எப்போது கிடைத்தது?
9. 50 நேரத் தொழுகை ஐந்து நேரமாகக் குறைக்கப்படக் காரணமாக இருந்தவர் யார்?
10. முதல் வஹி இறங்கியபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நபி என்பதை உறுதிப்படுத்திய அறிஞர் யார்?

**ஆ. சுருக்கமாக விளக்குக.**

1. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 'ஓதுவீராக' என்று விளித்தபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடன் ஓதாமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.
2. அல் இஸ்ராவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெற்ற அனுபவங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
3. அல் இஸ்ராவுக்கும் அல் மிஃராஜுக்கும் இடையிலுள்ள வேறுபாடு யாது?




# முஹம்மத் ﷺ அவர்களின் தஃவாவும் சவால்களும்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முதல் வஹி அதிர்ச்சியாகவே அமைந்தது. அதிலிருந்து அவர் தெளிவு பெற்றாலும் அந்த நிலை முற்றாக நீங்கிவிடவில்லை. அவ்வேளையில்தான் **''போர்த்திக் கொண்டிருக்கும் நபியே நீங்கள் எழுந்து (மனிதர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்யுங்கள்.'' (74: 1-2)** என்ற வசனத்தினூடாக இஸ்லாத்தை மனிதர்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான (தஃவா) கட்டளையை அல்லாஹ் பிறப்பித்தான்.

இதனை ஏற்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முதலில் தனது குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் அதனைச் சொன்னார்கள். அடுத்து தனது கோத்திரத்தவர்களை விருந்துக்கு அழைத்து இஸ்லாத்தை எடுத்துரைத்து தனக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்கள். தொடர்ந்து ஸபா குன்றில் ஏறி பொது மக்களைக் கூவியழைத்துத் தனது தூதை எத்தி வைத்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எடுத்துச் சொன்ன தூதும் ஏகத்துவச் செய்தியும் குறைஷிகளுக்கு ஆச்சரியமாகவும் கசப்பாகவும் தெரிந்தது. அதனைத் தமது வழிபாட்டு முறைக்கு நேர் எதிரானதாகவும் தமது செல்வாக்கை இழக்கச் செய்வதாகவும் கருதினர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முதல் மூன்று ஆண்டுகளிலும் இரகசியமாகவே இஸ்லாத்தின் தூதை எத்திவைத்தார்கள். அவ்வேளை, குடும்பத்தில் சிலரும் நண்பர்களில் சிலரும், சமூகத்தில் நல்லவர்களாகக் காணப்பட்ட சிலரும், விக்கிரக வணக்கத்தையும் அன்றைய சமூகத்தில் நிலவிய படுபாதகச் செயல்கள் பலவற்றையும் விட்டொதுங்கி வாழ்ந்து வந்த ஹனீப்கள் எனப்பட்ட சிலரும், அடிமைகளிற் சிலரும் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்கள். அவர்களுக்கு ஸபா குன்றின் அடிவாரத்தில் அமைந்திருந்த தாருல் அர்கமில் கல்வியும் பயிற்சியும் அளிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து பகிரங்கப் பிரசாரத்தில் ஈடுபட்டபோது பல சவால்களை எதிர்கொண்டார்கள். அபூலஹப், அபூஜஹ்ல் முதலானோரின் தலைமையில் எதிர்ப்புக்கள் எழுந்தன. பைத்தியக்காரன், சூனியக்காரன், கவிஞன் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சாடினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பக்கம் சேர வேண்டாம் என மக்களை எச்சரித்தார்கள்.

ஆயினும், அல்லாஹ்வின் ஏற்பாட்டுக்கமைய இஸ்லாம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தது. எதிரிகள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நடக்கும் பாதையில் முட்களைப் பரப்பினர். கழுத்தை சீலையால் திருகினர். அழுகிய ஒட்டகக் குடலை மாலையாக இட்டனர். அடித்துக் காயப்படுத்தவும் செய்தனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்தொடர்ந்தவர்களையும் கொடுமைப்படுத்தினர். இவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டோர் அவர்களின் குடும்பத்தவர்களால் இம்சிக்கப்பட்டார்கள். இஸ்லாத்தை ஏற்ற அடிமைகள் கொடூரமாக வஞ்சிக்கப்பட்டனர். எனினும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவரது தோழர்களும் பொறுமையாக இருந்தனர்.

முஷ்ரிக்குகளின் தாக்குதல் நாளுக்குநாள் பெருகியபோது முஸ்லிம்கள் சிலர் ஹபஷாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நுபுவ்வத் ஐந்தில் 15 பேரும், நுபுவ்வத் ஏழில் 100 பேரும் இரண்டு கட்டங்களாக வெளியேறினர். அவர்களைத் துன்புறுத்துவதை முஷ்ரிக்குள் கைவிடவில்லை. அந்த முஸ்லிம்களை ஹபஷாவிலிருந்து திருப்பி யழைக்கப் பல உபாயங்களைக் கையாண்டனர். அவை தோல்வியிலேயே முடிவுற்றன. ஹபஷாவின் நேர்மையான ஆட்சியாளர் நஜ்ஜாஷி, முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு வழங்கினார். ஆயினும், மக்காவில் குறைஷியரின் அச்சுறுத்தல்கள் ஓயவில்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பாதுகாப்பதில், அவரது பெரிய தந்தை அபூதாலிப் அதிக பங்கெடுத்துக் கொண்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிரசாரத்தைத் தடைசெய்யுமாறு குறைஷிகள் விடுத்த கோரிக்கைகளை அவர் நிராகரித்தார். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை களைத் தூண்டி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் திசைத்திருப்ப முயன்றனர். இரு பகுதியரினதும் வழிபாட்டில் (தவ்ஹீதுக்கும் ஷிர்க்குக்கும்) இடையே சமரசம் காண முயன்றனர். இவை எதற்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அணுவளவேனும் உடன்படவில்லை.

குறைஷியர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிரசாரத்தைத் தடுக்கும் வகையில் பிறிதோர் உத்தியாக அவரது கோத்திரத்தவர்களை சமூக பகிஷ்கரிப்புக்கு உள்ளாக்கினர். இதற்கான அறிவிப்புப் பத்திரம் கஃபாவில் தொங்கவிடப்பட்டது. **ஷிஃபு அபீதாலிப்** என்ற பள்ளத்தாக்கில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தினர் மூன்று ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டனர். குழந்தைகள் பசி தாங்காது அலறினர். இதனை சகிக்க முடியாத மக்காவிலிருந்த நலன் விரும்பிகள், அங்கிருந்தவர்களுக்கு இரகசியமாக உதவிக் கொண்டிருந்தனர். அவ்வாறு உதவுவோர் கண்டுபிடிக்கப்பட்டபோது குறைஷிகளால் தண்டிக்கப்பட்டனர். இவ்வேளை, அவர்கள் மீது அனுதாபப்பட்ட வாலிபர்கள் சிலர், இதற்கு முடிவு கட்ட வேண்டுமெனத் தீர்மானித்தனர். கஃபாவில் தொங்க விடப்பட்டிருந்த பத்திரத்தைக் கிழித்தெறிய முன்வந்தனர். அதற்கு முன்னரே கறையான் பத்திரத்தை அரித்திருந்தது. இதனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஏனையோரும் விடுதலை பெற்றனர்.

விடுதலையான குறுகிய காலத்தில் மற்றுமோர் அதிர்ச்சி ஏற்பட்டது. அதுவரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்த அபூதாலிப் அவர்களும் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் மரணமடைந்தார்கள். இந்த ஆண்டு **ஆமுல் ஹுஸ்ன் (துக்க ஆண்டு)** எனப்பட்டது. இது குறைஷிகளுக்கு வாய்ப்பாக அமைந்தது. முன்னரிலும் கடுமையான சோதனைகளை முடுக்கி விட்டனர். இது அல்லலுற்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மக்காவிலிருந்து தாயிபுக்கு செல்வதற்கு வழிகோலியது. அங்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம்மை அல்லாஹ்வின் தூதரென அறிமுகம் செய்தார்கள். ஆனால் அம்மக்களோ, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏளனம் செய்தார்கள். கல்லெறிந்து துரத்தினார்கள். அவ்வேளையில் கூட, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த மக்களை நிந்திக்காமல் நேர்வழிக்காகப் பிரார்த்தனை செய்தார்கள். வேறு வழியின்றி மக்காவுக்கு மீண்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'முத்இம்' என்பவரின் அடைக்கலத்தில் வாழ்ந்தார்கள்.

இக்கால எல்லையிலேயே எதிர்பாராத முறையில் யத்ரிபிலிருந்து வந்த யாத்திரீகர் சிலரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அகபாவில் சந்தித்தார்கள். அவர்களிடம் தான் அல்லாஹ்வின் தூதர் என அறிமுகப்படுத்தினார்கள். அவர்கள், ஏற்கனவே யூதர்கள் மூலம் கடைசி நபி பற்றிய செய்தியைத் தெரிந்திருந்ததால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏற்றுக் கொண்டார்கள். யத்ரிபுக்கு மீண்ட அவர்கள் இந்த நற்செய்தியை அங்கு பரப்பினார்கள். அதன் பின் அடுத்த ஆண்டு 12 பேரும் அதனைத் தொடர்ந்த ஆண்டில் 72 பேரும் மக்கா வந்து இஸ்லாத்தை ஏற்றதோடு அகபா என்ற இடத்தில் உறுதி மொழியையும் வழங்கினார்கள். இங்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் மதீனா வாசிகளுக்கும் இடையே சில நிபந்தனைகளுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்தானது. இது **அகபா உடன்படிக்கை** எனப்படுகின்றது.

இதன்போது மதீனா வாசிகள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யத்ரிபுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்கள்.



இவ் அழைப்புக்கு ஏற்ப மக்கா முஸ்லிம்கள் சிலரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அங்கிருந்து யத்ரிபுக்கு அனுப்பி வைத்தார்கள். தொடர்ந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் செல்லத் தயாரானார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா செல்வது தமக்கு ஆபத்தாக அமையும் என உணர்ந்த குறைஷியர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொலை செய்யத் தீர்மானித்தார்கள். அல்லாஹ்வின் உதவியால் இவர்களின் இக்கொலை முயற்சி தோல்வியடைந்தது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களதும் தோழர்களதும் இப் பயணம் வெற்றிகரமாக நிறைவேறியது. இப்பயணமே ***'ஹிஜ்ரத்'*** எனப்படுகின்றது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் யத்ரிப் பிரவேசத்தோடு அந்நகர் ***'மதீனதுன் நபி' (நபியின் நகரம்)*** என பெயர் பெற்றது. குறைஷியரோ, மதீனா சென்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் முஸ்லிம்களையும் அங்கும் நிம்மதியாக வாழ்வதற்கு இடம் கொடுக்கவில்லை. மதீனாவில் வாழ்ந்த யூதர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டார்கள். மதீனாவிலிருந்து யாத்திரை வந்தவர்களை எச்சரித்தார்கள். மதீனாவின் எல்லைப் பகுதியில் தாக்குதல் நடத்தினார்கள். இறுதியில் முஸ்லிம்கள் எந்தத் தயார் நிலையிலும் இல்லாதபோது அவர்களைத் தாக்குவதற்குப் படையெடுத்து வந்தார்கள். இதன்போது நேருக்குநேர் போர் தொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

முஸ்லிம்களுக்கும் முஷ்ரிக்குகளுக்கும் பத்ர், உஹுத், அஹ்ஸாப் எனப் பல போர்கள் இடம்பெற்றன. அவற்றில் முஷ்ரிகீன்கள் தோல்வியையே சந்தித்தனர். இதனால் முஸ்லிம்களின் பலம் அதிகரித்தது. ஹிஜ்ரி 6 இல் இரு தரப்புக்குமிடையில் ஹுதைபியா என்ற இடத்தில் சமாதான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

மக்காவிலுள்ள குறைஷியர் இரண்டு ஆண்டுகளில் உடன்படிக்கையை முறித்துக் கொண்டனர். அதன் விளைவாக முஸ்லிம்களால் மக்கா வெற்றி கொள்ளப்பட்டு அங்கு இஸ்லாம் உறுதியடைந்தது.

இக்காலப்பகுதியில் இஸ்லாத்தின் தூதை உலகெங்கும் கொண்டு செல்லும் பணியும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாலேயே ஆரம்பித்து வைக்கப் பட்டது. அரபு நாட்டுக்கு வெளியே இஸ்லாம் பரவவும் வழி ஏற்பட்டது.

இந்த வகையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கா, மதீனா இரண்டு பகுதிகளிலும் பல சவால்களை எதிர்கொண்டு அவற்றை அல்லாஹ்வின் உதவி, பொறுமை, பொருத்தமான அணுகுமுறை என்பவற்றால் வெற்றி கொண்டு அல்லாஹ்வின் தூதை எத்தி வைப்பதில் வெற்றியடைந்தார்கள்.

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

الصَّفَا حَنِيْفٌ قُرَيْشٌ عَامُ الحُزْنِ بَيْعَةُ الْعَقَبَةِ شِعْبُ أَبِيْ طَالِب الحَبَشَةُ النَّجَاشِي

الأَحْزَابُ الْحُدَيْبِيَّة يَثْرِبُ شِرْكٌ تَوْحِيْدٌ

**பயிற்சி**

1. முஸ்லிம்கள் ஹிஜ்ரத் சென்ற இடங்கள் எவை?
2. முஸ்லிம்களுக்கும் குறைஷியருக்குமிடையே நிகழ்ந்த போர்கள் மூன்றைக் குறிப்பிடுக.
3. இரகசிய பிரசாரத்தின்போது எத்தகையோர் இஸ்லாத்தை ஏற்றனர்?
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தஃவா செய்யத் தூண்டிய அல் குர்ஆன் வசனம் எது?
5. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தூதை குறைஷியர் எதிர்க்கக் காரணம் என்ன?
6. பகிரங்க பிரசாரத்தைத் தடுப்பதற்காக குறைஷியர் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்?
7. ஆமுல் ஹுஸ்ன் என்றால் என்ன? அது ஏன் அவ்வாறு அழைக்கப் படுகின்றது?
8. பின்வருவன பற்றி விளக்கம் தருக:
   - ★ ஷிஃபு அபூதாலிப்
   - ★ பைஅதுல் அகபா
   - ★ ஹிஜ்ரத்
   - ★ மதீனதுன் நபி




# உம்மஹாத்துல் முஃமினீன்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படியும் அனுமதியின் பிரகாரமும் பல்வேறு காரணங்களுக்காகப் பல பெண்களை மணமுடித்தார்கள். அவ்வாறு மணமுடித்த மனைவியரே **உம்மஹாதுல் முஃமினீன்** எனப்படுவர். **முஃமின்களின் அன்னையர்** என்பது இதன் பொருளாகும். அவர்களில் சிலரைத் தெரிந்து கொள்வோம்.

## அன்னை ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா

முதல் மனைவி, அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மரணித்தபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிகுந்த கவலையடைந்தார்கள். சொந்த வாழ்விலும் சமய, சமூக வாழ்விலும் தனக்குப் பக்கபலமாக இருந்த அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் இழப்பு, அவர்களது உள்ளத்தை வாட்டியது. கூடவே நான்கு பெண் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பும் இருந்தது.

இவ்வேளை, கவ்லா பின்த் ஹாக்கிம் என்ற பெண்மணி ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணமுடிப்பதற்காகத் தரகராக செயற்பட்டார். ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் குறைஷிக் குல நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஸக்ரான் பின் அம்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஏற்கனவே மணமுடித்திருந்தார். இவ்விருவரும் அபீஸீனிய ஹிஜ்ரத்தில் ஒன்றாக பங்குபற்றியிருந்தனர்.

ஒரு முறை ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தனது மடியில் நிலவு வந்து உறங்குவதாகக் கனவு கண்டார்கள். அதனைக் கணவனிடம் தெரிவித்தபோது, ‘‘எனது

மரணம் நெருங்கி விட்டது. எனக்குப் பின் நீங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மணமுடித்துக் கொள்ளுங்கள்'' என ஆசீர்வதித்தார்கள். கணவனை இழந்த ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கவலையுடனிருந்த போதுதான் கவ்லா உடனான தொடர்பு ஏற்பட்டது. அவரின் முயற்சியால் தந்தையின் அனுமதியோடு 400 திர்ஹம் மஹர் பெற்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மறுமணம் செய்தார்கள். பின்னர் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டிலேயே குடியிருந்தார்கள்.

மதீனா ஹிஜ்ரத்தின் பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவி மக்களும் மதீனாவுக்கு அழைத்து வரப்பட்டார்கள்.

ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தோற்றத்தில் உயரமானவர். தயாள குணமுள்ளவர். நகைச்சுவையாகப் பேசுபவர். பண்பாகப் பழகுபவர். வணக்க வழிபாடுகளில் தீவிர ஈடுபாடு கொண்டவர். வயதில் கூடியவராக இருந்தாலும் இளம் வயதான ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடமும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெண் மக்களுடனும் அன்பாகப் பழகி வந்தார்கள்.

80 வயதுவரை வாழ்ந்த அவர்கள் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் வபாத்தானார்கள்.

## அன்னை ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா

ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், மதீனாவில் வாழ்ந்த யூதர்களின் பனூ குரைழா கோத்திரத்தைச் சேர்ந்தவர். பனூ குரைழாக்களின் தலைவரான ஹுயை என்பவரின் மகளே ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா ஆவார்.

அவர் முதலில் கனானா பின் அபீ அல்ஹக்கு என்பவரை மணமுடித்திருந்தார். கைபர் போரில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றபோது கணவரை இழந்த நிலையில் ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா கைதியாகப் பிடிக்கப்பட்டார். அப்போது அங்கு வந்த ஒருவர் ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கே பொருத்தமானவர் என்று கூறினார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அம்மையாரிடம் இஸ்லாத்தை எத்தி வைத்தார்கள். அவர் இஸ்லாத்தை ஏற்ற பின் ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை ஹிஜ்ரி 7இல் மணமுடித்தார்கள். அப்போது ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வயது 17 ஆகும்.

ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவிமார்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது. அவ்வேளை ஸபிய்யா யூதப் பெண் என்பதால் பரிகசிக்கப்பட்டார். ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா போன்றோர் குறைஷிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாதலால் அவர்கள் தம்மை உயர்வாகக் கருதினர். இது பற்றி ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் முறையிட்டபோது, ''ஹாரூன் எனது தந்தை என்றும் தந்தையின்



சகோதரன் மூஸா எனவும் தனது கணவன் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எனவும் இவர்கள் அனைவரும் நபிமார்கள் எனவும் நீங்கள் பதிலளித்திருக்கக் கூடாதா?'' எனக் கூறி ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் தேற்றினார்கள். அத்துடன்,

''குறைஷ் குலத்தவரே! குலப் பெருமை பேசும் உங்கள் ஜாஹிலிய்யாப் பழக்கத்தை இறைவன் ஒழித்து விட்டான். யாவரும் ஆதமின் மக்கள். அவரோ மண்ணால் படைக்கப் பட்டவர்.'' என தமது மனைவியருக்கு உபதேசம் செய்தார்கள்.

ஸபிய்யா இஸ்லாத்தை ஏற்றுள்ளார். அவரது இஸ்லாம் அழகானது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாராட்டியுள்ளார்கள். அவரைக் கைதி நிலையிலிருந்து விடுதலை செய்தமையே அவருக்களித்த மஹராகும். இது ஏனைய அன்னையரை விட சிறப்பான அம்சமாகும். சிறந்த நுண்ணறிவும் நேர்மையான பண்புகளும் மொழி, இலக்கிய தேர்ச்சியும் அவரிடம் காணப்பட்டன. இவர் ஹிஜ்ரி 50 ஆம் ஆண்டு 60 ஆவது வயதில் வபாத்தானார்கள்.

## அன்னை ஜுவைரியா ரழியல்லாஹு அன்ஹா

இவர் பனூ முஸ்தலக் கோத்திரத் தலைவரின் மகளாவார். பனூ முஸ்தலிக் உடனான போரில் தாபித் பின் கைஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் கைதியாகப் பிடிக்கப்பட்டார். அவரை விடுவிக்க 9 மிஸ்கால் தங்கம் நட்டஈடு கோரினார். தன்னால் நஷ்டயீட்டைச் செலுத்த முடியாத நிலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சந்தித்தார். ''நான் ஒரு குலத் தலைவரின் மகள். எனது மணிமுடி குப்புற விழுந்து மணலில் புதையுண்டு விட்டது. தாபித் பின் கைஸிடமிருந்து விடுதலைக்காக தங்கத்தைக் கொடுத்திருக்க வேண்டும். நான் அந்தத் தங்கத்தை எங்கிருந்து பெற முடியும்? நான் எவ்வாறு அடிமையாக வாழ முடியும்?'' எனக் கேட்டார்.

அவ்வேளை, அவரது வாதத்தையும் பரிதாப நிலையையும் அவதானித்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''உங்களது மீட்புத் தொகையை நான் செலுத்தி விட்டால், நீங்கள் சுதந்திரப் பெண்ணாகவும், எனது குடும்பத்தில் ஒருவராகவும் மாற சம்மதிப்பீர்களா?'' எனக் கேட்டார்கள். இதனை மகிழ்வோடு ஏற்ற அவர் அடிமை

நிலையிலிருந்து விடுதலையானதோடு ஹிஜ்ரி 5 அல்லது 6 இல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவியாக உயர்வடைந்தார். அவரது கோத்திரத்தைச் சேர்ந்த 100 கைதிகளும் விடுவிக்கப்பட்டார்கள். இதைப் பார்த்து அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், ''ஜுவைரியா தன் கோத்திரத்துக்கு பரக்கத் ஏற்படுத்தியதைப் போன்று வேறெந்தப் பெண்ணும் தன் கோத்திரத்துக்கு பரக்கத் ஏற்படுத்தியதை நான் பார்க்கவில்லை'' எனப் பாராட்டினார்கள்.

தந்தை அவரை விடுவித்துச் செல்ல வந்தபோது, ஜுவைரியாவின் கருத்தைக் கேட்கவே அவர்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடனே வாழ விரும்புவதாகக் குறிப்பிட்டார். பர்ரா என்றிருந்த அவரது பெயரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே ஜுவைரியா என மாற்றினார்கள். அழகிய தோற்றமும் இனிமையான சொல்லாடலும், நுணுக்கமான அறிவும், நேர்மையும், மொழித் தேர்ச்சியும் அவரிடம் காணப்பட்டன. இவர் ஹிஜ்ரி 50 ஆம் ஆண்டு 65 ஆவது வயதில் வபாத்தானார்கள்.

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

بَنُو قُرَيْضَة    قُرَيْشٌ    مِثْقَالٌ

## பயிற்சி

**சுருக்கமான விடை தருக.**

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இரண்டாம் மனைவியாக அமைந்தவர் யார்? அவரது முதற் கணவரின் பெயர் என்ன?
2. ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் பண்புகளையும் ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் பண்புகளையும் ஒப்பிட்டுக் காட்டுக.
3. ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு ஏற்பட்ட கவலையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவ்வாறு தேற்றினார்கள்?
4. ஸபிய்யா, ஜுவைரியா ரழியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மணமுடித்ததற்கான காரணங்களை ஒப்பிட்டு எழுதுக.




# ஸஹாபாக்கள்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேரடியாகக் கண்டு அவர்களை ஏற்றுப் பின்பற்றியோர் ஸஹாபாக்கள் எனப்படுகின்றனர். அவர்களுள் அப்துல்லாஹ் என்ற பெயருடைய பலர் இருந்தனர். அவர்களில் நால்வருடைய வரலாற்றை இங்கு சுருக்கமாக நோக்குவோம்.

## 1. அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு

ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தோழர் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் பாலைவனத்தில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கடுமையான தாகம் ஏற்பட்டது. அவ்வேளை உக்பா பின் முஈத் என்பவரின் ஆட்டு மந்தையை ஒரு சிறுவன் மேய்த்துக் கொண்டிருந்தான். அச் சிறுவனை அணுகிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''சிறிது பால் தந்து எனது தாகத்தைத் தீர்ப்பீரா?'' என்று கேட்டார்கள். அதற்கு அச் சிறுவன் ''இவை என்னுடையவை அல்ல. எனது எஜமானுடையவை. எனக்கு அமானிதமாகக் கொடுக்கப்பட்டுள்ளவை. அவரது அனுமதியின்றி தர முடியாது'' என்றான். அச்சிறுவனின் அமானிதம் பேணும் தன்மையைப் பாராட்டிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''ஒரு கன்னியாட்டில் பால் கறக்க அனுமதிப்பீர்களா?'' எனக் கேட்டார்கள். ''கன்னியாடு பால் சுரக்காது. முடியுமானால் கறந்து கொள்ளுங்கள்'' என்றான் சிறுவன். அந்த ஆட்டின் மடுவைத் தனது கரத்தால் தடவிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏதோ ஒன்றை உச்சரித்து மடுவைக் கழுவி பால் கறந்தார்கள்.

அத்துடன் பாலைக் குடித்து தாகம் தீர்த்துக் கொண்டார்கள். பின்னர், முன்போல் ஆகிவிடு என்றார்கள். ஆச்சரியமுற்ற சிறுவன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்கள் மொழிந்த அந்த வார்த்தையைத் தனக்கும் கற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''நீர் கற்பது மாத்திரமல்ல. உலகத்தாருக்கும் அதனை கற்றுக்கொடுப்பீர்'' (முஸ்னத் அஹ்மத்) என வாழ்த்தினார்கள். பின்னர் அச்சிறுவன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதோடு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நெருங்கிய தோழராகவும் மாறினான். அச்சிறுவனே அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களாவார்.

சிறு வயதில் தந்தையை இழந்த அவர் உக்பா பின் முஈத் என்பவரின் இடையனாகப் பணியாற்றினார். இவரிடம் எளிமை, கடும் உழைப்பு, அமானிதம் பேணல் போன்ற சிறந்த பண்புகள் காணப்பட்டன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு அன்னியோன்னியமாக நெருங்கிப் பழகினார்கள். அவரைப் பலரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்ப உறுப்பினராகவே கருதி வந்தார்கள்.

## 2. அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு

அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் ஸைனப் பின்த் மழ்ஊன் அவர்களுக்கும் நுபுவ்வத் இரண்டாம் ஆண்டு மக்காவில் பிறந்தார். நுபுவ்வத் ஆறில் தந்தையுடன் இவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். பத்தாவது வயதில் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸ்களை அதிகமாக ரிவாயத் செய்த ஆண்களில் இரண்டாமவர் ஆவார். இவர் மூலம் சுமார் 2630 ஹதீஸ்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கையைப் பின்பற்றுவதில் பேணுதலாக இருந்தார்.

கலீபாவின் மகனாகவும் கிலாபத்தை நிருவகிப்பதற்கு தகுதியுடைய வராகவுமிருந்த இவர்கள், கிலாபத்தை ஏற்குமாறு சிலர் கூறியபோது ''நான் இப்னு உமராகவே மரணிக்க விரும்புகின்றேன்'' என்றார்கள். உலக விடயங்களிலிருந்து ஒதுங்கி வாழ விரும்பினார்கள். ஒருமுறை கஃபாவின் றுக்னுல் யமானியைப் பிடித்துக் கொண்டு நான்கு இளவல்கள் ஒவ்வொரு கோரிக்கைளை முன்வைத்து முறையிட்டபோது, இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ''உன் கருணையை முன்வைத்துக் கேட்கின்றேன். யா அல்லாஹ் மறுமையில் சுவனப் பெருவாழ்வை விட்டு என்னை நிராதரவடையச் செய்துவிடாதே'' என்று பிரார்த்தித்தார்கள்.

இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நேரில் கற்றுக் கொண்டது மட்டுமன்றி, தந்தை மூலமாகவும், சகோதரி ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா மூலமாகவும் அல் குர்ஆன், ஹதீஸ் விளக்கங்களைக் கற்றுக் கொண்டார்கள். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் அதிக ஆர்வம் காட்டிய இவர் தனது சிரேஷ்ட மாணவராக நாபிஉ என்பவரை அமர்த்தி தாம் கற்றவற்றை அவருக்குக் கற்றுக் கொடுத்தார்கள். இரவு வணக்கத்திலும், நீண்ட நேர திலாவத்திலும் ஈடுபட்ட இவர்கள் தன்னடக்கமும், தயாள குணமும் உடையவராகக் காணப்பட்டார்கள். விருந்தோம்பலில் விருப்பம் கொண்ட இவர், சுமார் ஆயிரம் அடிமைகளை விடுதலை செய்துள்ளார்கள். இப்னு உமர் நல்லொழுக்கமுடையவர் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாலேயே பாராட்டப்பட்டுள்ளார்கள்.

## 3. அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு

இவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெரிய தந்தை அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் உம்முல் பழ்ல் என்பவருக்கும் மகனாக நுபுவ்வத் 3 இல் மக்காவில் பிறந்தார். இவர் பிறந்தபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கொண்டு செல்லப்பட்டார். அப்துல்லாஹ் என்று பெயரிட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கலீபாக்களின் தந்தை என வாழ்த்துக் கூறி அனுப்பி வைத்தார்கள்.

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சிற்றன்னை மைமூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மணமுடித்திருந்தார்கள். பதினொன்று அல்லது பன்னிரண்டாவது வயதில் மதீனாவுக்கு ஹிஜ்ரத் வந்த இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அடிக்கடி சந்திக்கலானார்கள். இதனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பணிவிடை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. கூடவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நேசத்துக்கும் பாராட்டுக்கும் ஆளானார். அன்னாரின் அறிவு மேம்பாட்டுக்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரார்த்தித்துமுள்ளார்கள். இதனால் பிற்காலத்தில் **பஹ்ருல் உலூம், ஸய்யிதுல் முபஸ்ஸரீன்** என்ற பட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள். 1660 ஹதீஸ்களை ரிவாயத் செய்த இவர், தப்ஸீர் கலையில் உயர்ந்து விளங்கினார்கள்.

அரசியல் துறையைப் பொறுத்தவரை அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் கலீபாவின் ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார்கள். இப்னு சுபைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மக்காவில் கலீபாவாக இருந்தபோது அங்கேயே தாயிபில் குடியேறி தனது 71 ஆவது வயதில் வபாத்தானார்கள்.

## 4. அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு

இவர் ஸுபைர் இப்னுல் அவ்வாம் - அஸ்மா பின்த் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகியோரின் மகனாக மதீனாவில் பிறந்தார். முஸ்லிம்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்ற முதல் இருபது மாதங்களில் முஹாஜிரீன்கள் எவருக்கும் குழந்தைகள் கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைக்காமல் இருப்பதற்காக யூதர்கள் சூனியம் செய்தார்கள் என்ற செய்தியும் பரவிக் கொண்டிருந்தது. இவ்வேளையிலேயே அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவில் முஹாஜிரீன்களின் முதல் குழந்தையாக பிறந்தார்கள்.

இவர் சிறுவயதிலேயே அசாதாரண துணிச்சல் மிக்கவராகக் காணப்பட்டார். ஹிஜ்ரி 5 இல் இடம்பெற்ற அஹ்ஸாப் போரில் தந்தை ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கலந்து கொண்டபோது, அம்ர் பின் அபீ ஸலாமா என்பாரின் முதுகில் ஏறி தந்தையின் வீரதீரச் செயல்களை அவதானித்தார். யுத்தம் முடிவுற்ற பின் தந்தையிடம் சென்று, ''தந்தையே இன்று தாங்கள் போராடிய முறையை நான் பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்று பெருமையாகச் சொல்லிக் காட்டினார்கள். கஃபாவில் றுக்னுல் யமானியைப் பிடித்து அல்லாஹ்விடம் முறையிட்ட நால்வரில் இவரும்

ஒருவராவார். ஹிஜாஸின் ஆட்சி எங்களுக்குக் கிடைத்து எனது கிலாபத்தை மக்கள் ஏற்கும் வரை என்னை மரணிக்கச் செய்துவிடாதே என்று அவ்வப்போது பிரார்த்தித்தார்.

அல்லாஹ், இப்னு ஸுபைரின் பிரார்த்தனையை ஏற்று அவரை ஹிஜாஸின் கலீபாவாக அமரச் செய்தான். மக்காவில் சுமார் ஒன்பது ஆண்டுகள் ஆட்சி நடத்தினார். பின்னர், கலீபா அப்துல் மலிக்கின் தளபதி ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபின் தாக்குதலால் படுகொலை செய்யப்பட்டார்.

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

الأَحْزَابُ    رُكْنُ الْيَمان    صَحابَة    بَيْعَةٌ    الْعَبادِلَةُ

### பயிற்சி

**(அ) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.**

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ........................ அவர்களை ஓர் இடையனாகக் கண்டார்கள்.
2. இப்னு ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தந்தை .......... ஆவார்.
3. இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தாயார் ............ ஆவார்.
4. இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ............................. துறையில் புகழ்பெற்றார்.
5. இப்னு ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ......................... விரும்பினார்.
6. ஹிஜ்ரத்துக்குப் பின்னர் முஹாஜிரீன்களுக்குக் கிடைத்த முதல் குழந்தை ............................. ஆவார்.

**(ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் காணப்பட்ட சிறந்த பண்புகள் எவை?
2. இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்புக்கள் நான்கைக் குறிப்பிடுக.
3. இப்னு ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் துணிகரச் செயல்கள் இரண்டைக் குறிப்பிடுக.
4. இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பணிகள் மூன்றைக் குறிப்பிடுக.



# 27

# இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம்

உலகில் தோன்றிய நபிமார்களுள் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முக்கியமான ஒருவராவார். அவரது பரம்பரையில் இஸ்மாயில் அலைஹிஸ்லாம், இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், யஃகூப் அலைஹிஸ்ஸலாம், யூஸுப் அலைஹிஸ்ஸலாம் ஆகியோர் நபிமார்களாக இருந்துள்ளார்கள். இதனால் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் **அபுல் அன்பியா - நபிமார்களின் தந்தை** என அழைக்கப்படுகின்றார்.

இவர்கள் கி.மு. இருபத்தோராம் நூற்றாண்டில் ஈராக்கின் அப்போதைய தலைநகராக இருந்த உர் எனும் ஊரில் ஆஸர் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். ஆஸர் சிலை வடிப்பவராகவும் சிலை வணக்கத்தில் ஈடுபடுபவராகவும் காணப்பட்டார்.

இளமையிலேயே கூரிய புத்தியுடைய இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தந்தையினதும் பொது மக்களதும் வழிபாட்டுமுறை தவறானது என்பதை எடுத்துக் காட்டினார். அதனை அவரது தந்தையோ, ஆட்சியாளரோ, பொது மக்களோ ஏற்றுக் கொள்ளவில்லை. தமது வழிபாட்டு முறையைக் கண்டித்தமைக்காகத் தீக்குண்டத்தை ஏற்பாடு செய்து இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அதில் எறிந்து கொலை செய்யத் தீர்மானித்தனர். எனினும், அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அந்தத் தீக்குண்டமோ சாந்தியளிக்கும் குளிராக மாறி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது உயிரையும் உடலையும் காத்தது.

அதிலிருந்து பாதுகாக்கப்பட்ட அவர்கள் மனைவி ஸாராவுடன் ஈராக்கிலிருந்து எகிப்துக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். இந்த ஹிஜ்ரத்தின் போதே இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமக்குச் சந்ததியொன்றை அருள்பாலிக்குமாறு பிரார்த்தனை செய்தார்கள்.

எகிப்துக்குச் சென்ற இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹாஜர் என்ற பெண்ணை அங்கு மணமுடித்தார்கள். எனினும், முதுமை வரை அவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. எதிர்பாராத நிலையில் ஹாஜருக்கு இஸ்மாயீல் என்ற குழந்தையும் ஸாராவுக்கு இஸ்ஹாக் என்ற குழந்தையும் கிடைத்தது. அவர்கள் எகிப்தில் இருந்தபோது மக்காவுக்குச் செல்லுமாறும் அங்கு ஹாஜரையும் குழந்தை இஸ்மாயீலையும் விட்டுச் செல்லுமாறும் அல்லாஹ் கட்டளை பிறப்பித்தான். இதற்கமைய எகிப்திலிருந்து வெளியேறி மக்கள் குடியிருக்காத அந்தப் பாலை நிலத்தில் (மக்காவில்) தாயையும் குழந்தையையும் விட்டுவிட்டு அவர்கள் இருவரின் நலனுக்காகவும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தவராக வெளியேறினார்கள்.

மக்காவில் குழந்தையுடன், தனியே விடப்பட்ட ஹாஜர் தாம் கொண்டு சென்ற உணவும் நீரும் தீர்ந்த பின்னர், குழந்தை பசியால் அழவே நீர் தேடி அலைந்தார்கள். இதன்போது ஸபா மலைக் குன்றிலிருந்து மர்வாவுக்கும், மர்வாவிலிருந்து ஸபாவுக்கும் மாறி மாறிச் சென்றபோதும் அங்கு மனிதர்களையோ நீரையோ காணவில்லை. அவ்வேளை, ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அங்கு தோன்றி, குழந்தையின் காலடியில் ஸம் ஸம் நீரூற்றை ஏற்படுத்தினார்கள். குழந்தையைப் பார்க்க வந்த ஹாஜர் நீரூற்றைக் கண்டு மகிழ்வடைந்தார். ஊற்றைச் சுற்றி அணை அமைத்தார். நீரைக் கையால் அள்ளி அள்ளித் தானும் குடித்து குழந்தைக்கும் அதனைப் பருக்கினார். மக்காவில் வணிகப் பயணத்தை மேற்கொண்டிருந்த ஜுர்ஹூம் கோத்திரத்தார் நீர் தேடி அலைந்தனர். பறவைகள் வட்டமிடுவதைக் குறியாகக் கண்டு ஸம் ஸம் பக்கம் நெருங்கினர். நீரூற்றைக் கண்டபோது, நீர்பெற அனுமதி கோரினர். ஹாஜர் அனுமதித்தார். இதனால் அங்கு குடியிருப்பொன்று உதயமானது. இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இக்கோத்திரத்தினர் அரபு மொழியைக் கற்றுக் கொண்டனர்.

இவ்வாறு வாழும் கட்டத்தில்தான், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது மகனைக் குர்பானி செய்யக் கனவு கண்டார்கள். மக்காவுக்கு வந்து மகனை மினாவின் பக்கம் அழைத்துச் சென்று தாம் கண்ட கனவைக் கூறி மகனின் விருப்பத்தைக் கேட்டார்கள். ''உங்களுக்கிடப்பட்ட கட்டளைப் படியே நீங்கள் செய்யுங்கள் தந்தையே'' என்று மகன் இஸ்மாயீல் கூறினார்கள். மகனை குர்பான் செய்ய முன்வந்தார்கள். அல்லாஹ் அதனை விரும்பவில்லை. அவர்கள் காப்பாற்றப் பட்டார்கள். இதனால்தான் தந்தையை **கலீலுல்லாஹ்** என்றும், மகனை **ஸபீஹுல்லாஹ்** என்றும் வழங்குகின்றோம்.



மகாமு இப்றாஹீம்

இதற்குச் சில ஆண்டுகளுக்குப் பின்னால் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மகனுடன் சேர்ந்து கஃபதுல்லாவைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டார்கள். கஃபாவின் சுவர்கள் மேலெழுந்த போது, ஒரு கல்லில் ஏறி நின்று அதனைப் பூரணப்படுத்தினார்கள். அந்தக் கல்லில் இப்ராஹீம்

அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இரு பாதச் சுவடுகளும் பதிந்திருந்தன. அது **மகாமு இப்ராஹீம்** என அழைக்கப்படுகின்றது. இதன் பின்னர் மக்களை ஹஜ்ஜுக்கு அழைக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டான். ஹஜ் கடமையில் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் குடும்பம் செய்த தியாகம் நினைவூட்டப்படுகின்றது.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிரார்த்தனைக்கேற்ப மக்கா ஒரு யாத்திரைத் தலமாக மாறியுள்ளது. ஸம் ஸம் நீர் ஒரு வளமாக அமைந்துள்ளது. அங்கு ஹஜ் கடமை இடம்பெறுகின்றது. மக்கள் குடியேறினார்கள். அவரது சந்ததியிலேயே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் பிறந்திருக்கிறார்கள்.

***‘‘இப்ராஹீமிடத்திலும், அவர்களுடனிருந்தவர்களிடத்திலும் அழகிய முன்மாதிரி இருக்கின்றது’’ (60: 4)***

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் வெகுவாகப் பாராட்டியுள்ளான். ஆதலால் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் முன்மாதிரிகளை எம் வாழ்விலும் பின்பற்றி ஒழுகுவோம்.

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

أَبُو الأَنْبِيَاء    زَمْ زَمْ    أَبٌ رَحِيْمٌ    جُرْهُم

பயிற்சி

**அ. சுருக்கமான விடை தருக.**

1. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சிறப்புப் பெயரைக் குறிப்பிடுக.
2. அவர் எந்த நாட்டில், எந்த ஊரில் பிறந்தார்?
3. அவரது தந்தையின் பெயரையும் தொழிலையும் குறிப்பிடுக.
4. அவரது காலத்தில் இடம்பெற்ற வழிபாட்டு முறை யாது?
5. அவர் வாழ்ந்த மூன்று நாடுகளைக் குறிப்பிடுக.
6. அவரது மனைவி, மக்களின் பெயர்களைத் தருக.
7. மகாமு இப்ராஹீம் அப்பெயர் கொண்டு அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

**ஆ. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபிமார்களின் தந்தை எனப்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
2. ‘ஸம் ஸம்’ ஊற்று தோன்றிய முறையைச் சுருக்கமாக எழுதுக.
3. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய குடும்பத்துடன் தொடர்புடைய ஹஜ் செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துக.
4. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் காணப்பட்ட உயர் பண்புகளை எடுத்துக்காட்டுக.




# அஜ்னபி – மஹ்ரமி வரையறைகள்

அல்லாஹ் பிற உயிரினங்களை ஆண் - பெண் என சோடி சோடியாகப் படைத்துள்ளது போல் மனித இனத்தையும் படைத்துள்ளான். முதல் மனிதனாக ஆணைப் படைத்த அவன் அவருக்குத் துணையாக ஒரு பெண்ணைப் படைத்தான். அதிலிருந்தே மனித இனத்தில் இவ்விரு பாலாரும் தோற்றம் பெற்றனர். மனிதர்கள் மத்தியில் ஆண் -பெண் தொடர்பாடல் நாகரிகமானதாக இருக்கவேண்டும் என்பது இஸ்லாத்தின் கொள்கை யாகும். ஏனெனில், இவ்விருபாலாருக்குமிடையிலான எதிர்ப்பாற் கவர்ச்சியானது மனிதனின் உணர்வுகளிலும் ஒழுக்கப் பண்புகளிலும் சமூகக் கட்டுக்கோப்பிலும் பெரும் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாகும். ஆகவேதான், அதற்கான ஒழுங்குகளை இஸ்லாம் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளது.

ஆரோக்கியமான சமூகம் ஒன்றில் ஆண்-பெண் உறவுகள் சீரானதாக அமைந்திருக்கும். அங்கு பெண்களுக்கான கௌரவமும் பாதுகாப்பும் சிறப்பாகக் காணப்படும். கணவன்-மனைவி, தாய் - பிள்ளை, சகோதரன் - சகோதரி போன்ற உறவுகள் தெளிவான வரையறைகளுக்குள் பேணப்படும். **மஹ்ரமீ** எனும் அரபுப் பதம் திருமண உறவுகள் வைத்துக்கொள்ளத் தடைசெய்யப்பட்டவர்களையும், **அஜ்னபீ** என்ற பதம் திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டவர்களையும் குறிக்கும். இவ்விரு நிலைகளும் முந்திய சமூகங்கள் மத்தியிலும் முஸ்லிமல்லாத ஏனைய சமூகங்கள் மத்தியிலும் கூட காணப்படுகின்றன. ஆயினும், இஸ்லாத்தில் அதன் வகைகளும் வரையறைகளும் விரிவாகவும் ஆழமாகவும் விளக்கப்பட்டுள்ளன.

இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு விபரிக்கின்றது: **''உங்கள் தாய்மார்கள், உங்கள் பெண் பிள்ளைகள், உங்கள் சகோதரிகள், உங்கள் தாயின் சகோதரிகள், தந்தையின் சகோதரிகள், சகோதரனின் பெண்பிள்ளைகள், சகோதரியின் பெண் பிள்ளைகள், உங்களுக்குப் பாலூட்டிய தாய்மார், பால்குடி சகோதரிகள், உங்கள்**

***மனைவிமாரின் தாய்மார், உங்கள் பராமரிப்பிலுள்ள உங்கள் மனைவிமாரின் பிள்ளைகள், உங்கள் மகன்மாரின் மனைவிகள், ஒரே நேரத்தில் இரு சகோதரிகளைத் திருமணம் செய்வது உங்கள் மீது ஹறாமாக்கப் (தடைசெய்ய) பட்டுள்ளது''. (4:23)***

மேற்கூறப்பட்டுள்ள அல் குர்ஆன் வசனத்திதையும் அதனோடு தொடர்புடைய ஏனைய வசனங்கள் ஹதீஸ்களையும் அடிப்படையாகக் கொண்டு அஜ்னபீ - மஹ்ரமீ உறவுகளை பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்:

| மஹ்ரம் வகைகள் | உறவு முறை | மஹ்ரமிய்ய காலம் |
|---|---|---|
| குடும்ப உறவு | ✸ தாய், பாட்டி<br>✸ மகள், அவரது மகள்<br>✸ சகோதரி (உடன்பிறப்பு, தாய்வழி, தந்தைவழி)<br>✸ தந்தையின் தாயின் சகோதரிகள் | நிரந்தரமானது |
| திருமண உறவு | ✸ மனைவியின் தாய், பாட்டி.<br>✸ மனைவியின் மகள், மகளின் மகள்...<br>✸ தந்தையின் மனைவி, பாட்டனின் மனைவி<br>✸ மகனின் மனைவி, பேரனின் மனைவி | நிரந்தரமானது |
| | ✸ மனைவியின் சகோதரி<br>✸ மனைவியின் தாயின், தந்தையின் சகோதரிகள் | தற்காலிகமானது |
| பால்குடி உறவு | ✸ பால் கொடுத்த தாய், தாயின் தாய்..<br>✸ பால்குடி உறவிலான மகள், மகளின் புதல்வி<br>✸ பால்குடி உறவுகளான சகோதரி (உடன் பிறப்பு, தாய்வழி, தந்தை வழி)<br>✸ பால்குடி உறவு தாயின் சகோதரி, தந்தையின் சகோதரி<br>✸ பால்குடி உறவு சகோதரனின் புதல்வி, சகோதரியின் புதல்வி | நிரந்தரமானது |

ஷரீஆவினால் வரையறுக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட வகையினருள் சிலரை மணமுடிப்பது நிரந்தரமாகவும் வேறு சிலரைத் திருமணம் செய்வது தற்காலிகமாகவும் தடை செய்யப்பட்டுள்ளது. தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டோருக்கான மரணம், விவாகரத்து போன்ற காரணங்கள் ஏற்பட்டால் தடையும் நீங்கி விடும்.

மேற்கூறப்பட்ட உறவுமுறைகள் ஆணுக்கு தடைசெய்யப்பட்டுள்ளது போன்று அதற்குச் சமாந்தரமான ஆண் தரப்பு உறவுகள் பெண்ணுக்கும் தடை செய்யப் பட்டதாகும். அதனடிப்படையில், நிரந்தரமாகத் தடைசெய்யப்பட்டோர் தவிர்ந்த ஏனையோர் மத்தியில் பெண் தனது அழகை வெளிப்படுத்துவதோ அவர்களுடன் தனியாக பயணங்களை மேற்கொள்வதோ தடைசெய்யப்பட்டதாகும்.

**எனவே, வரையறைகளைப் பேணி நடந்து ஒழுக்கமான சமூக மொன்றினைக் கட்டியெழுப்ப நாம் முயற்சிப்போமாக.**

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

أَجْنَبِيْ     مَحْرَمِيْ     حَرَامٌ

**பயிற்சி**

**சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக:**

1. அஜ்னபி என்பது திருமணம் செய்யத் தடைசெய்யப்பட்டோரைக் குறிக்கும். ( )
2. தாயின் சகோதரியைத் திருமணம் செய்வது இஸ்லாத்தில் நிரந்தரமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ( )
3. ஒரு ஆண் தனது மனைவியுடன் அவளது சகோதரியையும் திருமணம் செய்து கொள்வது பிழையாகாது. ( )
4. குடும்ப உறவுமுறை மூலம் தடையாவோர் பால்குடி உறவு மூலமும் தடையாவர். ( )
5. ஒரு பெண் தனது சகோதரியின் கணவனுடன் தனியாகப் பயணிப்பதில் தவறில்லை. ( )




# சமூகப் பணி செய்வோம்

மனிதன் ஒரு சமூக உயிரினம். அவனால் எல்லாத் தேவைகளையும் தனித்து நின்று நிறைவு செய்துகொள்ள முடியாது. அவன் எப்போதும் மற்றவர்களைச் சார்ந்து நிற்க வேண்டி யவனாகவே உள்ளான். மற்றவர்களின் உதவி, ஒத்தாசைகளை எதிர்பார்த்துள்ளான்.

இவ்வகையில் சமூகமாகச் சேர்ந்து வாழும் மனிதன் சில தனிப்பட்ட இபாதத்களை மட்டும் நிறை வேற்றுவதோடு நின்றுவிடுவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அவன் ஈருலகிலும் வெற்றிபெற வேண்டுமென்றால் பிறர் நலனில், தான் சார்ந்துள்ள சமூக நலனில் அதிகம் அக்கறையோடும் பொறுப்புணர்வோடும் நடந்துகொள்ள வேண்டும் என அது எதிர்பார்க்கின்றது. இவ்வகையில் சமூகப் பணி இஸ்லாத்தில் மிகவும் வலியுறுத்தப்படுகின்றது.

மக்களின் நலனுக்காகப் பிரதிபயுகாரங்களை எதிர்பார்க்காது தனியாகவோ, நிறுவன ரீதியாகவோ மேற்கொள்ளப்படுகின்ற சமூக நலத்திட்டங்களே சமூகப் பணிகள் எனப்படுகின்றன. இவை பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்படமுடியும். இப்பொதுப் பணிகளை இருவகையாகப் பிரித்து நோக்குவர்.

### சமூக சேவைகள் சில

1) பசித்தவர்களுக்கு உணவளித்தல்.

2) நீர் வசதி செய்துகொடுத்தல்.

3) நோய்வாய்ப்பட்டோருக்கு உதவுதல்.

4) ஏழைகள், விதவைகள், அநாதைகளுக்கு நேசக்கரம் நீட்டுதல்.

5) அநியாயம் இழைக்கப்பட்டோருக்கு உதவுதல்.

### சமுதாயப் பணிகள் சில


1) பள்ளிவாசல் கட்டுதல்.


2) பாடசாலைகள் அமைத்தல்.

3) நூலகங்கள் நிறுவுதல்.

4) சனசமூக நிலையங்களை உருவாக்குதல்.

5) மருத்துவ மனைகள் கட்டுதல்.






## அல் குர்ஆனும் பொதுப்பணியும்

பொதுப்பணி மற்றும் சமூகநலத் திட்டங்களில் ஈடுபடுவதை வலியுறுத்தி அல் குர்ஆனில் பல வசனங்கள் இடம்பெற்றுள்ளன.

***''...நீங்கள் நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்''. (5:2)***

***''....பிறருக்கு உதவியும் நன்மையும் செய்யுங்கள். நிச்சயமாக (பிறருக்கு) நன்மை செய்கிறவர்களை அல்லாஹ் நேசிக்கின்றான்'' (2:195)***

***''ஈமான் கொண்டவர்களே! நீங்கள் ருகூஉ செய்யுங்கள். ஸஜூத் செய்யுங்கள் உங்களது இரட்சகனுக்கு இபாதத் செய்யுங்கள். நல்ல காரியங்களில் ஈடுபடுங்கள். நீங்கள் வெற்றிபெறுவீர்கள்''. (22:77)***

*சமூக நலன் கருதிச் செய்யப்படுகின்ற நற்கருமங்கள் அனைத்தும் நல்லெண்ணத்துடனும் இறை திருப்தியை எதிர்பார்த்தும் ஒழுக்க விழுமியங்களைப் பேணியும் நிறைவேற்றப்படும் போது, இஸ்லாத்தில் இபாதத் ஆகக் கருதப்படுகின்றன. அல் குர்ஆன் பல இடங்களில் குறிப்பிடும்* ***பிர்*** *என்ற நன்மை பயக்கும் செயல்கள் என்ற விரிவான வட்டத்தில் அவை எல்லாம் அடங்குகின்றன. அத்துடன் சமூகநலன் பயக்கும் செயல்கள் அனைத்தும் இஸ்லாம் வலியுறுத்தும்* ***இமாரத்*** *எனும் பூமியை வளப்படுத்தும் உன்னத பணியோடும் தொடர்புடையன.*



## ஸுன்னாவும் பொதுப் பணியும்

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறுவயதில் இருந்தே பொதுப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டியுள்ளார்கள். நுபுவ்வத்துக்கு முன்னர் இடம்பெற்ற* ***ஹில்புல் புழூல்*** *எனும் சமூகநல அமைப்பை உருவாக்குவதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முக்கிய பங்கெடுத்தார்கள். மக்காவிலே யாருக்கும் அநியாயம் இழைக்கப்படக் கூடாது என்பதற்காக இவ்வொப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதேபோல் கஃபா புனருத்தாரனம் செய்யப்பட்டபோது ஏற்படவிருந்த பெரியதொரு குழப்பத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தலையிட்டு நிதானமாகத் தீர்த்துவைத்தார்கள். மக்கள் நம்பிக்கையோடு ஒப்படைத்த அமானிதப் பொருட்களைப் பெற்றுப் பாதுகாத்து உரிய நேரத்தில் அவர்களிடம் வழங்கி வைத்தார்கள். மஸ்ஜிதுன் நபவி நிருமானப் பணியில் கடுமையாக*

உழைத்தார்கள். இப்பொதுப் பணிகள் எல்லாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் தூதைப் எடுத்துச் சொல்வதற்குப் பெரும் துணையாக அமைந்தன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல தருணங்களில் சமூகப் பணி தொடர்பாக வலியுறுத்தியுள்ளார்கள்.

''உங்களில் எவருக்குத் தனது சகோதரனுக்குப் பயனளிக்க முடியுமாக உள்ளதோ அவர் அதனைச் செய்யட்டும்''. (முஸ்லிம்)

''அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்துக்குரிய மனிதன் பிறருக்குப் பயனுள்ளவன் ஆவான்'' (ஜாமிஃ அஸ் ஸகீர்)

இஸ்லாம் பிறருக்கு நன்மை பயக்கின்ற சிறுசிறு செயல்களைக் கூட (ஸதகா) தருமமாகக் கருதுகின்றது. பாதையில் இடையூறு விளைவிக்கும் ஒன்றை அகற்றுவது கூட ஸதக்கா என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள். (முஸ்லிம்)

## ஸஹாபாக்கள் வாழ்வில் பொதுப் பணி

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றி ஸஹாபாக்களும் அதிகம் சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். மதீனாவில் ரூமா என்ற யூதன் தனது கிணற்றிலிருந்து நீரை அதிக விலைக்கு விற்றுக்கொண்டிருந்தான். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''யார் ரூமாவின் கிணற்றை வாங்குகிறாரோ அவருக்கு சுவனம் உண்டு'' என்றார்கள். உடனே உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அக்கிணற்றை வாங்கி முஸ்லிம்களுக்கு வக்பு செய்தார்கள், பொதுச் சொத்தாக மாற்றினார்கள். இதுவே வரலாற்றில் **பிஃரு ரூமா** என வழங்கப்படுகின்றது. இதுபோன்ற பல சம்பவங்களை நாம் ஸஹாபாக்கள் வாழ்வில் காணமுடியும்.

ஸஹாபாக்களைத் தொடர்ந்து வந்தவர்களும் கிணறு வெட்டுதல், பாதை அமைத்தல், செப்பனிடல், தங்குமிடங்கள் அமைத்தல், கால்வாய்கள் அமைத்தல், தரிசு நிலங்களை வளப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு சமூகநலப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். உண்மையில் இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் பொதுப் பணிகளின் எல்லை மிக விரிவானது. சுருங்கக் கூறின் சமூகத்துக்குப் பயன் அளிக்கும் அனைத்து செயற்பாடுகளும் பொதுநலப் பணிகள் எனலாம். நாம் பொதுப்பணி செய்யும்போது இன, மத வேறுபாடுகளைக் கடந்து செயற்பட வேண்டும். இதனையே இஸ்லாம் வரவேற்கின்றது. ஒருநாட்டைக் கட்டியெழுப்புவதில் இது மிகவும் முக்கியமானது.

**எனவே நாமும் எம்மால் முடியுமான வகையில் பொதுப் பணிகளில் பங்கெடுப்போம். எந்த சுய இலாபங்களையும் எதிர்பார்க்காது இதய சுத்தியோடு பணிசெய்வோம். இதன் மூலம் அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக்கொள்வதோடு எமது நாட்டைக் கட்டியெழுப்புவோம்.**

பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

بِرٌّ      عِمَارَةٌ      حِلْفُ الْفُضُوْلِ

**பயிற்சி**

1. சமூக சேவை என்பதன் மூலம் நீங்கள் விளங்கிக்கொள்வது யாது?
2. சமூக சேவைகளுக்கு உதாரணம் ஐந்து குறிப்பிடுக.
3. பொதுப் பணி தொடர்பான ஒரு அல் குர்ஆன் வசனத்தையும் ஒரு ஹதீஸையும் எழுதிக் காட்டுக.
4. ஸஹாபாக்களின் வாழ்விலிருந்து பொதுப் பணியுடன் தொடர்பான ஒரு நிகழ்வைக் குறிப்பிடுக.
5. பொதுப் பணிகள் செய்வதால் கிடைக்கும் ஈருலகப் பயன்கள் இரண்டைக் குறிப்பிடுக.



# 30

# பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம்

மாணவன் ஸமி ''பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம்'' என்ற தலைப்பில் மாணவர் மன்றத்தில் அழகியதோர் உரையை நிகழ்த்தினான். அதனை நாமும் ஒருமுறை கேட்டுப்பார்ப்போமா?

மதிப்புக்குரிய ஆசிரியர்களே, சகோதர சகோதரிகளே,

இன்று நான் உங்கள் முன்னிலையில் ''பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம்'' என்ற தலைப்பில் சிறியதோர் உரையை நிகழ்த்த முன்வந்துள்ளேன். மக்களிடையே சுயநலப் பண்புகள் அதிகரித்து வருகின்ற இக்காலப் பகுதியில் இத்தலைப்புப் பற்றிப் பேசுவது மிகமிக அவசியமானது என நான் கருதுகின்றேன்.

அன்பின் நண்பர்களே, சகோதரர்களே!

பொதுச் சொத்து என்றால் என்ன? தனிமனிதர்களால் அல்லது குழுக்களால் வக்பு (தர்மம்) செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் எல்லாம் பொதுச் சொத்துக்கள் எனப்படுகின்றன. இவை அனைத்தும் தனியொருவரது பாவனைக்குரியவை அல்ல. மக்களின் பொது நலன் கருதி உருவாக்கப்பட்டவை. பாடசாலைகள், பள்ளிவாசல்கள், மருத்துவ மனைகள், நூலகங்கள், பொதுக் கிணறுகள், பொது மலசல கூடங்கள், பொதுப் போக்குவரத்துச் சாதனங்கள், பாதைகள், வாகனத் தரிப்பிடங்கள், பூங்காக்கள், மையவாடிகள், மற்றும் இயற்கையாக அமைந்துள்ள கடற்கரைகள், காடுகள், ஆறு, குளங்கள் போன்ற அனைத்தும் பொதுச் சொத்துக்கள் என்பதில் அடங்குகின்றன.

இச்சொத்துக்களை நாம் எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். எமது வீட்டிலே எமக்குச் சொந்தமான பொருட்கள், சொத்துக்களைப் பயன்டுத்தும்போது நாம் செலுத்தும் கவனமும், பாதுகாப்பு உணர்வும், பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தும்போது எமக்கு வருகின்றதா? எமது வீட்டில் உள்ள ஒரு பொருள் சேதமடையும் போது எமக்கு ஏற்படும் கவலையும் வருத்தமும் எம்மால் ஒரு பொதுச் சொத்து சேதமடையும் போது ஏற்படுகின்றதா? எமது வீட்டில் உள்ள பொருட்களை அழகாகவும் நேர்த்தியாகவும் வைப்பதில் நமக்கு உள்ள ஆர்வமும் தேவையும் பொதுச் சொத்துகள் விடயத்தில் வருகின்றதா? எமது மனசாட்சியைக் கேட்டுப் பார்ப்போம். உண்மையில் நாம் பொதுச் சொத்துக்கள் விடயத்தில் கவனயீனமாக, பொடுபோக்காக அல்லவா இருக்கின்றோம்? எமது மனப்பாங்கு மாறவேண்டும் அல்லவா?

*அன்பின் நண்பர்களே, சகோதரர்களே!*

இஸ்லாம் வெறுமனே கிரியைகளும் சடங்குகளும் மாத்திரம் கொண்ட மார்க்கம் அல்ல. அது முழு வாழ்க்கைக்குமான வழிகாட்டி என்பதை அறிந்துள்ளோம். இவ்வகையில் எமது மார்க்கம் பொதுச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பாகப் பல இடங்களில் எமக்கு அறிவுரை கூறியுள்ளது. மனிதன் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் போன்றே மற்றைய மனிதர்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் உள்ளன. அவற்றுள் முக்கியமான ஒன்று, எல்லோரும் பயன்படுத்தும் பொதுச் சொத்துக்களைக் கவனமாகப் பயன்படுத்துவதும் பாதுகாப்பதுமாகும். நாம் அவற்றை நல்லமுறையில் பயன்படுத்துவதோடு பிறரையும் அதன்பால் தூண்டவும் கடமைப்பட்டுள்ளோம். அல்லாஹ் எங்களை நோக்கி இவ்வாறு கூறுகின்றான்.

***''...நன்மையான விடயங்களிலும் இறைவனைப் பயந்துகொள்ளும் விடயங்களிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளுங்கள்...'' (5:2)***

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.

''நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். உங்கள் பொறுப்பு பற்றி நிச்சயம் நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்'' (முஸ்லிம்)

இதன்படி நாம் உலகில் எவற்றையெல்லாம் பயன்படுத்துகின்றோமோ அவை பற்றியெல்லாம் மறுமையில் விசாரிக்கப்படுவோம். பள்ளி வாசல்களில் எவ்வாறு புனிதமாக நடந்துகொண்டோம், பாடசாலையை எப்படிப் பேணிப் பாதுகாத்தோம், விளையாடும் மைதானத்தை எப்படி வைத்திருந்தோம், பொது வாகனங்களை எவ்வாறு பாதுகாத்தோம், மருத்துவமனைகளில் எவ்வாறு நடந்துகொண்டோம், இன்னும் பல்வேறு பொது இடங்களை எப்படிப் பயன்படுத்தினோம் என எத்தனையோ கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கவேண்டும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் தோழர்களிடம் ''நீங்கள் சபிக்கப்படும் இருவரை விட்டும் எச்சரிக்கையாக இருங்கள்'' என்றார்கள். அதற்கு அத்தோழர்கள், ''இறைதூதரே யார் அந்த இருவரும்?'' என வினவினார்கள்.

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''அவர்கள் தாம் மக்கள் பயணிக்கும் பாதையில் அல்லது நிழல்தரும் இடங்களில் சிறுநீர் கழிப்பவர்கள்'' என்றார்கள். (முஸ்லிம்)

பொது இடங்களை அசிங்கப்படுத்துவதை சாபத்துக்குரிய ஒன்றாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியுள்ளதைப் பாருங்கள். இன்று மக்கள் தமது ஓய்வுக்காகச் செல்கின்ற பொது இடங்களை அழுக்கான பொருட்களாலும் அநாகரிகமான நடத்தைகளாலும் நாசம் செய்வதை நீங்கள் பல முறை கண்டிருப்பீர்கள். இவை எல்லாம் இஸ்லாத்தின் பார்வையில் மிகவும் கண்டிக்கத்தக்கவை. பெரும் தண்டனைகளைப் பெற்றுத்தருபவை.

பொதுச் சொத்துக்களுக்கு அநியாயம் செய்வதும், அவற்றைத் திருடுவதும் மிகப் பெரும் குற்றமாகும். நம்மில் சிலர் பிறருடைய பொருளை, சொத்தைத் திருடுவதைப் பெரும்பாவமாகக் கருதியபோதும், பொதுச் சொத்து ஒன்றை துஷ்பிரயோகம் செய்வதை அப்படிக் கருதுவதில்லை. தனி மனிதனுடையதாயினும், நிறுவனத்துடையதாயினும், அரசாங்கத்துடையதாயினும் ஒரு பொருளை உடமையாக்கிக்கொள்வது திருட்டு என்பதை நன்கு உணரவேண்டும். உண்மையில் பொதுச் சொத்தைத் திருடுவது, துஷ்பிரயோகம் செய்வது ஏனையவற்றை விட மிகப் பாரதூரமான பாவமாக அமைந்துவிடுகின்றது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போராட்டங்களின் போது கூட பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்துவதைத் தடுத்துள்ளார்கள். பிறமதக் கோயில்களையும் கட்டடங்களையும் பயன்தரு மரங்களையும் சேதப்படுத்த வேண்டாம் என அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பயிற்றுவித்த ஸஹாபாக்களும் அவர்களைத் தொடர்ந்து வந்தவர்களும் பொது நிதியை, பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்துவதில் எவ்வளவு பேணுதலாக நடந்துகொண்டார்கள் என்பதைச் சற்றுக் கேளுங்கள்.

கலீபா அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவி ஒருமுறை வழமை போல் உணவு பரிமாறினார். உணவோடு இனிப்புப் பண்டமும் அப்போது வைக்கப்பட்டிருந்தது. இதனைக் கண்ட அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வியப்படைந்து, ''இனிப்புப் பண்டம் செய்வதற்கான பணம் எப்படிக் கிடைத்தது?'' என தன் மனைவியிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள், ''குடும்பச் செலவுக்காக திறைசேரியில் இருந்து வழங்கப்பட்ட பணத்திலிருந்து சிறுகச் சிறுகச் சேமித்து இவ் இனிப்புப் பண்டம் செய்தேன்'' என்றார்கள். அப்போது பதற்றமடைந்த கலீபா அவர்கள், ''என்ன? நமக்கு அளிக்கப்படும் மக்கள் பணத்திலிருந்து மிச்சப்படுத்திச் செய்த இனிப்புப் பண்டமா இது? நாம் இன்னமும் வசதியுடன் வாழ்கின்றோம் போலுள்ளது. எமக்குத் தேவைக்கு அதிகமாக அரச பணம் கிடைக்கின்றதைத் தான் இது காட்டுகின்றது'' என்றார்கள். உடனே திறைசேரி அதிகாரிக்குத் தனது ஊதியத்தைக் குறைக்குமாறு உத்தரவிட்டார்கள்.

ஒரு முறை கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நோய்வாய்ப் பட்டிருந்தார்கள். அவருக்கு சிகிச்சையளிக்கத் தேன் தேவைப்பட்டது. பல இடங்களில் தேடிப் பார்த்தும் சிறிதேனும் தேன் கிடைக்கவில்லை. கலீபா தொழுது முடிந்ததும் தனது தேவையைக் கூறினார்கள். திறைசேரியில் இருந்து தனது சிகிச்சைக்காகச் சிறிது தேனைப் பெற்றுக்கொள்ள அனுமதியளிக்குமாறு மக்களிடம் கோரினார்கள். இதைக் கேட்ட மக்கள் திகைத்துப் போனார்கள். அவர்களது உள்ளங்கள் உருகிப்போயின.

ஒருமுறை கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களைச் சந்திக்க தூர பிரதேசங்களில் இருந்து சில தூதுவர்கள் இரவு நேரத்திலே வந்தனர். உறங்கத் தயாராக இருந்த கலீபா வந்தவர்களை சந்தித்துப் பேச அனுமதியளித்தார்கள். அத்தூதுவர்கள் கலீபாவின் வீட்டுக்குள் வருகை தந்தார்கள். அப்போது கலீபா ஒரு விளக்கை மூட்டினார்கள். பின் வருகை தந்த தூதுவர்களின் பிரதேசம் பற்றியும் அப்பகுதி மக்கள் பற்றியும் விரிவாக விசாரிக்கத் தொடங்கினார்கள். வந்தவர்களும் தமது மக்களது பிரச்சினைகள் பற்றியெல்லாம் பேசினார்கள்.

பின்னர் அத்தூதுவர்கள், ''அமீருல் முஃமினீன் அவர்களே உங்களது சுக துக்கங்கள் எப்படி? உங்கள் குடும்ப நிலை எப்படி?'' என விசாரிக்கத் தொடங்கினார்கள். அப்போது உடனே கலீபா எரிந்துகொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டு வேறொரு விளக்கைப் பற்ற வைத்தார்கள். அங்கே வந்தவர்கள் கலீபாவின் இச்செயலுக்கான காரணத்தை வியப்போடு கேட்டார்கள். அதற்கு கலீபா அவர்கள், நான் உங்களோடு நாட்டு மக்களதும், பொதுமக்களதும் நிலை பற்றிப் பேசியபோது பொதுத் திறைசேரி மூலம் பெற்ற விளக்கினை ஏற்றியிருந்தேன். நீங்கள் எனது நிலைபற்றியும் குடும்ப நிலை பற்றியும் விசாரித்த போது அதனை அணைத்துவிட்டு எனது சொந்த விளக்கை ஏற்றிவிட்டேன் என்றார்கள்.

அன்பின் சகோதரர்களே, எமது முன்னோர்கள் பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்துவதில் எவ்வளவு கவனமாக நடந்துகொண்டார்கள் என்பதைப் பாருங்கள். பொதுச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாக்கும் விடயத்தில் அதிகம் அக்கறை காட்டவேண்டிய நிலையில் உள்ளோம். பொது இடங்களில் நாம் நடந்துகொள்ளும் முறையை அவதானித்துத்தான் நாம் பின்பற்றும் மார்க்கத்தை பிறசமயத்தவர்கள் எடைபோடுகின்றனர். அவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் உணர்வு வராத வரை நாட்டுப்பற்றும் எம்மிடம் வராது. பொதுச் சொத்துக்கள் பற்றிய எதிர்மறையான மனப்பதிவை மாற்றிக்கொள்ள வேண்டும். எமது கவனயீனத்தை, அசிரத்தையை நீக்கிப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். எம்மில் ஒருவர் பொது இடத்தில் குப்பைகளைக் கொட்டும்போது நான் மட்டும் கொட்டுவதால் ஒன்றும் நடந்துவிடப் போவதில்லை என நினைக்கக் கூடாது. இப்படி ஒவ்வொருவரும் நினைத்து ஆயிரம்பேர் கொட்டினால் முழு ஊரும் நாறிப் போய்விடும் அல்லவா?

**எனவே, என் இனிய நண்பர்களே,**

**பொதுச் சொத்துக்கள் தொடர்பாக அதிகம் கவனம் செலுத்துவோம். அவற்றை எமது சொந்த சொத்தாக எண்ணிப் பாதுகாப்போம். அடுத்த தலைமுறையினரும்**

***பயன்பெறும் வகையில் அதனை அமானிதமாக ஒப்படைப்போம். அதன்மூலம் பிறர் மத்தியில் முஸ்லிம்களைப் பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்துவோம். இவ்வுலகிலும் மறுமையிலும் அல்லாஹ்வின் திருப்தியும் அன்பும் பெறுவோம்.***

### பயிற்சி

*1. பொதுச் சொத்து என்றால் என்ன?*

*2. பொதுச் சொத்துக்களை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்?*

*3. பொதுச் சொத்துக்களை நாசம் செய்வதால் ஏற்படும் விளைவுகள் யாவை?*

*4. பொதுச் சொத்துக்கள் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஒரு ஹதீஸை எழுதிக் காட்டுக.*

*5. எமது முன்னோர்கள் பொதுச் சொத்துக்கள் விடயத்தில் எவ்வாறெல்லாம் பேணுதலாக இருந்தார்கள் என்பதற்கு இரு உதாரணங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.*

### செயற்பாடு

''பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம்'' எனும் வாசகம் தாங்கிய பதாதைகளை பாடசாலையின் பல்வேறு இடங்களில் காட்சிப்படுத்துங்கள்.